₹10

fmpb

# அறைகூவல்

Volume 56

Issue 1

January 2026

*"...பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்;
நீ என்னுடையவன்" ஏசாயா 43:1.*

# அழைப்பு

## உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்



# ஆரம்ப வரிகள்...



## அழைக்கப்பட்டவர்கள்

சார்லஸ் ஸ்பர்ஜன் என்ற தேவ மனிதன் இவ்வாறு கூறுகிறார்: “தேவன் உன்னை தனது ஊழியக்காரனாக அழைப்பாரானால் நீ ராஜாவாகும்படி உன் தரத்தைத் தாழ்த்தாதே”. தேவனின் அழைப்பானது உலக அந்தஸ்து அல்லது செல்வத்தைவிட உன்னதமான மதிப்பைக் கொண்டது. ஏனென்றால் உண்மையான மகத்துவம் பூமிக்குரிய கிரீடங்களில் அல்ல மாறாக தேவனுடைய நோக்கத்திற்கு உண்மை யாய் இருப்பதிலேயே உள்ளது. இதுவே நமது இயக்கத்தின் பல்வேறு நிலைகளில் கர்த்தருக்கு மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்து வரும் நமது ஊழியர்கள் பலரின் சாட்சியாகும். தேவன் அவர்களை அழைத்த போது சிலர் ஆசிரியர்களாகவும், சிலர் அரசாங்க பணிகளிலும், சிலர் உயர் கல்வி கற்றவர்களாகவும், சிலர் நல்ல நிலையில் குடியேறியவர்களாகவும் இருந்தனர். ஆனால் பிலி.3:8இல் அப்போஸ்தலன் பவுல் கூறுவதுபோல், எல்லாவற்றையும் குப்பையாக கருதி அதை உதறிவிட்டு தேவனுக்கு கீழ்ப்படிந்துள்ளனர். வேதத்தில் தேவன் சாமுவேல், மோசே, மரியாள், பவுல் போன்ற பலரை அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைத்தார். இந்த அழைப்புகள் தனி நபர்களுக்கும், தேசங்களுக்கும் உரியவைகளாக இருந்தன. ஏசாயா 43:1இல் **நான் உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்** என்று கர்த்தர் இஸ்ரவேல் மக்களை சொந்தம் கொண்டாடுகிறார். அவர்களை மீட்டு, பேர் சொல்லி அழைத்தவர் இவ்வண்டசராசரங்களையும் படைத்த படைப்பின் நாயகர். அவ்வாறு அழைப்பினை கொடுத்தது மாத்திர மல்லாமல், அவர்களை எதற்காக அழைத்தார் என்பதை ஏசாயா 43:1-14 வசனங்களில் வாசிக்கலாம்.

**1. ஒரு தனிப்பட்ட அழைப்பு (வச.1-2):** ஒருவேளை இது முழு இஸ்ரவேல் மக்களை அவரிடம் திருப்ப, மனந்திரும்ப மற்றும் மறுவாழ்வு அருளுவதற்கான அழைப்பாயிருந்தாலும் இது ஒரு தனிப்பட்ட அழைப்பே ஆகும். அவ்வாறு அழைத்து அவர்களுக்கு தம்முடைய வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். வாக்குப் பண்ணினவர் மாறாதவர் என்பதை இஸ்ரவேலர் தங்கள் முற்பிதாக்களின் வாழ்விலிருந்து அறிந்து அனுபவித் திருந்தனர்.

**2. ஒரு புதிய அடையாளத்தைக் கொடுக்க (வச. 4):** ஏசாயா புத்தகத்தின் முன்பகுதியில் இஸ்ரவேலரின் பாவங்களைக் குறித்தும், அதற்கான தண்டனைகளைக் குறித்தும் வாசிக்கிறோம். இஸ்ரவேலர் தங்களின் தனித்துவத்தையும் மற்றும் அடையாளத்தையும் இழந்து நின்றதை அறிந்திருக்கிறோம். ஆனால் தேவன் இங்கு கிருபையாக அவர்களுக்கு ஒரு புதிய அடையாளத்தைக் கொடுக்கிறார். அவர்கள் அவருடைய பார்வைக்கு அருமையானவர்கள் (Precious), கனம்பெற்றவர்கள் (Honoured) மற்றும் அவரால் சிநேகிக்கப்பட்டவர்கள் (Loved) என்பதே ஆகும்.

**3. ஒரு புதிய நாமத்தை கொடுக்க (வச. 7):** அவருடைய நாமத்தை கொடுத்து இருக்கிறார். இதை 2 நாளாகமம் 7:14லிலும் வாசிக்கலாம். அவர் நாமத்தை தரித்திருக்கிறோம் என்றால் அது நாம் அவரின் பிள்ளை என்ற அந்தஸ்தாகும். அவர் பிள்ளை என்பது நமக்கு ஒரு பொறுப்பையும், பலனையும், அடையாளத்தையும் தருகிறது.

**4. ஒரு பணியை பணித்திட (வச. 8):** அடிமைகளாகிய நம்மை மீட்டு, மீட்பிற்காக அலைந்து திரிந்து கொண்டிருக்கும் லட்சோபலட்ச மக்களை மீட்பின் பாதையில் நடத்திட இம்மாதூயப் பணிக்கு நம்மை அழைத் திருந்தாலும், அவரே நம்மோடிருந்து காரியங்களை நடப்பிக்கிறார் (வச. 5-14). அவரின் அழைப்பைப் பெற்ற நாம் நம்மை அவரிடம் முழுமையாக ஒப்படைக்கும்போது அவர் கரத்திலுள்ள கூர்மையான ஆயுதங்களாக நம்மை பயன்படுத்துவார்.

**5. ஒரு சாட்சியாக நிறுத்த (வச. 10-12):** அவர் நம் வாழ்வில் யார் என்றும், நம்மை அழைத்தவர் இன்னார் என்பதையும் உணர்ந்து, அறிந்து, விசுவாசித்தால் மாத்திரமே அவருக்கு நாம் சாட்சியாக இருக்க தகுதிபெற முடியும். நம்மை அழைத்த தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நம் வாழ்வின் மூலம் பிறருக்கு சாட்சிப் பகர எதிர்பார்க்கிறார்.

இப்படிப்பட்ட அழைப்பையே நமது இயக்கத்திற்கு தேவன் இவ்வருடம் தந்துள்ளார். **அழைப்பு - பெயர் சொல்லி அழைப்பு** - 2026ஆம் ஆண்டு தொடக்கத்தில் நிற்கும் நமக்கு இவ்வழைப்பை தேவன் கொடுக்கிறார்.

**- மெர்சி செல்வின்**
*(தகவல் தொடர்புத்துறை)*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது ஊழியம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு நற்செய்தி பணி இயக்கம். இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்வதே இதன் பிரதானப் பணி.

இந்திய திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப் பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.

இணைந்திடுங்கள்.
பிறரை அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


**அறைகூவல்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**

**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

பொதுச்செயலாளர்: விஜய் பிரசன்னா ஐசக்

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

தனிப்பிரதி ரூ.10/-
ஆண்டு சந்தா ரூ.48/-
ஆயுள் சந்தா ரூ.500/-



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# 2026 பொதுச்செயலாளரிடமிருந்து...

அன்புக்குரிய ஜெபப் பங்காளர்களே! மற்றும் தேவனுடைய ஊழியத்தில் உடன் உழைப்பவர்களே!

கடந்த வருட ஊழியப் பயணத்தில் எங்களை வழிநடத்திய அவருடைய மாறாத கிருபைகளுக்காக தேவனைத் துதிக்கிறோம். மகிழ்ச்சி மற்றும் சவால்கள், செழிப்பு மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் நிறைந்த காலங்களில் கர்த்தர் எங்களுக்கு முன்பாகச் சென்று, தமது கிருபையால் எங்களைத் தாங்கி, எங்கள் பலத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் தமது நோக்கங்களை நிறைவேற்றினார். அவருடைய கிருபையினாலேயே நாங்கள் அவருடைய நன்மைகளுக்கு உயிருள்ள சாட்சிகளாக நின்று, மற்றொரு புதிய ஆண்டிற்குள் வழிநடத்தப்பட்டுள்ளோம்.

அவருடைய சர்வ வல்லமையுள்ள கரத்தின் கீழ் இந்த புதிய வருடத்திற்குள் நாங்கள் அடியெடுத்து வைக்கும்போது, ஆழ்ந்த நன்றியுடனும், ஜெபத்தின் மீதான புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனும் இதை எழுதுகிறேன். **ஊழியத்தில் ஒவ்வொரு முன்னேற்றமும் மனித ஞானத்தினாலோ அல்லது வளங்களினாலோ நிலைநிறுத்தப்படவில்லை, மாறாக தேவனுடைய மக்களின் உண்மையுள்ள பரிந்து பேசுதலினாலேயே நிலைநிறுத்தப்படுகிறது.** கர்த்தரின் பணியை நாங்கள் செய்யும்படிக்கு எல்லாவற்றிற்கும் பின்னால் உங்கள் ஜெபங்கள் அமைதியானதும் அதே சமயம் சக்தி வாய்ந்ததுமான பலமாக இருந்துள்ளன.

நாம் ஒரு புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்கும்போது, கர்த்தருடைய சத்தம் ஆழ்ந்த உறுதியுடனும், புதுப்பிக்கப்பட்ட அடையாளத்துடனும் நம்மைச் சந்திக்கிறது. நிச்சயமற்றதன்மை நிறைந்த மாறிவரும் உலகில், தேவன் தம்முடைய மக்களுக்கு காலத்தால் அழியாத சத்தியத்தை கூறுகிறார். **“நான் உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்”** (ஏசா. 43:1). இது வெறும் ஆறுதலான வாக்குறுதி மட்டுமல்ல–இது சொந்தம், நோக்கம் மற்றும் ஊழியம் ஆகியவற்றின் ஒரு தெய்வீகப் பிரகடனமாகும்.

## நம்மை தனிப்பட்ட முறையில் அழைத்து, நம்பிக்கையுடன் அனுப்பும் ஒரு தேவன்

நம்மை பேர்சொல்லி அழைக்கும் தேவனே, தம்முடைய அறுவடைப் பணிக்கு நம்மை அனுப்புகிறார். நமது அழைப்பு தனிப்பட்டதாகவும், ஊழிய நோக்கம் கொண்டதாகவும் இருக்கிறது. கடந்த ஒரு மாதமாக பணித்தளங்களிலும், முன்னேற்றப்பணி மூலமாகவும் நமது கிறிஸ்துமஸ்

கீதபவனி வழியாகவும் இந்த உண்மை அழகாக வெளிப்பட்டதை நாங்கள் கண்டோம்.

கிராமங்கள், நகரங்கள், நிறுவனங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் கிறிஸ்துமஸ் கீதங்களும், கீத ஆராதனைகளும் **இம்மானுவேல்** – தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதற்கு உயிருள்ள சாட்சிகளாக மாறின. இந்தக் கூடுகைகள் வெறும் பருவகால நிகழ்ச்சிகளாக மட்டுமல்லாமல், நற்செய்தி பாடப்பட்ட, பகிரப்பட்ட மற்றும் காணப்பட்ட ஊழிய சந்திப்புகளாகவும் இருந்தன. சவால்களுக்கு மத்தியில் மகிழ்ச்சியோடும், உண்மையோடும், தியாகத்துடன் சேவை செய்த நமது ஊழியர்கள், தலைவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் மக்களை திரட்டியவர்களுக்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். உண்மையாகவே பேர்சொல்லி அழைக்கப்பட்டவர்கள் ஒரு நோக்கத்துடன் அனுப்பப்படுகிறார்கள்.

## மீட்கப்பட்ட மக்களே விசுவாசத்தில் முன்னோக்கிச் செல்பவர்கள்

‘‘பயப்படாதே; நான் உன்னை மீட்டுக்கொண்டேன்’’ என கர்த்தர் கூறுகிறார். பொறுப்புகளும், எதிர்பார்ப்புகளும் நிறைந்த ஒரு புதிய ஆண்டிற்குள் நாம் அடியெடுத்து வைக்கும்போது, இந்த மீட்பு நம்மை நிலைநிறுத்துகிறது. நமது கடந்த காலம் நம்மை சிறைப்படுத்துவதில்லை. அவருடைய மீட்பு நம்மை முன்னோக்கி நடத்திச் செல்லுகிறது. நாம் அவருக்கு சொந்தமானவர்கள் என்பதால், நமது எதிர்காலத்தை பயத்துடன் அல்ல, அவருடைய வழிநடத்துதலின் மீதான நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறோம்.

இந்த ஆண்டைத் தொடங்கும்போது, பல முக்கியமான கூட்டங்களும், நிகழ்ச்சிகளும் நமக்கு முன்னால் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தேவனுடைய மக்களை பலப்படுத்தவும், அடுத்த தலைமுறையை வளர்க்கவும், தேவனுடைய ஊழியப்பணியுடன் நம்மை புதிதாக இணைத்துக்கொள்ளவும் ஒரு வாய்ப்பைத் தருகிறது. வரும் நாட்களில் கர்த்தர் எங்களை ஊழியத்தின் முக்கியமான தருணங்களுக்கும், தேவ சித்தத்தை அறிந்துகொள்ளும் நிலைகளுக்கும் வழிநடத்தும்போது நீங்கள் தொடர்ந்து எங்களுக்காக ஜெபத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- நமது மத்திய மண்டல மிஷனெரிகளின் குடும்பக் கூடுகைக்காக உருக்கமாக ஜெபித்துக்கொள்ளுங்கள். முன்னணிப் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு தேவன் அவர்களது பெலனை புதுப்பித்து, மகிழ்ச்சியை மீட்டெடுத்து, அவர்களுக்குள் ஐக்கியத்தை ஆழப்படுத்தவேண்டும்.
- சோழிங்கநல்லூர் மற்றும் திருவள்ளூரில் பொங்கல் விடுமுறை நாட்களில் நடைபெறும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள். இதன் மூலம் இளம் உள்ளங்கள் கிறிஸ்துவால் சந்திக்கப்பட்டு, அவருடைய அழைப்பிற்கு கீழ்ப்படிதலுடனும், தைரியத்துடனும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

- ஜனவரி 18 அன்று திருச்சியில் நடைபெறும் தமிழ்நாடு முன்னேற்றப்பணி-மத்திய மண்டல தலைவர்கள் கூட்டத்திற்காக ஜெபியுங்கள். தேவன் ஞானத்தையும், ஐக்கியத்தையும், தெளிவான வழிக் காட்டுதலையும் வழங்கவேண்டும்.
- ஜனவரி 24-26 வரை குஜராத்தில் நடைபெறும் பொன்விழா கொண் டாட்டத்திற்காகவும் உங்கள் ஜெபங்களை நாடுகிறோம். நன்றி பெருக்கெடுப்புடன் தேவனுடைய பணிக்காக புதிய அர்ப்பணிப்பும் பிறக்கவேண்டும்.
- இறுதியாக 2026 தேசிய திட்டமிடல் மாநாட்டிற்காகவும் ஜெபியுங்கள். ஒவ்வொரு திட்டமும், தீர்மானமும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருந்து பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படவேண்டும்.

இந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றும், தேவன் தனி நபர்களை அழைப்பது மட்டுமல்லாமல், ஒரு ஊழிய சமுகத்தை அதாவது அவருக்கு சொந்தமான ஒரு சமுதாய மக்கள் கூட்டத்தையும், கீழ்ப்படிதலில் ஒன்றாக நடப்பவர்களையும் உருவாக்குகிறார் என்பதை நினைவூட்டுகின்றன. நீங்கள் ஜெபிக்கும்போது தேவனு டைய வார்த்தையிலிருந்து வரும் இந்த வாக்குத்தத்தத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். **நான் உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னு டையவன்.** தேவனால் அழைக்கப்பட்ட மற்றும் மீட்கப்பட்ட மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அவருடைய முகத்தைத் தேடுவோம். மேலும் கனிநிறைந்த மற்றும் தேவனை மகிமைப்படுத்தும் புதிய ஆண்டிற்குள் நம்மை வழிநடத்தும்படி அவரை நம்புவோம்.

இந்த புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் புதுப்பிக்கப்பட்ட அடையாள உணர்வுடனும், நிச்சயத் துடனும் நடக்கவேண்டும் என்பதே என் ஜெபம். உங்களைப் பேர்சொல்லி அழைக்கும் கர்த்தர் உங்கள் விசுவாசத்தை பலப்படுத்தி, உங்கள் அடிகளை ஸ்திரப்படுத்தி, உங்கள் கைகளின் வேலையை செழிக்கச் செய்வாராக! உங்கள் வீடுகள் அவருடைய சமாதானத்தால் நிரப்பப்படட்டும். உங்கள் சேவை மகிழ்ச்சியால் நிறைந்திருக்கட்டும். உங்கள் சாட்சி பரிசுத்த ஆவியானவரால் வல்லமை பெறட்டும்.

**நீ என்னுடையவன்** என்று அன்புடன் சொல்லும் கர்த்தரால் நாம் மீட்கப் பட்டவர்கள், அழைக்கப்பட்டவர்கள் மற்றும் சொந்தம் கொண்டாடப்பட்ட வர்கள் என்பதை முழுமையாக அறிந்து, பயமின்றி, விசுவாசத்துடன், பலமுள்ளவர்களாக நாம் அனைவரும் ஒன்றாக முன்னேறிச் செல்வோம். கிறிஸ்துவை மையமாக கொண்டதும், கனி நிறைந்ததுமான புத்தாண்டு அமைய ஜெபத்துடன் கூடிய வாழ்த்துக் களையும், ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்கிறேன்.

நன்றியுடனும் நம்பிக்கையுடனும்

கிறிஸ்துவில் உங்கள் உடன் ஊழியன்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**

# தலைவரின் கழகம்



அன்பு நண்பர்களுக்கு,

2026ஆம் புதிய ஆண்டிற்குள் நாம் நுழையும் வேளையில் நன்றியுணர்வோடு நம் குரல்களை உயர்த்தி **உமது உண்மை பெரிதல்லவோ** ('Great is thy faithfulness') என்று பாட விரும்புகிறோம். உங்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் ஆசீர்வாதமான புத்தாண்டு 2026 அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், **உங்கள் வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு அளவிடுகிறீர்கள்?** என்னை விடப் பெரிய ஒன்றை இந்த உலகிற்கு நான் விட்டுச் செல்ல முடியுமா? என்று நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய தகுந்த தருணம் இதுவாகும். மற்றவர்கள் சிறந்த மனிதர்களாக மாற உதவும் ஒன்றையா? மக்கள் தேவனையும், பரலோக அறநெறிகளையும் அறிந்துகொள்ள உதவும் ஒன்றையா? பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காமல் சமூகத்திற்கு நான் திருப்பித் தரக்கூடிய ஒன்றையா? அந்த இலக்கை நான் அடைகிறேனா என்பதை எவ்வாறு அளவிடுவேன்?

தன்னுடைய 35-வது வயதிலேயே நோபல் அமைதிப் பரிசு பெற்ற **டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்** அவர்கள், வாழ்க்கையின் மிகவும் பொருத்தமான மற்றும் அவசரமான கேள்வி "**மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**" என்பதுதான் என்று கூறினார்.

- ஒரு நாடு பலவீனமானவர்களைக் கவனிக்கும்போது அது வலிமை பெறுகிறது.
- ஏழைகளைப் பராமரிக்கும்போது அந்த நாடு செல்வந்த நாடாகிறது.
- பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்களைக் கவனிக்கும்போது, அந்த நாடு யாராலும் வெல்ல முடியாததாகிறது.
- மக்களின் வாழ்க்கையில் தார்மீக மற்றும் ஆன்மீக அறநெறிகளைக் கொண்டு வரும்போது அந்த நாடு மேன்மையானதாகிறது.

இதைத்தான் FMPB நாடு முழுவதும் செய்து வருகிறது. பரலோக அறநெறிகளைக் கொண்டு தேசத்தை உருமாற்றுவதில் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம்.

உங்கள் வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு அளவிடுவீர்கள்?

1. நீங்கள் எதற்காக நிற்கிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள். பின்னர் எப்போதும் அதற்காகவே நில்லுங்கள். நேர்மை மற்றும் உண்மைக்காக நில்லுங்கள். பணிவு மற்றும் மேன்மைக்காக நில்லுங்கள். பரலோக அறநெறிகளுக்காக நில்லுங்கள். கடவுளுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக குற்றமற்றவர்களாக நில்லுங்கள். நேர்மையாக நடவுங்கள், உண்மையைப் பேசுங்கள், அவதூறு பேசாதீர்கள், அண்டை வீட்டாருக்குத் தீமை

செய்யாதீர்கள், கடவுளின் மக்களைக் கனம் பண்ணுங்கள், (நஷ்டம் ஏற்பட்டாலும்) கொடுத்த வாக்கை நிறைவேற்றுங்கள், லஞ்சம் கொடுக்கவோ வாங்கவோ செய்யாதீர்கள்.

2. உங்கள் செல்வாக்கு, நட்பு, அன்பு, இரக்கம் அல்லது அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அவ்வாறு செய்யும்போது, நமக்கும் இழப்பு ஏற்படுவதில்லை மாறாக நாம் அதிகமாகப் பெறக்கூடும். இவை தார்மீக அல்லது ஆன்மீகப் பரிமாணத்தைக் கொண்ட நற்பண்புகள். நாம் எவ்வளவு அதிகமாகப் பகிர்ந்து கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நம்மிடம் அவை சேரும் என்ற அரிய பண்பு அவற்றுக்கு உண்டு. அறநெறி என்பது ஒத்துழைப்பிற்கான களம், அது போட்டிக்கானது அல்ல. இளைஞர்கள் IAS, IPS, IFS போன்ற பதவிகளை அடைய எந்தக் கட்டணமும் இன்றி எனது வாழ்க்கையையும் நேரத்தையும் முதலீடு செய்து அவர்களுக்கு உதவும்போது, அது பயனுள்ளது என்று நான் அறிவேன்.

3. எதையும் எதிர்பார்க்காமல் சமூகத்திற்குத் திரும்பக் கொடுங்கள். அதை அமைதியாகவும், இரகசியமாகவும் செய்யுங்கள். அப்போது பரலோகத்தில் உங்களுக்குப் பலன் கிடைக்கும். பள்ளி அல்லது கல்லூரிக்குச் செல்ல வசதியில்லாத குழந்தைகளுக்கு ஆதரவு அளித்திடுங்கள். கர்த்தரின் அன்பைப் பகிர்ந்து, சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டுவரும் மிஷனெரிகளுக்கு ஆதரவு தாருங்கள். FMPB மிஷனெரிகளை அனுப்புவதிலும், குழந்தைகளின் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பிற்கு ஆதரவளிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இது சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வரும்.

4. உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான விஷயங்களை மறந்துவிடாதீர்கள். உங்கள் பெற்றோருடன் அதிக நேரம் செலவிடுங்கள். உங்கள் குழந்தைகளுடனும், நண்பர்களுடனும், உறவினர்களுடனும் தரமான நேரத்தைச் செலவிடுங்கள். உங்கள் நேரத்தையும் வளங்களையும் சரியான முறையில் ஒதுக்குங்கள். வாழ்க்கையில் மற்ற பல விஷயங்களைவிட உறவுகள் மிக முக்கியமானவை.

5. உங்கள் வாழ்க்கையில் ஆவிக்குரிய ஒழுக்கங்களைக் கடைப்பிடியுங்கள் – இரகசியமாக ஜெபிப்பது, இரகசியமாக உபவாசிப்பது மற்றும் இரகசியமாக தர்மம் செய்வது போன்றவற்றை மேற்கொள்ளுங்கள். அப்போது பூமியிலும், பரலோகத்திலும் உங்களுக்கு ஏராளமான பலன்கள் கிடைக்கும்.

ஏமி கார்மைக்கேல் என்ற ஒரு கீழ்ப்படிதலுள்ள பெண்மணி மற்றும் ஒரு சிறு குழந்தையிடமிருந்து ஏற்பட்ட சிறிய தொடக்கத்திலிருந்து ஒரு 'மாதிரி கிராமம்' (டோனாவூர்) உருவானது. இது எளிய வசதிகள் மற்றும் நோயாளிகளுக்கு சேவை செய்ய ஒரு மருத்துவ மனையையும் உள்ளடக்கியது. தெற்கு தமிழ்நாட்டில் 400 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள டோனாவூர் ஃபெல்லோஷிப் (Dohnavur Fellowship) இன்று ஒரு மருத்துவமனை, பெரிய பள்ளி, பால் பண்ணை, குழந்தைகள் இல்லம் மற்றும் பலவற்றைக் கொண்டுள்ளது. 1901இல் ஏமி கார்மைக்கேல் (அன்புடன் **அம்மா** என்று அழைக்கப்படுபவர்) அவர்களால் மீட்கப்பட்ட குழந்தைகளுக்கான இல்லமாக இது தொடங்கப்பட்டது. இந்த ஐக்கியத்தின் பணி பல ஆண்டுகளாக இன்று நாம் காணும் பல்வேறு பரிமாணங்களாக விரிவடைந்துள்ளது. அவர் தனது வாழ்க்கையைத் தான் தொட்ட மனிதர்களின் எண்ணிக்கை, தான் பராமரித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தான் உதவியவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிட்டார்.

***உங்கள் வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு அளவிடுகிறீர்கள்?***

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர் – FMPB

# பெயர் சொல்லி அழைக்கப்பட்டு



## குறிக்கோளுடன் அனுப்பப்பட்டவர்கள்

***“இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்”*** *(ஏசாயா 43:1).*

தேவ ஊழியம் மற்றும் நற்சாட்சியின் புதிய ஆண்டிற்குள் நாம் உட்பிரவேசிக்கும் வேளையில், நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒரு புதிய ஆண்டு என்பது வெறும் நாட்காட்டியின் மாற்றம் மட்டுமல்ல, நாம் யார், நாம் யாருடையவர்கள் மற்றும் நாம் ஏன் அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவுகூற தேவன் நமக்குத்தரும் ஒரு பரிசுத்த அழைப்பு ஆகும். ஏசா.43:1 லிருந்து ஆவியானவரால் அருளப்பட்ட இந்த ஆண்டின் கருப்பொருள், **நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்**. இது நமது வாழ்விற்கு நிச்சயத்தையும், நம்பிக்கையையும் அருளக்கூடியதாக உள்ளது.

இந்த வார்த்தைகள் முதலில் சோர்வடைந்த, புலம்பெயர்ந்த மற்றும் தங்கள் எதிர் காலத்தைப்பற்றி நிச்சயமற்ற நிலையில் இருந்த மக்களிடம் பேசப்பட்டன. இருப்பினும் தேவன் திட்டங்களையோ அல்லது அறிவுறுத்தல்களையோ கொண்டு தொடங்கவில்லை; அவர் அடையாளத்துடன் தொடங்கினார்: அது **“உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்”** என்பதே ஆகும். அனைத்து உண்மையான ஊழியமும் நமது திட்டங்களிலிருந்து அல்ல, அஃது தேவனுடைய கிருபையிலிருந்தே தொடங்குகிறது.

இந்திய தேசம் முழுவதிலும் தேவனுடைய மீட்பின் பணியில் பங்கெடுக்க அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இயக்கமாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இந்த ஆண்டில் நுழையும்போது, நமது செயல்பாட்டிற்கு முன்பே நமது அழைப்பு முன்னிற்கிறது என்பதையும், நாம் அனுப்பப்படுவதற்கு முன்பே நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதையும் நினைவுகூறுகிறது.

### சிருஷ்டிகராகிய மீட்பரால் அழைக்கப்படல்:

ஏசா. 43:1 அழைப்பின் ஆழமான இறையியல் அடித்தளத்தை வெளிப்படுத்துகிறது. தேவன் தம் மக்களைப் படைத்தவர், உருவாக்கியவர் மற்றும் மீட்டவர் என்று தம்மை அடையாளப் படுத்துகிறார். இவை வெறும் கவித்துவமான வார்த்தைகள் அல்ல; அவை நம்மோடு தேவனுக்கு இருக்கும் முழுமையான உறவை விவரிக்கின்றன.

- தேவனால் சிருஷ்டிக்கப்படுவது நமது கண்ணியத்தை உறுதிப்படுத்துகிறது.
- தேவனால் உருவாக்கப்படுவது நமது நோக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

➢ தேவனால் மீட்கப்படுவது நமது மதிப்பை உறுதிப்படுத்துகிறது.

இந்த உண்மைகளிலிருந்து துண்டிக்கப்பட்ட ஊழியம் பாரமாகவும், பலவீனமாகவும் மாறுகிறது. ஆனால் அடையாளத்தில் வேரூன்றிய ஊழியம் மகிழ்ச்சியான, கீழ்ப்படிதலாக மாறுகிறது.

ஒரு இயக்கமான நமக்கு இது மிக முக்கியமானது. நாம் வெறும் திட்டங்களை நிர்வகிக்கும் ஒரு இயக்கம் மட்டுமல்ல, நாம் தேவனால் வடிவமைக்கப்பட்ட, ஒரு மீட்டெடுக்கப்பட்ட சமூகமாகும். நாம் நம் தேசத்தின் மக்களிடையே அவருடைய மகிமையை பிரதிபலிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். கிராமங்கள், நகரங்கள், வளாகங்கள், மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் நமது ஊழியர்கள் ஏதோ ஒருபணி ஒதுக்கப்பட்டதால் அல்ல மாறாக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளதால் முழு உள்ளத்தோடு ஊழியம் செய்கிறார்கள்.

## உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்: தேவனுடைய அழைப்பின் தனிப்பட்ட தன்மை:

வேதாகமத்தின் தேவன் தொலைவிலிருப்பவர் அல்லது அடையாளம் தெரியாதவர் அல்ல; அவர் நமது பெயரை சொல்லி அழைக்கிறவர்.

- **மோசே** எரியும் புதரின் நடுவிலிருந்து பெயர் சொல்லி அழைக்கப்பட்டார்.
- **சாமுவேல்** இரவின் நிசப்தத்தில் தனது பெயர் அழைக்கப்படுவதைக் கேட்டார்.
- **சகேயு** மரத்தின் மேலிருந்து கீழே அழைக்கப்பட்டார்.
- **சவுல்** தமஸ்கு பாதையில் தனிப்பட்ட முறையில் சந்திக்கப்பட்டார்.

நமது இந்திய சூழலில், பெயர்கள் என்பவை வெறும் அடையாளங்கள் மட்டுமல்ல; அவை அர்த்தம், வம்சம் மற்றும் தனித்துவத்தை சுமந்து நிற்கின்றன. ஒருவரை பெயர் சொல்லி அழைப்பதென்பது, அவர் அங்கீகரிக்கப்படுவதையும், மதிக்கப்படுவதையும், அவரிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்படுவதையும் குறிக்கிறது.

நமது மிஷனெரிகள் பலர் தேவன் அவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்ததை சாட்சிப் பகர்கின்றனர். சில நேரங்களில் வேத வசனங்களின் மூலமாகவும், சில நேரங்களில் பிரசங்கங்களின் மூலமாகவும், சில நேரங்களில் நெருக்கடியான சூழ்நிலைகள் மூலமாகவும் தேவன் அவர்களை சந்தித்து தம்முடைய ஊழியத்திற்காக அவர்களைப் பேர் சொல்லி அழைத்திருக்கிறார் என்பது நிச்சயிக்கப்பட்ட கூற்றாகும்.

FMPB யினால் ஆதரிக்கப்படும் சுதேச ஊழியரின் மூலம் சுவிசேஷத்தை முதன்முதலில் கேட்ட ஒரு கிராமப்புற இளைஞனை நான் நினைவுகூறுகிறேன். முதல் தலைமுறை கிறிஸ்தவனான அவனது விசுவாசத்தை அவரது குடும்பத்தினர் எதிர்த்தனர். இருப்பினும், ஜெபம் மற்றும் பொறுமையான வழிகாட்டுதலின் மூலம், அவர் தனது சொந்த மக்களிடையே ஊழியம் செய்ய தேவனுடைய அழைப்பை உணர்ந்தார். இன்று அவர் கிறிஸ்துவை அறியாத ஒருபகுதியில் உண்மையாக ஊழியம் செய்து வருகிறார். தேவன் இன்றும் மிகவும் எதிர்பாராத இடங்களிலும் தாம் தெரிந்துகொண்டோரை பெயர் சொல்லி அழைக்கிறார்.

## பயப்படாதே: நிச்சயமற்ற சூழ்நிலைகளின் மத்தியில் அழைக்கப்படல்:

ஏசாயா 43இல் தேவனுடைய அழைப்பு **பயப்படாதே** என்ற கட்டளையுடன்

தொடங்குகிறது. இது முக்கியமானது; அழைப்பு சவால்களை நீக்கிவிடுவதில்லை. ஆனால் அவற்றை எதிர்கொள்ளும் மன தைரியத்தைத் தருகிறது. தேவன் இந்த வார்த்தைகளை பேசும்போது இஸ்ரவேலர்கள் இன்னும் சிறையிருப்பிலேயே இருந்தனர்.

இன்று நமது ஊழியச் சூழல் சமூக மாற்றங்கள், பொருளாதார அழுத்தங்கள் சுவிசேஷத் திற்கு எதிரான துன்புறுத்தல்கள், இயற்கை பேரிடர்கள் மற்றும் ஊழியர்களிடையே ஏற்படும் சோர்வு போன்ற நிச்சயமற்ற நிலைகளிலிருந்து விடுபடவில்லை. நமது பல மிஷனெரிகள் கடினமான நிலப்பரப்புகள், நோய்கள் பரவக்கூடிய இடங்கள் மற்றும் ஆவிக்குரிய ரீதியில் கடினமான பகுதிகளில், குறைந்த வசதிகளுடனும், அங்கீகாரமின்றியும் ஊழியம் செய்கின்றார்கள். சிலர் கிறிஸ்துவுக்கு உண்மையாக இருப்பதற்காக வெறுப்பு, மிரட்டல்கள் அல்லது நீண்டகாலத் துன்பங்களை சந்தித்து வருகின்றனர்.

இருப்பினும், “நீ தண்ணீர்களை கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்” என்ற வாக்குத்தத்தம் மாறாததாய் இருக்கிறது. தேவன் நமக்கு ஒரு சுலபமான பாதையை வாக்குறுதியாக அளிக்கவில்லை மாறாக தமது நிலையான பிரசன்னத்தையே வாக்குறுதியாக அளித்திருக்கிறார். அவர் வெள்ளங்கள் மற்றும் அக்கினியின் வழியாக தமது ஊழியர்களோடு கூடவே நடக்கிறார்; தமது ஆவியினால் அவர்களைத் தாங்கி உண்மையுள்ள சாட்சிகளாய் விளங்க அவர்களைப் பலப்படுத்துகிறார்.

எதிர்ப்புகளும், துன்புறுத்தல்களும் நிறைந்த சூழல்களில் பணியாற்றும் நமது மிஷனெரிகளின் விலைமதிப்பற்ற அனுபவங்களின் வழியாக இந்த உண்மையை நாம் நேரில் கண்டிருக்கிறோம். சில குறிப்பிட்ட பகுதிகளில், நற்செய்திக்கு எதிரான எதிர்ப்புகள் தீவிரமடைந்தன. மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. சில நேரங்களில் நமது இயக்கம் ஈடுசெய்யமுடியாத இழப்புகளையும், அருமையான உயிர் பலிகளையும் சந்திக்க நேரிட்டது. ஆயினும், துக்கம், பயம் மற்றும் நிச்சயமற்ற சூழ்நிலைகளிலும், நமது மிஷனெரிகள் பயத்திற்கு பதிலாக உண்மையுள்ளவர்களாக இருப்பதையே தேர்ந்தெடுத்தார்கள். ஜெபம், தியாகம் நிறைந்த கீழ்ப்படிதல் மற்றும் தளராத சாட்சியின் மூலம் நற்செய்தி தொடர்ந்து வேரூன்றியது. சூழ்நிலைகள் கைமீறிப்போனபோதும், அதன் விலை வேதனையானதாக இருந்தபோதும், தேவனுடைய அழைப்பின் மீது அவர்கள் கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையே அவர்களைத் தாங்கியது. துன்பங்களின் மத்தியிலும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் விளங்கச் செய்தது.

## சாட்சிகளாய் இருக்க அழைக்கப்படல்:

ஏசாயா 43ஆம் அதிகாரம், பாதுகாப்பின் உறுதி மொழியிலிருந்து (Assurance) பணிக்கான நியமனத்திற்கு (Assignment) நகர்கிறது: **நீங்களே என் சாட்சிகள்** (வச. 10). தெரிந்துகொள்ளுதல் என்பது ஒரு அழைப்பிற்கு வழிநடத்துகிறது. **தேவன் தம்முடைய ஜனங்களை உலகத்திலிருந்து விலகியிருப்பதற்காக அல்ல, மாறாக உலகிற்குள் சாட்சிகளாய் இருப்பதற்காகவே அழைக்கிறார்.**

திருச்சபை என்பது தேவனுடைய பணிக்காகவே (Mission) இருக்கிறது என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. நற்செய்தி அறிவிப்பு, சீஷத்துவம், கருணை ஊழியங்கள், தலைமைத்துவ மேம்பாடு மற்றும் சமூக மாற்றத்திற்கும் தேசக் கட்டமைப்பிற்கும் உள்ளூர் திருச்சபைகளுடன் இணைந்து பணியாற்றுதல் ஆகியவற்றின் மூலம் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் விளங்குவதுமே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அழைப்பாகும். இது வேதாகமக் கட்டளையோடு ஒத்துப்போகிறது.

## இந்த ஆண்டிற்கான நமது முக்கியத்துவம் வாய்ந்த குறிக்கோள்கள்:

- சுயாதீன திருச்சபைகளை உருவாக்கும் முயற்சிகளை வலுப்படுத்துதல்.
- வார்த்தையையும், செயலையும் ஒருங்கிணைக்கும் முழுமையான ஊழியத்தை வளர்த்தெடுத்தல்.
- தேவனுடைய பணிக்காக அடுத்தத் தலைமுறையை திரட்டுதல்.
- நம்பிக்கை, ஜெபம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்ட கூட்டாண்மைகளை ஆழப்படுத்துதல்.

இந்தியாவின் பன்முகத்தன்மை மற்றும் சிக்கலான யதார்த்தங்களுக்கு மத்தியில் நாம் தனிப்பட்ட நபர்களாக அல்ல, மாறாக தேவனுடைய பணிக்கு செவிசாய்க்கும் ஒரு ஐக்கியமாக இருப்பதற்கு (Fellowship) அழைக்கப்பட்டுள்ளோம்.

## தேவனுடைய ஊழியத்தில் நமது அழைப்பை பகுத்தறிதல்:

அழைப்பு என்பது வேத வசனம் மற்றும் விசுவாச சமூகத்தின் ஐக்கியத்தின் வழியாக காலப்போக்கில் பகுத்தறியப்படுகிறது. பெரும்பாலும், நாம் கீழ்ப்படிதலோடு நடக்கும்போதுதான் தேவனுடைய அழைப்பு இன்னும் தெளிவாகிறது. ஒரு மிஷன் அமைப்பாக, குறிப்பாக இளைஞர்கள், பெண்கள் மற்றும் வளர்ந்து வரும் தலைவர்கள் மத்தியில் தேவனுடைய அழைப்பைக் கேட்கவும், சோதித்தறியவும் மற்றும் உறுதிப்படுத்தவும் தேவையான வாய்ப்புகளை நாம் திட்டமிட்டு உருவாக்கவேண்டும். நமது பெண் மிஷனெரிகளில் பலர், பிள்ளைகளுக்கு கற்பித்தல், இல்லங்களை சந்தித்தல், நோயாளிகளைப் பராமரித்தல் போன்ற சாதாரணமான விசுவாசக் காரியங்களின் மூலமாகவே தேவன் தங்களது அழைப்பைத் தெளிவுப்படுத்தினார் என்று சாட்சி கூறுகிறார்கள். **தேவனுடைய பணி என்பது வெளியரங்கமான மற்றும் புகழப்படக்கூடிய காரியங்கள் மூலம் மட்டுமல்ல, மாறாக அமைதியான, நிலையான கீழ்ப்படிதலின் மூலமாகவும் முன்னேறிச் செல்கிறது.**

அழைப்பு என்பது முழுநேர மிஷனெரிகளுக்கு மட்டுமே உரியது அல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். போதகர்கள், தொழில் வல்லுநர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், நிர்வாகிகள் மற்றும் தாங்குபவர்கள் என அனைவரும் ஜெபம், காணிக்கை, நற்செய்திக்காக குரல் கொடுத்தல் மற்றும் தத்தமது சூழலில் உண்மையுள்ள சாட்சிகளாய் விளங்குதல் ஆகியவற்றின் மூலம் தேவனுடைய பணியில் பங்குபெற அழைக்கப்பட்டுள்ளார்கள்.

## தேவனுடைய மகிமைக்காகவும், தேசங்களின் நம்பிக்கைக்காகவும் அழைக்கப்படுதல்:

நமது அழைப்பின் உன்னதமான நோக்கம் தேவனுடைய மகிமையே ஆகும்: "நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்" (ஏசா. 43:7). திருச்சபை தனது அழைப்பின்படி உண்மையுடன் வாழும்போது, தேவன் மகிமைப்படுகிறார் மற்றும் தேசங்கள் ஆசீர்வதிக்கப்படுகின்றன.

FMPB யாக இந்த ஆண்டிற்கான நமது ஜெபம் வெறும் எண்ணிக்கை வளர்ச்சி அல்ல, மாறாக உண்மையுள்ளவர்களாக இருப்பதில் நாம் ஆழமடைய வேண்டும் என்பதாகும். நமது அழைப்பு, நமது முன்னுரிமைகளையும், தீர்மானங்களையும்

மற்றும் உறவுகளையும் வடிவமைப்பதாக அமையட்டும். பயத்தையும், சோர்வையும் எதிர்த்து நின்று, தேவனுடைய பணிக்கான நமது அர்ப்பணிப்பை புதுப்பிப்போம்.

இயக்கத்தின் ஊழியத்தில் பங்கெடுக்கும் அருமையான உடன் பங்காளிகளே! இந்த புதிய ஆண்டைத் தொடங்கும்போது, தேவனுடைய சத்தத்தை மீண்டும் புதிதாகக் கேட்போம்: உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன். **நாம் கட்டாயத்திற்காக அல்ல, மாறாக ஒரு வைராக்கியமான நம்பிக்கையுடன் ஊழியம் செய்வோம். பயத்துடன் அல்ல, விசுவாசத்துடன் முன்னேறிச் செல்வோம்.**

இந்த முக்கியமான தருணத்தில், நமது ஜெபப் பங்காளர்கள், உபகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தேவனால் அருளப்பட்ட இந்த அழைப்பில் FMPB உடன் தொடர்ந்து நிற்குமாறு நான் உருக்கமாக கேட்டுக்கொள்கிறேன். உங்கள் ஜெபங்கள், நமது மிஷனெரிகளின் உழைப்பை ஒருவரும் கவனிக்காத நேரத்திலும் அவர்களைத் தாங்குகின்றன. உங்கள் தாராளமான காணிக்கைகள், நற்செய்தி எட்டாத மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்குச் சென்றடைய உதவுகின்றன. உங்கள் ஊக்கம் தேவனுடைய பணியில் உண்மையுடன் நிலைத்திருக்க எங்களைப் பலப்படுத்துகிறது.

**மிஷன் பணி என்பது பணித்தளத்தில் இருப்பவர்களால் மட்டுமே முன்னெடுத்துச் செல்லப்படுவதில்லை; அது கீழ்ப்படிதலோடு ஒன்றிணைந்து நடக்கும் கிறிஸ்துவின் முழு சரீரத்தாலும் நிறைவேற்றப்படுகிறது.** நீங்கள் ஜெபிக்கும்போதும், கொடுக்கும்போதும், நற்செய்திக்காக குரல் கொடுக்கும்போதும் ஒரு ஐக்கியமாக தேவன் நம்மை அழைத்த அந்தப் பணியில் நீங்களும் தீவிரப் பங்காளிகளாக மாறுகிறீர்கள்.

ஆகவே, தேவனுடைய நாமம் மகிமைப்படவும், அவருடைய இரட்சிப்பின் அன்பு நமது தேசம் முழுவதும் அறியப்படவும், இந்த புதிய ஆண்டு 2026இல் இன்னும் ஊக்கமாக ஜெபிக்கவும், இன்னும் தியாக உணர்வோடு கொடுக்கவும், தேவனை இன்னும் ஆழமாக நம்பவும் நமது பொதுவான அர்ப்பணிப்பை புதுப்பிப்போமாக!

**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்,** பொதுச் செயலாளர்.

## புதிதாக அபிஷேகம் செய்யப்பட்ட பேராயர்களை

## வாழ்த்துகிறோம்





CSI திருச்சி–தஞ்சவூர் திருமண்டலத்தின் புதிய பேராயராக பொறுப்பேற்றிருக்கும் மதிப்பிற்குரிய **Rt. Rev. Dr. S. சாமுவேல் ராஜதுரை** அவர்கள், ஆழ்ந்த விசுவாசம், புலமை மற்றும் தீர்க்கதரிசனத் தலைமைத்துவத்தைப் பிரதிபலிக்கும் ஊழியத்தைச் செய்யும் அர்ப்பணிப்புள்ள தேவனின் ஊழியர் ஆவார். தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர்பணி மரபில் வேரூன்றிய அவர், ஒரு குருவானவர், இறையியலாளர், ஆசிரியர் மற்றும் சமூக சிந்தனையாளராக சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். இறையியலில் முனைவர் பட்டம் பெற்ற அவரது சிந்தனைகள், வேதத்தில் உறுதியாக வேரூன்றியிருப்பதோடு, சமூக யாதார்த்தங்களுடனும்,

குறிப்பாக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், பழங்குடியினர், விவசாயிகள், பெண்கள் மற்றும் பிற விளிம்பு நிலை சமூகங்களின் கரிசனைகளுடன் தீவிரமாக பிணைந்துள்ளன.

ஒரு திறமையான எழுத்தாளர் மற்றும் ஆராய்ச்சியாளரான இவர் நிலம், உணவுப் பாதுகாப்பு, நீதி மற்றும் திருச்சபையைக் குறித்த படைப்புகளினால், திருச்சபை மற்றும் கல்வித்துறை இரண்டிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். **James Massey Subaltern Studies Award** போன்ற கௌரவ விருதுகளைப் பெற்றுள்ளார். ஒரு வழிகாட்டியாகவும், கல்வியாளராகவும், தெளிவு, அன்பு மற்றும் தைரியத்துடன் இத்தலைமுறை போதகர்களையும், இறையியலாளர்களையும் உருவாக்கியுள்ளார். ஒரு பேராயராக அவர் ஒரு மேய்ப்பனின் இதயத்தையும், ஒரு தீர்க்கதரிசியின் குரலையும் கொண்டிருக்கிறார். திருச்சபையை உள்ளடக்கிய சமூகம், விசுவாசமான சாட்சி மற்றும் மாற்றத்தை உருவாக்கும் ஊழியத்தை நோக்கி வழிநடத்துகிறார்.

அவரது வாழ்க்கை மற்றும் தலைமைத்துவத்திற்காக தேவனைத் துதித்து, FMPB குடும்பத்தின் சார்பாக அவரை வாழ்த்துகிறோம். மேலும் அவரது பேராயர் பணிக்குத் தேவையான தெய்வீக ஞானம், பெலன் மற்றும் கிருபைக்காக ஜெபிக்கிறோம். பேராயர் அவர்கள் திருச்சபைக்கும், பரந்த சமூகத்திற்கும் தொடர்ந்து ஆசீர்வாதமாக பயன்பட வாழ்த்துகிறோம்.



CSI கன்னியாகுமரி திருமண்டலத்தின் 7வது பேராயராக மதிப்பிற்குரிய **Rt. Rev. Dr. செல்வமணி கிறிஸ்டோபர் விஜயன்** அவர்கள் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார்கள். 1989ஆம் ஆண்டு காரோடில் ஒரு திருச்சபை ஊழியராக தனது ஊழியத்தைத் தொடங்கியவர், 2025ஆம் ஆண்டு வரை தனது குருத்துவ ஊழிய காலங்களில் திருமண்டலத்தின் தகவல் தொடர்புத் துறையில் இயக்குநர், தேசோபகாரி பத்திரிக்கையின் ஆசிரியர், கன்னியாகுமரி பிஷப் செல்வமணி தியான மையத்தின் பொறுப்பாளர் மற்றும் ஐரேனிபுரம் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் தாளாளர் உட்பட பல முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார். இறுதியாக நெய்யூரில் சேகர குருவானவராக உண்மையுடன் பணியாற்றினார்.

சி.எஸ்.ஐ. சினாட்டின் அருட்பணி மற்றும் நற்செய்திப்பணி துறையின் இயக்குனராகவும், இந்திய தேசிய மிஷனெரி சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியதின் மூலம் அவர் பரந்த ஊழிய அனுபவத்தை கொண்டுள்ளார். அருட்பணி, நற்செய்திப்பணி மற்றும் திருச்சபை வளர்ச்சி மீதான தனது அர்ப்பணிப்பிற்காகப் பரவலாக மதிக்கப்படும் அவரது பேராய தலைமைத்துவம், திருமண்டல மற்றும் திருச்சபையின் தேசிய மிஷன் பணிகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக பொறுப்பேற்றிருக்கும் பேராயர் **Rt. Rev. Dr. செல்வமணி கிறிஸ்டோபர் விஜயன்** அவர்களை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது. அவரது பேராயர் பணிக்கும், திருச்சபையின் பரந்த அருட்பணிக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட மற்றும் பயனுள்ள ஊழியத்திற்காகவும் ஜெபிக்கிறோம்.

FMPB குடும்பம்



# தேவ பிரசன்னத்தில் வாழ்வது எப்படி?

தேவனுடைய பிரசன்னத்தில் மகிழ்வதே எனது வாழ்வின் பிரதான குறிக்கோள். இது தேவனிடம் நான் கற்றுக்கொண்ட பாடம். தேவனுக்கு எந்த அளவு ஊழியம் செய்யலாம் என்பதைவிட தேவ பிரசன்னத்தில் மகிழ்ச்சியாயிருப்பது எப்படி என்றும், என்னுடைய உள்ளான மனிதனில் நாளுக்கு நாள் எப்படி பலப்படுவது என்றும் அறிந்து செயல்படுவதுதான் முக்கியமானது. தினசரி வாழ்வில் நாம் சந்திக்கும் இரட்சிக்கப்படாத ஒருவருக்கு நற்செய்தியை தெளிவாகக் கூறவேண்டும். அந்த விசுவாசி வளர்ச்சியடைய உதவி செய்யவேண்டும். மனத் துயரத்தில் நொந்துபோன ஒருவரை ஆற்றி தேற்றவேண்டும். பாவம் நிறைந்த உலகில் பரிசுத்தமாக நான் வாழவேண்டும். எனவே தேவ பிரசன்னத்தில் வாழ்ந்து உள்ளான மனிதனில் பலப்படுவது எனக்கு மிகவும் அவசியமாகின்றது.

அதிகாலையில் குளித்து, ஆயத்தப்பட்டு காலை உணவு வரையிலும் ஜெபிப்பதை பழக்கப்படுத்தி இருந்தேன். தியானிப்பதின் முக்கியத்துவத்தை அறியாதிருந்தேன். ஆனால் இப்போதோ தேவன் எனக்கு கற்பித்தபடி தேவ வசனத்தை தியானிப்பதற்கு முதலிடம் கொடுக்க ஆரம்பித்தேன். அப்படி தியானிக்க ஆரம்பித்தப்பின் தேவ பிரசன்னத்தை மிக எளிதில் உணர முடிந்தது. அனல் மூட்டப்படுவது மிகவும் முக்கியமானது என உணர ஆரம்பித்தேன். ஏனெனில் அப்படி செய்யும்போது தேவனோடு ஐக்கியப்பட்டு, அவருடைய பிரசன்னத்தை அனுபவிக்க முடிந்தது. எனவே அதிகாலையில் புதிய ஏற்பாடு பகுதியை தியானிக்க ஆரம்பித்தேன். தேவ வசனத்தை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபித்தேன். அந்த பகுதியிலுள்ள ஒவ்வொரு வசனமாக தியானித்து, ஆராய்ந்து படித்து, தேவன் தரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன். **தேவ வசனத்தை போதித்து, பிரசங்கிப்பதற்காக நான் இப்படி தியானிக்கவில்லை. என்னுடைய ஆத்தும வளர்ச்சிக்கு ஆகாரம் பெற்றுக்கொள்வதற்காகத்தான் வசனத்தை தியானித்து ஆராய்ந்து படித்தேன்.**

நான் இப்படி தியானித்து படிக்க ஆரம்பித்த உடனேயே பாவ அறிக்கை செய்வதும், மன்றாடி ஜெபிப்பதும், துதிப்பதும், விண்ணப்பிப்பதும் நடக்க ஆரம்பித்தது. இவைகளெல்லாம் ஜெப நேரத்தில் அல்ல தியான வேளையில் நடைபெற்றதாகும். இப்படியெல்லாம் நடந்தாலும் **தியான வேளையின் குறிக்கோள் என் ஆத்துமாவிற்கு ஆகாரம் கொடுப்பதே ஆகும்** என்பதை நான் மறக்கவில்லை.

முன்பு காலை நேரத்தை ஜெபத்தில் செலவழித்தேன். எனது தினசரி வாழ்வின் நிகழ்ச்சிகளை ஜெபத்துடன் ஆரம்பித்தேன், உள்ளத்தில் சோர்வு ஏற்படும்போது வேதத்தை வாசித்தேன். தேவ பிரசன்னத்தை உணர்வதற்கு பல நிமிடங்கள் அல்லது பல மணி நேரங்கள் ஜெபத்தில் செலவிட வேண்டியதாக இருந்தது. மனதை சிதறவிடாமல் ஒருமுகப்படுத்துவதும், கடினமாக இருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை. தேவ வசனத்தை வாசித்து தியானிக்க ஆரம்பித்த உடனேயே தேவ பிரசன்னத்தை உணர முடிகின்றது. வேத வசனத்தின் மூலமாக தேவன் என்முன் கொண்டுவரும் காரியங்களைக் குறித்து தேவனோடு பேச முடிகின்றது. '**தேவ வசனத்தை தியானித்தல்**' என்ற தங்க சாவியை பயன்படுத்தி '**தேவ பிரசன்னம்**' என்னும் இன்பமான இடத்திற்குள் பிரவேசியுங்கள். தேவன் இந்த மேன்மையான அனுபவத்திற்கு உங்களையும் அழைக்கின்றார். *(அறைகூவல் ஜூலை 1992ஆம் ஆண்டின் மறுபதிப்பு)*

**– ஜார்ஜ் முல்லர்**

# பாண்டே துர்க்கொண்டல்

## சத்தீஸ்கர்





### அறிமுகம்

இந்தியாவின் ஒன்பதாவது பெரிய மாநிலமான சத்தீஸ்கரில் சுமார் 3 கோடி மக்கள் வாழ்கின்றனர். இது ஏழு மாநிலங்களை எல்லையாகக் கொண்டுள்ளது. 2000ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி ராய்ப்பூரை தலைநகராகக் கொண்டு தனி மாநிலமாக மாறியது. வடக்கு மற்றும் தெற்கு பகுதி மலைப் பாங்கானவைகளாகவும், அதே சமயம் மத்திய பகுதி சமவெளி மற்றும் வளமானவை களாகவும் உள்ளன. இந்த மாநிலம் இந்தி யாவின் மூன்றாவது பெரிய வனப்பகுதி யைக் கொண்டுள்ளது. கவுர்லாடா என்பது மிக உயரமான இடமாகும். சத்தீஸ்கர் 33 மாவட்டங்களைக் கொண்டுள்ளது. இதில் பஸ்தர், கான்கர் மற்றும் சுர்குஜா போன்ற முக்கிய பழங்குடிப் பகுதிகளும் அடங்கும். சத்தீஸ்கர் இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகும். இது மூன்றாவது பெரிய நிலக்கரி இருப்புகளைக் கொண்டுள்ளது. மேலும் மின்சாரம், நிலக்கரி மற்றும் எஃகு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் முக்கிய இடமாக உள்ளது. அரிசி, சோளம், தினை, பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

வடகிழக்கின் மலைப்பாங்கான மாநிலங்களைத் தவிர, சத்தீஸ்கர் மாநிலத்திற்குள் அதிக எண்ணிக்கையிலான பட்டியல் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இது இந்தியாவிலுள்ள பழங்குடியினரில் சுமார் 10% ஆகும். முக்கியமாக இவர்கள் பஸ்தர் மற்றும் தெற்கு சத்தீஸ்கரின் பிற மாவட்டங்களின் அடர்ந்த காடுகளில் வசிக்கின்றனர். சத்தீஸ்கர் மாநிலம் கோண்ட், பைகாஸ் மற்றும் ஒராவன் போன்ற பழங்குடியினரால் வசந்தத்தை வரவேற்கும் கர்மா நடனத்திற்குப் பெயர்பெற்றது. இந்துக்கள்

ஆதிக்கம் செலுத்திவரும் இம்மாநிலத்தில் குரு காசிதாஸை பின்பற்றுபவர்களான சத்னாமி சமூகம் குறிப்பிடத்தக்கது. நகர்புறங்களில் இஸ்லாமியர்களும், சர்குஜா பழங்குடியினரிடையே கிறிஸ்தவர்களும் பெருமளவில் வசிக்கின்றனர்.

2005ஆம் ஆண்டு **டோன்ஹி அட்யாசார் நிவாரன் சட்டம்** இயற்றப்பட்ட போதிலும் இன்னும் சில பகுதிகளில் சூனியம் (டோன்ஹி) மீதான நம்பிக்கை நீடித்து வருகிறது. சத்தீஸ்கர் மாநிலம் பழங்குடி மரபுகள், இயற்கை வளங்கள், விவசாயம் மற்றும் விரைவான தொழில்துறை வளர்ச்சியில் தனித்துவம் பெற்று வருகிறது. இங்குள்ள காடுகள், கலாச்சாரங்கள் மற்றும் பாரம்பரியம் இந்தியாவின் மையத்தில் அதன் அடையாளத்தை தொடர்ந்து வரையறுக்கின்றன.

## பாண்டே மற்றும் துர்க்கொண்டலில் நமது ஊழியம்

**பாண்டே:** பாண்டே கான்கர் மாவட்டத்திலுள்ள தாலுக்காவை தலைமையாக கொண்டுள்ளது. உத்தர் பஸ்தர் கான்கரில் அமைந்தள்ள துர்க்கொண்டல் பழங்குடி பன்முகத்தன்மைக்கும், பெயர்பெற்ற கலாச்சார ரீதிக்கும் துடிப்பான கிராமமாகும். இந்த தாலுக்காவில் 150 கிராமங்கள் உள்ளன. இதில் முக்கியமாக ஒராவன், கன்வார் மற்றும் பின்ஜ்வார் பழங்குடியினர் வசிக்கின்றனர். சத்தீஸ்கரி, இந்தி, கோண்டி மற்றும் ஹல்பி ஆகியவை பொதுவாக பேசப்படும் மொழிகளாகும். 2018ஆம் ஆண்டு பாண்டே பணித்தளத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் துவங்கப்பட்டது. அருள்திரு. விஜயன் & திருமதி. ஜெபரோஸ் முன்னோடி மிஷனெரிகளாவர். இப்பணித்தளத்ததை அருள்திரு. விஜயன், திரு. பாபுஜி முர்மு, திரு. குல்தீப் சிங் மற்றும் சுதேச ஊழியர்கள் இணைந்து ஆய்வு செய்தனர்.

**துர்க்கொண்டல்:** துர்க்கொண்டல் கான்கர் மாவட்டத்திலுள்ள ஒரு தாலுகா ஆகும். இது பாண்டே பணித்தளத்திலிருந்து 64 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. துர்க்கொண்டல் பகுதியை ஆலப்பள்ளி, எட்டப்பள்ளி மற்றும் பாண்டே பணித்தள ஊழியர்களான திரு. அரவிந்த் வசாவே, திரு. பாபுஜி முர்மு, திரு. குல்தீப்சிங் மற்றும் திரு. ஹோசன் ஜெராய் ஆகியோர் 2022 டிசம்பர் 26 & 29 அன்று ஆய்வு செய்தனர்.

இப்பணித்தளங்கள் மத்திய மண்டலத்தின் டெக்கான் பிராந்தியத்தில் அமைந் துள்ளன. இங்குள்ள முக்கிய மக்கள் இனங்களில் மடியா, அபுஜ் மடியா மற்றும் ராஜ் கோண்ட் மக்கள் அடங்குவார். இவர்களில் மடியா மொழியை பேசும் மடியா பழங்குடியினர் நற்செய்திக்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த பகுதி மஹாராஷ்டிராவிலுள்ள எட்டப்பள்ளி பணித்தளத்திற்கு அருகில் உள்ளது. இங்கு 301 கிராமங்கள், 1 நகரம் மற்றும் 34,152 வீடுகள் உள்ளன. எழுத்தறிவு





விகிதம் 57%. இவர்களின் அநேகர் ஆவி வணக்கமுடையவர்கள். பெரும்பாலான கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களோ, மருத்துவர்களோ இல்லை.

முக்கியமாக ஆண்களும் பெண்களும் விவசாயிகளாகவும், தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்றனர். சிறுவர்கள் கால்நடைகளை மேய்க்கிறார்கள். ஒரு சில குழந்தைகள் மட்டுமே பள்ளிக்குச் செல்கிறார்கள். இங்குள்ள மக்கள் நக்ஸலைட் மற்றும் மாவோயிஸ்ட்டுகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இங்கு பலர் இயேசு கிறிஸ்துவை ஒரு குணமாக்குபவர் மற்றும் அசுத்தாவியிலிருந்து விடுதலை தருபவராக மட்டுமே பார்க்கின்றனர். இங்கு ரோமன் கத்தோலிக்கர் மற்றும் பெந்தேகோஸ்தே ஊழியர்கள் ஊழியம் செய்துள்ளனர். ஒருசில எதிர்ப்புகள் தவிர மக்கள் பெரும்பாலும் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர்.

**ஊழிய அணுகுமுறைகள்:** படகாட்சி ஊழியம், தனிநபர் சுவிசேஷம் மற்றும் குணப்படுத்தும் ஊழியங்களைச் செய்து வருகின்றனர்.

**ஊழியத்தில் சவால்கள்:** மந்திரவாதிகள், பூசாரிகள், பழங்குடித் தலைவர்கள், PESA சட்ட ஆதரவாளர்கள் மற்றும் திருமணத்திற்குமுன் ஒன்றாக வாழ்வது, குழந்தை திருமணங்கள், நரபலி போன்ற கலாச்சர தடைகள்.

**நற்செய்திக்கான தாக்கம்:** எட்டப்பள்ளி பணித்தளத்தைச் சேர்ந்த விசுவாசி சின்னி கோட்டா மூலம் நற்செய்தியின் தாக்கம் உறுதியான முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. சின்னி கோட்டா தனது சகோதரனுடைய பேரனின் இறுதிச் சடங்கிற்காக ஹெட்டட்காசா கிராமத்திற்குச் சென்றார். குழந்தையின் தந்தை இறுதிச் சடங்கின்போது மயக்கமடைந்தார். அதைக்கண்டு வேதனைப்பட்ட சின்னி கோட்டா இயேசு கிறிஸ்து தரும் இரட்சிப்பையும் சமாதானத்தையும் குறித்து அவர்களுடன் பகிர்ந்துகொண்டு ஆறுதல் கூறினார். அவளுடைய வார்த்தைகள் அவர்களின் இருதயங்களைத் தொட்டன. அவளுடைய சகோதரனின் குடும்பமும், அவர்களின் மகன்களின் குடும்பங்களும் மற்றும் உறவினர்களும் ரெக்னார் கிராமத்தில் நடைபெறும் ஆராதனையில் கலந்துகொண்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் கர்த்தர் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்தனர். ஹெட்டட்காசாவில் ஒரு சபை உருவாக்கப்பட்டது; இந்த கிராமத்திலிருந்து நற்செய்தி அருகிலுள்ள பகுதிகளுக்குப் பரவியது. இன்று இந்தப் பகுதி பாண்டே பணித்தளம் என்று அழைக்கப்படுகிறது.

## ஜெபிப்போம்

- மூட நம்பிக்கைகள் மற்றும் சீர்கேடான கலாச்சார நடைமுறைகளிலிருந்து மக்கள் விடுபட...
- அனைத்து குழந்தைகளும் பள்ளிக்குச் சென்று உயர்கல்வி கற்க...
- போதுமான மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட...

- நக்சலைட் மற்றும் மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் ஒழிய...
- நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட...
- விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், தங்கள் சொந்த மக்களுக்கு நற்செய்தி அறிவித்து அவர்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தவும்...
- அதிகாரத்திலுள்ளவர்கள் இயேசுவின் அன்பினால் தொடப்படவும், அவர்களின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்...
- இயேசு கிறிஸ்துவை சுகமளிப்பவராக, அசுத்தாவியிலிருந்து விடுதலை தருபவராக அறிந்திருக்கும் இவர்கள், கிறிஸ்து ஒருவரே தெய்வமென்று தங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்க...
- மட்டியா கோண்ட் மக்கள் விரைவில் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட...
- இங்கு ஊழியம் செய்யும் திரு. ஹோரசன் ஜெராய் & திருமதி. ரேகா சாம்பியா குடும்பத்தை தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும், அவர்களின் பாதுகாப்பு, சரீர சுகம் மற்றும் அவர்களது மகன் ஜோஷ்வா மார்ஷலுக்காகவும் ஜெபிப்போம்.

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI - A/c No. 602701216912** - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb@icici**

**SBI - A/c No. 10402752621** - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank - A/c No. 406157474** - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**



# ஊழியரை உருவாக்கிய அன்னாளின் ஜெபம்

1 சாமுவேல் 1:6-11 – பிள்ளையற்றவளாய் இருந்த அன்னாள் தன் சக்களத்தியால் உதாசீனப்படுத்தபட்டாள், விசனப்படுத்தப்பட்டாள் இதனால் சாப்பிடாமல் அழுது கொண்டிருப்பாள். பொதுவாக மனம் சோர்ந்த நிலையில் சுய பரிதாபம் (Self pity) நம்மை மேற்கொள்வது இயல்பானதே. ஆனால் அன்னாளின் ஜெபம் வித்தியாச மானதாகக் காணப்படுகிறது. அந்நாட்களில் ஏலியும் அவனுடைய இரண்டு குமாரர் களான ஓப்னி, பினேகாஸ் ஆகியோரும் வழி தவறினவர்களாக மற்றும் மக்களை வழி தவறச் செய்கிறவர்களாக காணப்பட்டார்கள். இச்சூழ்நிலையில் அன்னாளுடைய பொருத்தனையின் வாயிலாக ஒரு நல்ல உண்மையுள்ள ஆசாரியன், தேவ ஊழியன் ஆசரிப்பு கூடாரத்திற்கு கிடைக்கப்பெற்றான்.

## அ) கேட்டது ஒரு மகன்

அன்னாளின் விண்ணப்பம் நம்மை சிந்திக்க வைக்கிறது. மலடி என்று அழைக்கப்பட்ட தான் தாயாக அழைக்கப்பட வேண்டும் என வாஞ்சித்தாள். தேவைக்கும், ஆசைக்கும் உள்ள வித்தியாசத்தை இங்கே காண்கிறோம். அன்னாளின் ஜெபம் சுயநல மானதல்ல, பேராசை உள்ளதும் அல்ல. அது தன்னலமற்ற ஜெபம். அன்னாள் கேட்டது ஒருமகன், அதையும் கர்த்தருக்கென்று கொடுப்பதற்காக கேட்கிறாள்.

## ஆ) கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்

அன்னாள் தனது பொருத்தனையின் விலையை அறிந்திருந்தாள். தேவனுடைய கூடாரம் பேலியாளின் பிள்ளைகள் கட்டுப்பாட்டில் இருந்தது. ஓப்னி, பினெகாஸ் ஆகிய இரண்டு ஆசாரியர்களும் கர்த்தருக்கு பயப்படாதவர்கள். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சன்னிதியில் மிகவும் பெரிதாய் இருந்தது. இவர்களின் பாவச் செயல் களினால் காணிக்கை படைத்த மற்றும் படைக்க வந்தவர்கள் வெறுப்படைந்தார்கள் (1சாமு. 2:17). இந்த சூழ்நிலையில் எந்த ஒரு தாயும் தன் மகனை ஊழியம் செய்ய அனுப்புவதற்கு தயங்குவர். இன்றைய ஊழியக்காரர்களும் தங்கள் பிள்ளைகளை ஊழியத்திற்கு அனுப்ப சற்றே தயங்குகிறார்கள். தேவ பக்தியுள்ள பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் வசதியுள்ள, பாதுகாப்பான வாழ்க்கை வாழ வேண்டும் என்று பெரும்பான்மையாக வாஞ்சிக்கிறார்கள். ஆனால் பிள்ளையே இல்லாத அன்னாள்

தனக்கு கர்த்தர் கொடுத்த மகனை சவால் நிறைந்த, பாதுகாப்பற்ற சூழ்நிலையில் ஊழியம் செய்ய அர்ப்பணித்தது அவளது தியாகத்தையும், கர்த்தர் மேலுள்ள வைராக்கியத்தையும் காட்டுகிறது.

## இ) சவரகன் கத்தி படுவதில்லை

ஒரு லேவியன் கூடார ஊழியத்தில் சேரும் வயது 25 முதல் அதற்கு மேற்பட்டதாய் இருக்க வேண்டும் (எண்.8:24-25). மற்றும் 50 வயதில் பணி ஓய்வு பெறுவார். அன்னாளின் பொருத்தனையோ பிள்ளை குழந்தைப் பருவத்திலிருந்து தன் வாழ்நாள் முழுவதும் ஊழியம் செய்ய வேண்டும் என்பதுதான். சாமுவேலின் நசரேய விரதம் தற்காலிகமானது அல்ல, அது நிரந்தரமானது (1சாமு. 1:11, எண்.6:4-8). அன்னாளின் அர்ப்பணமும், சாமுவேலின் ஒத்துழைப்பும் பாராட்டத் தகுந்தது. சாமுவேலின் குழந்தைப் பருவத்தில் அன்னாள் இட்ட ஆவிக்குரிய அஸ்திபாரம் சாமுவேலை இறுதிவரை நடத்திச் சென்றது. பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் என்று வேதம் கூறுகிறது (நீதி.22:6).

அன்னாள் சாமுவேலை ஆசாரிய ஊழியத்திற்கென்றும், பிரித்தெடுக்கப்பட்ட பரிசுத்த வாழ்க்கைக்கென்றும் ஆயத்தப்படுத்தினாள்.

## முடிவுரை

1982ஆம் ஆண்டு, நான் பெத்தேல் வேதாகமப் பள்ளியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தேன். பெத்தேல் வளாகத்தில் டாக்டர் சாமுவேல் கமலேசன் அண்ணன் அவர்களின் தாயார் வசித்து வந்தார்கள். ஒருமுறை அந்த அம்மை யாரின் அருகில் நான் நின்று கொண்டிருந்தபோது, கமலேசன் அண்ணன் அவர்கள், தனது தாயாரை தன்னோடு கூட அமெரிக்காவுக்கு வரும்படி கூறினார்கள். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். அண்ணன் சென்றப்பின் அந்த விதவைத் தாயார் என்னைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள், நான் என் ஒரே மகனை ஊழியத்திற்குச் செல்லும்படி கூறினேன். எனது மகனின் அழைப்பிற்கிணங்க அவருடன் அமெரிக்கா சென்றால் அவரது ஊழியத்திற்கு நான் இடையூறாக இருக்க நேரிடும் என்பதினால் மறுத்துவிட்டேன் என்றார். அந்தத் தாயாரின் தியாகமான முடிவு என்னை மனம் நெகிழச் செய்தது.

அன்னாளின் அர்ப்பணத்தையும், தியாகத்தையும் கர்த்தர் கனம் பண்ணினார். சாமுவேல் ஆசாரியனாக மாத்திரமல்ல தீர்க்கதரிசியாக, நியாயாதிபதியாக செயல்பட்டார் (1 சாமு. 3:20, 7:15). மோசேக்கும், ஆரோனுக்கும் இணையாக கருதப்பட்டார் (சங்.99:6, எரே.15:1). அன்னாளைப்போல தரிசனமுள்ள, தியாகமான, அர்ப்பணத்தோடு கூடிய பெற்றோர்கள் இன்றையத் தேவை. அப்படிப்பட்டவர்களுடைய சுயநலமற்ற ஜெபங்கள் நிச்சயமாக நமது தேசத்தை சுதந்தரிக்கும். அல்லேலூயா!

**அருள்திரு. ரூபன் சாமுவேல்,** விரிவுப்பணி செயலர் - காஞ்சிபுரம் & செங்கல்பட்டு

# விளிம்பு நிலையில் இந்திய இளைய தலைமுறையினர்

## ஜெபிக்க மற்றும் செயல்பட ஒரு அறைகூவல்

இந்தியாவில் ஆண்டுதோறும் ஜனவரி 12ஆம் தேதி தேசிய வாலிபர் தினமாக கொண்டாடப்படுகிறது. இது சுவாமி விவேகானந்தாவின் பிறந்தநாளை முன்னிட்டு அனுசரிக்கப் படுகிறது. இந்நாளைத் தொடர்ந்து ஒரு வாரம் தேசிய வாலிபர் வாரமாக கொண்டாடப்படுகிறது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இளைஞர் களால் உதயமான ஓர் தேவ இயக்கம். எனவே இயக்கமாக இந்திய இளைஞர் களுக்காக மன்றாடுவது நமது தார்மீக பொறுப்பாகும்.

இந்திய இளைஞர்களுக்காக மன்றாடு வதோடு நமது பொறுப்பு முழுமையடைவதில்லை, நமது சொந்த குடும்பங் களிலிருந்து அடுத்த தலைமுறையினரை மிஷனெரிப் பணியில் தரிசனம் கொண்ட தலைவர்களாக ஊக்குவித்து வளர்ப்பது இயக்கமாக நமது இன்றைய முதல் பொறுப்பாகும். முழு நேர மிஷனெரிகளாக, ஜெபக்குழு மற்றும் ஸ்கேன் தலைவர்களாக பல நிலைகளில் நமது பிள்ளைகளை நெறிப்படுத்துதல் அவசியமானப் பணியாகும். 2024ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு ஆய்வில் (EFI ஆமோதித்தபடி) கிறிஸ்தவ இளைஞர்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற தீர்மானிப்பதில், அவர்கள் பெற்றோர்களே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள் என தெரிய வந்துள்ளது. கிறிஸ்தவ வாலிப முகாம்கள், கிறிஸ்தவ தலைவர்கள், நண்பர்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றின் தாக்கத்துடன் ஒப்பிடும்போது பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது என்பதை தெளிவுப்படுத்துகிறது.

இக்கால இந்திய இளைஞர்களை கிறிஸ்துவின் உண்மை சீஷர்களாக வழிநடத்த முதற்படியாக அவர்கள் சந்திக்கும் முக்கிய சவால்களை நாம் புரிந்துகொண்டு அவைகளுக்காக வேண்டுதல் செய்வோம். இந்திய தேசமானது உலகில் அதிக இளைஞர் மக்கள் தொகையைக்கொண்ட நாடு. மக்கள் தொகையில் 65% பேர் 35 வயதிற்கும் குறைவானவர்கள். இளைஞர்களே நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய சக்தி யாவர். ஆனால் வேலை வாய்ப்பின்மை, வேலை இழப்பு, மதுபானம், போதைப்



பழக்கம், சமூக ஊடகப் பழக்கம், மன அழுத்தங்கள், தற்கொலை எண்ணம் போன்ற கடுமையான சவால்கள் அவர்களது உன்னதமான தரிசனங்களை கானல் நீர்போன்ற கனவுகளாக சிதைத்துவிடுகிறது.

நகர்ப்புற இளைஞர்களின் வாழ்க்கை இதுவரை இல்லாத அளவிற்கு சிக்கலாகியுள்ளது. தொழில் நுட்ப மாற்றம், வாழ்வியலின் மாற்றம், வேகமான வளர்ச்சி ஆகியவை மன அழுத்தத்தையும், தாழ்வையும் ஏற்படுத்துகின்றன. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் 87% இளைஞர்கள் – குறிப்பாக இளம் பெண்கள் – கல்வி, மருத்துவம், பயிற்சி, வேலை வாய்ப்புகள், பொருளாதார, சமூக மற்றும் அரசியல் போன்றவற்றில் சமத்துவமின்மையால் பாதிக்கப்படுகிறார்கள். (UNDP Youth Strategy, 2014-17).

கிராமப்புற இளைஞர்களின் நிலையைக் காணும்போது இந்தியாவின் மொத்த இளைஞர்களில் 68% பேர் கிராமப்புற இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர்களில் பலர் நகரங்களுக்கு கூலித் தொழிலாளர்களாக குடிபெயர்வதால் கிராம வளர்ச்சி மந்தமாகிறது. அதேநேரத்தில் நகரங்களில் அவர்கள் தற்காலிக வேலைகளில் குறைந்த ஊதியத்திற்கு சிக்கப்படுகிறார்கள்.

**வேலை வாய்ப்பின்மை:** 15–34 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 36% பேர் வேலை வாய்ப்பின்மையால் அவதிப்படுகின்றனர். இதையே நாட்டின் மிகப்பெரிய பிரச்சனை என கூறுகிறார்கள் (Lokniti-CSDS Survey, 2023). 36% மும்பை ஐ.ஐ.டி.யின் பட்டதாரிகளுக்கு சரியான வேலை அமையவில்லை என்ற பத்திரிக்கை செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

**போதை & மது:** 1.58 கோடி இளம் வாலிபர்களின் வாழ்க்கையில் போதை மற்றும் மதுப்பழக்கம் பெரும் சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளன.

**மனநலம்:** 18–24 வயதுள்ள வாலிபர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு ஆரோக்கியமான மனநிலை இல்லை. 41% தற்கொலைகள் 30 வயதிற்குட்பட்டவர்களிடமே நிகழ்கின்றன.

**சமூக ஊடகம்:** ஃபேஸ் புக், யூ டியூப், ரீல்ஸ் போன்ற சமூக வளைத்தளங்களில் அதிக நேரத்தை விரயமாக்குவதால் இளைஞர்களின் புதிய கற்பனைத்திறன் குறைந்து, மனநிலை, கோபம், தளர்ச்சி ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

**உடல் பருமன்:** நகரங்களில் சரியான உணவுப் பழக்கமின்மையால் உடல் பருமன் அதிகரித்துள்ளது. இவை அனைத்தும் நமது இளைஞர்களுக்காக தீவிர ஜெபமும், செயலும் தேவை என்ற அறைகூவலை விடுக்கிறது.

**இந்திய இளைஞர்களுக்கான ஜெப கரிசனை:**

- வேலை மற்றும் பணி வாய்ப்புகளில் இளைஞர்கள் உழைப்பில் கண்ணியத்தையும், திருப்தியையும் பெற்றுக்கொள்ள... (பிரசங்கி 3:13).
- கிராமப் புறங்களில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான புதிய வாய்ப்புகள் திறக்கப்பட...
- இளம் பெண்களுக்கு சமமான வேலை வாய்ப்புகள் உருவாக...
- போதைப் பழக்கத்திலிருந்து இளைஞர்கள் விடுதலைபெற...

- போதை மற்றும் மது பழக்கத்தில் அடிமைப்படுவோருக்கு சபைகள், குடும்பங்கள் மற்றும் சமுதாயம் விடுதலைக்கு வழிநடத்தும் அடைக்கலமாகத் திகழ...
- சமூக ஊடக துஷ்பிரயோகத்திலிருந்து கிறிஸ்தவ இளைஞர்கள் பாதுகாக்கப்பட...
- திருச்சபைகள் கருணைமிக்க, நம்பிக்கை அளிக்கும் ஆதரவு மையங்களாக இருக்க, அதன் மூலம் தற்கொலை பிரச்சனைகளிலிருந்து விடுதலைபெற... (சங்.34:18)
- தற்கொலை மூலம் தங்கள் பிள்ளைகளை இழந்துத் தவிக்கும் பெற்றோருக்கு தேவன் சமாதானம் அருள...
- இளைஞர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தோருடன் குடும்ப மற்றும் சமூக உறவில் வளர, தனிமைப்படுத்திக்கொள்ளும் குணம் மாறிட...
- வாழ்க்கை முறை மற்றும் உடல் பருமன் பிரச்சனைகளிலிருந்து விடுபட, ஒழுக்கம், ஆரோக்கியமான உணவை தேர்ந்தெடுத்தல், உடல் பராமரிப்பு ஆகியவை கற்பிக்கப்பட... (1கொரி.10:31).
- இளைஞர்கள் தொழில் நுட்பத்தை ஞானமாய் பயன்படுத்தவும், அதற்கு அடிமைப்படாமலிருக்கவும்... (1கொரி. 6:12).
- மாணவர்கள் படிப்பு மற்றும் தேர்வு அழுத்தத்திலிருந்து விடுபட்டு தைரியமும், நம்பிக்கையும் பெறவும், அவர்களுக்கு ஊக்கம், ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு ஏற்பாடுகள் செய்யப்படவும் ஜெபிப்போம்.

**ஜெபம்:** கர்த்தாவே, எமது இந்திய இளைஞர்களை உம்மிடம் அர்ப்பணிக்கிறோம். அவர்கள் உம்மால் படைக்கப்பட்ட உமது பிள்ளைகள். அடிமைத்தனம், வேலை இழப்பு, மன தளர்ச்சி, உடல் சோர்வு ஆகியவற்றிலிருந்து விடுவித்து நம்பிக்கை, ஞானம் மற்றும் உமது வல்லமையால் நிரப்பும். கல்வி, வேலை, குடும்பம், சமுகம் என எல்லாத் துறைகளிலும் உம்மை மகிமைப்படுத்தும் தலைமுறையை எழுப்பும். இந்திய இளைஞர்கள் கிறிஸ்துவின் அன்பை உலகமெங்கும் வெளிப்படுத்தும் ஒளியாக வளரட்டும். ஆமென்!

**அருள்திரு. காட்வின் கிருபாகரன்,** மிஷனெரி-ஜார்கண்ட்
**திரு. ஆசீர் டேனியல்,** வாலிபர் பிரிவு-ரெட்ஹில்ஸ்


## விசுவாச வியாபாரிகள் மற்றும் தாங்குவோர் குடும்பக் கூடுகை

### திருவள்ளூர் மண்டலம்

நாள்: 25.01.2026 ஞாயிறு மாலை 4.30 மணி முதல் 8.00 மணி வரை
இடம்: ஜெய கிறிஸ்து திருமண மஹால், தண்டுரை, பட்டாபிராம்.
செய்தியாளர்: **அருள்திரு. பால் சாலமோன், அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்**
பணித்தள பகிர்வு: **சகோ. ஆபிரகாம்,** ஒடிசா
தொடர்பு: 044-26852200

# அறிவியல் கண்காட்சி

## தூய தாமஸ் மேல்நிலைப் பள்ளி, ஜாவ்டா





நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெரிதான கிருபையினால் மாணவர்களிடையே அறிவியல் கற்றல், படைப்பாற்றல் மற்றும் நடைமுறை அறிவை ஊக்குவிக்கும் நோக்குடன் குஜராத்திலுள்ள நமது தூய தாமஸ் பள்ளியில் 25.11.2025 அன்று அறிவியல் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தோம். இந்த கண்காட்சியை தலைமை விருந்தினராக வந்திருந்த ஜாவ்டா சி.என்.ஐ. திருச்சபையின் போதகர் அருள்திரு. கௌதம் மாலா அவர்கள், பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து தொடங்கி வைத்தார். ஓய்வு பெற்ற அறிவியல் ஆசிரியை திருமதி. எம். மாலா ரூபன் அவர்களும், நமது பள்ளியின் முன்னாள் மாணவர் திரு. டேவிட் அவர்களும் நடுவர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். தலைமை விருந்தினரும், நடுவர்களும் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி, புதுமையான மாதிரிகள் மற்றும் திட்டங்களை உருவாக்கிய மாணவர்களின் முயற்சிகளைப் பாராட்டினர். பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து தங்கள் திட்டங்களை ஆராய்ச்சி செய்து தயாரித்து வழங்கினர். அவர்களின் படைப்பாற்றல், ஆர்வம், கடின உழைப்பு மற்றும் அறிவியல் அறிவு ஆகியவை அவர்களின் மாதிரிகளில் மறுக்கமுடியாதபடி மிக தெளிவாகத் தெரிந்தன. தயாரிப்பின்போது ஆசிரியர்கள் வழிக்காட்டுதலையும், யோசனைகளையும் வழங்கினர். அருகிலுள்ள பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் வழங்கப்பட்ட படைப்பு யோசனைகளால் ஈர்க்கப்பட்டனர். பலரும் மாணவர்களின் தன்னம்பிக்கையையும், தகவல் தொடர்பு திறன்களையும் பாராட்டினர். பார்வையாளர்கள் நேர்மறையான கருத்துக்களைத் தெரிவித்தனர். மேலும் இந்த கண்காட்சி மாணவர்கள் அறிவியலில் நடைமுறை அறிவைப்பெற உதவியதாக கூறினர். ஒட்டுமொத்தமாக இந்த அறிவியல் கண்காட்சி வெற்றிகரமாகவும், ஊக்கமளிப்பதாகவும் மாணவர்களின் தனித்துவமான திறமைகளையும், அறிவியல் ஆர்வத்தையும்/அறிவையும் வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குவதாகவும் அமைந்தது.

**திரு. ஹரிபாபு,** முதல்வர் – தூய தாமஸ் மேல்நிலைப் பள்ளி, ஜாவ்டா.

# பணித்தள விஜயம்




தேவ கிருபையால் சென்னை அம்பத்தூரிலிருந்து 33 பேர் கொண்ட குழுவினராக 2025 நவம்பர் 14 முதல் 16ஆம் தேதி வரை ஜார்கண்ட் மாநிலத்தில் நமது பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றிருந்தோம். நம் மிஷனெரிகள் மூலம் மால்தோ மற்றும் சந்தால் மக்கள் மத்தியில் தேவன் தந்த பெரிய அறுவடையைக் கண்டு அவரைத் துதித்தோம். 16.11.25 ஞாயிறு தேலோ பணித்தளத்தின் குட்டிபேடா கிராமத்தில் கட்டப்பட்ட புதிய ஆலய பிரதிஷ்டையில் பங்குபெற்றோம். புதிய ஆலயத்தை நமது மிஷனெரிகள் Rev. ஜீவன் ரஞ்சன் மற்றும் Rev. அருளானந்தம் அவர்கள் திரியேக தேவ நாமத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த பெரிய ஆலயத்தை அம்பத்தூர் ஸ்கேன் ஐக்கியத்தைச் சார்ந்த வியாபார பெருமக்கள் கட்டி கொடுத்தார்கள். அம்பத்தூர் ஸ்கேன் ஆதரவாளர்கள் ஆலயத்தை திறந்து வைத்தார்கள். இது அம்பத்தூர் ஸ்கேன் மூலம் கட்டப்பட்ட இரண்டாவது ஆலயம். சபை விசுவாசிகள் ஆடல், பாடலுடன் எங்களை வரவேற்று கால்களை கழுவினார்கள். அவர்கள் எங்கள் கால்களை கழுவும்போது இயேசுவின் தாழ்மையை உணர்ந்தோம்.

இந்த ஆலயத்தின் சுற்றுச் சுவரை USAவில் உள்ள Dr. தர்ம மதுரம் மற்றும் திருமதி. ஐடா மதுரம் அவர்கள் கட்டிக் கொடுத்தார்கள். முன்னதாக நமது இயக்கத்தின் இரண்டு விடுதிகளைப் பார்வையிட்டோம். நம் பிள்ளைகளின் ஜெபம், பாடல் மற்றும் நிகழ்ச்சிகள் மிக சிறப்பாக இருந்தது. பின்பு மால்தோ சமுதாய கல்லூரி மற்றும் தூய தாமஸ் ஆங்கில பள்ளியைப் பார்வையிட்டோம். ஜார்கண்டில் கோதுமை மணிகளாக விதைக்கப்பட்ட மிஷனெரிகளின் கல்லறைகளையும் பார்வையிட்டோம். அவர்களின் தியாகம் எங்கள் உள்ளங்களை அசைத்தது. எனவே இன்னும் அதிகமாய் ஜெபிக்க வேண்டும் என்று தீர்மானத்தோடும், ஆத்துமபாரத்தோடும் திரும்பினோம். தேவனுக்கே மகிமை!

**திரு. M. யோகராஜ்,** கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர்–அம்பத்தூர்.



*நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும். எரேமியா 29:7*

## குடியரசு தின நல்வாழ்த்துக்கள்



## பணித்தள விஜயம்

வேலூர் சி.எம்.சி.யில் பணிபுரியும் 7 பேருடன் குழுவாக நவம்பர் 28 முதல் 30 வரை ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள மால்தோ மற்றும் சந்தால் பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றிருந்தோம். 28ஆம் தேதி இரவில் தாஸ் இன மக்கள் மத்தியில் பர்ஹர்வாவில் நடைபெற்ற இரவுக்கூடுகையில் கலந்துகொண்டோம். 29ஆம் தேதி காலை மிஷனெரிகளின் கல்லறைகள் மற்றும் EHA மருத்துவமனையையும், மதியம் பந்தேனி பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு மையத்தையும் பார்வையிட்டு, அன்று மாலை சண்டிகோலா கிராமத்தில் இயங்கும் நமது மருத்துவமனையையும் பார்வையிட்டு இரவில் சோட்டாகக்ரியில் தங்கினோம். 30ஆம் தேதி காலை லிட்டிபாடா பணித்தளத்தில் சந்தால் மக்களுடன் இணைந்து தேவனை ஆராதித்தோம். மாலை பர்ஹர்வாவிலுள்ள சந்தால் சிறுமியர் விடுதியை பார்வையிட்டதோடு அங்கு பணிசெய்யும் நமது மிஷனெரிகள், விடுதி ஊழியர்கள், விடுதி பிள்ளைகள் யாவரையும் உற்சாகப்படுத்தி அன்று இரவு அங்கிருந்து புறப்பட்டு வேலூர் வந்து சேர தேவன் கிருபை செய்தார். இந்த பணித்தள விஜயம் மூலம் எங்கள் குழுவினர் இன்னும் அதிகமாய் ஊழியத்தில் ஈடுபட உற்சாகம் பெற்றார்கள்.

**அருள்திரு. எட்வின் செல்வராஜ்,** விரிவுப்பணி செயலர் - வேலூர்.

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. T. சாமுவேல் பகவன்தாஸ் அவர்கள் அரக்கோணத்திலுள்ள தூய ஆண்ட்ரூஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகவும், துணை தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மிகவும் தாழ்மை குணமுள்ளவர், எல்லோரிடமும் அன்பாக பழகுபவர். திருச்சபை ஊழியத்திலும், மிஷனெரிப் பணியிலும் உற்சாகத்துடன் ஈடுபடுபவர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஜெபக்குழுத் தலைவராகவும், கௌரவ முன்னேற்றப்பணி செயலராகவும் ஊழியம் செய்து வந்தவர். மிஷனெரி ஊழியத்திற்காக, ஊழியர்களுக்காக பாரத்துடன் ஜெபித்து மற்றவர்களையும் ஜெபத்தில் உற்சாகப்படுத்தியவர். முதிர் வயதிலும் தன்னால் நடக்க முடியாத சூழ்நிலையிலும் கூட மற்றவர்களின் உதவியுடன் ஒவ்வொரு இல்லங்களையும் சந்தித்து ஜெபித்து காணிக்கை சேகரிப்பதிலும், வாராந்திர ஜெபக்கூட்டம் நடத்துவதிலும் முக்கிய பங்கு வகித்தவர். 19.09.2025 அன்று தனது 81வது வயதில் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். அவர் விட்டுச் சென்ற ஒரே மகன் ஜாஷ்வாவின் ஆறுதலுக்காக, அவரின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

**திரு. ராஜசேகர்,** கௌரவ விரிவுப் பணி செயலர் - அரக்கோணம்



## மிஷனெரி பிரதிஷ்டை

தேவனுடைய பெரிதான கிருபையினால் 19.10.2025 அன்று நமது இரண்டு மிஷனெரிகளை சென்னை, மணலி ACA பெத்தேல் திருச்சபையின் மூலம் பிரதிஷ்டை செய்ய தேவன் உதவி செய்தார். இந்த பிரதிஷ்டை ஆராதனையை போதகர் திரு. ஜோஸ்வா அவர்கள் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். அந்நாளில் அருள்திரு. இஸ்ரேல் டேனியல் அவர்கள் தேவ செய்தியினை பகிர்ந்துகொண்டார்கள். மிஷனெரிகளின் சாட்சி திருச்சபை மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

**திரு. தூயமணி,** கௌரவ விரிவுப்பணி செயலர் - மணலி, வட சென்னை



## ஆலய சுற்றுச் சுவர் பிரதிஷ்டை

தேவனுடைய பெரிதான கிருபையினால் கொளத்தூர், சென்னை திரு. மனோஜ் அவர்கள் தலைமையில் குழுவாக மூன்று இலட்சம் செலவில் கர்நாடகாவின் கோலார் பிராந்தியத்திலுள்ள மாஸ்தன ஹள்ளி கிராம ஆலயத்தின் சுற்றுச் சுவரை கட்டிக் கொடுக்க ஆண்டவர் உதவி செய்தார். இந்த சுற்றுச் சுவர் பிரதிஷ்டை ஆராதனை 22.11.2025 அன்று நடைபெற்றது. கொளத்தூர் பகுதியிலிருந்து ஒன்பது வாலிபர்கள் இதில் கலந்துகொண்டனர். மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளின் சாட்சி சிறப்பாக அமைந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. வெஸ்லி,** கௌரவ விரிவுப்பணி செயலர்-வட சென்னை

## குடும்பக் கூடுகை

### செங்குன்றம் - காரனோடை - காவாங்கரை & புழல்

நாள்: 04.01.2026 ஞாயிறு மாலை 5.30 முதல் 8.30 வரை

இடம்: இ.சி.ஐ. தூய பவுல் ஆலயம், கருணாநிதி தெரு,
(கணேஷ் எடைமேடை எதிரில்) காந்தி நகர், செங்குன்றம், சென்னை - 52.

செய்தி: **திரு. டி. எட்வர்ட்,** சென்னை

பணித்தள பகிர்வு: **திரு. எம். அருண்குமார்,** மிஷனெரி- சத்தீஸ்கர்

தொடர்பு: 9443091378 / 9840476641 / 9952005188

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

திருவள்ளூர் மண்டலம்

அமைத்து நடத்தும்

# வாலிபர் முகாம்

2026

ஜனவரி

காலை 15 (வியாழன்) 9.30 மணி

முதல்

மதியம் 17 (சனி) 1.00 மணி

வரை

இடம்: **இறைவனின் தோட்டம்**

சென்றாயன் பாளையம், பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம்.

செய்தியாளர்கள்:

Rev. **விஜய் P. ஐசக்,** G.S., FMPB

Dr. **ஜான் டேனியல்,** SAIACS – Bangalore

Rev. **S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்,** FMPB

Rev. **ரவிக்குமார்,** FMPB, Salem

Rev. **P. டேவிட்,** FMPB,Kovai

சகோ. **விக்னேஷ்வரன்** (மிஷனெரி, குஜராத்)

LIVELY SONGS
ENGAGING SESSIONS
INSPIRING MESSAGES

- வயது வரம்பு: 17 முதல் 30 வரை
- பதிவு கட்டணம் : ரூ.150/-
- வேதாகமம் மற்றும் படுக்கை கொண்டு வரவும்.
- ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கருப்பொருள்

**எழும்பிப் பிரகாசி**

ஏசாயா 60:1



## அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புக்கு

FMPB, PH: 98940 60046,
98419 36067, 96001 14574

GO INTO ALL THE WORLD AND PREACH THE GOSPEL TO ALL CREATION

**friends missionary prayer band**

Go or Send

## To tend the olive shoots- the second generation believers

# WANTED Teachers

# WE ARE HIRING

## PASSIONATE AND QUALIFIED TEACHERS

**School at Jharkhand (Pandeni)**
Mathematics / Hindi / History / PET

**School at Gujarat (Jhawda)**
Physics / Chemistry


### WHY JOIN US?

- It is an opportunity to serve our Lord Jesus Christ through your profession for a few years in your lifetime
- This is an investment for The Lord's Kingdom's sake in the life of young believers.
- An opportunity to transform communties by giving good education to them.

### WHO CAN APPLY

- A candidate who is born again and with a Missionary heart who are willing to stay on campus
- A candidate with good knowledge of the subject
- A candidate with a good communication skill in English

Join our team as we are involved in shaping the future of the children from the marginalised society!



**Salary for Teachers**

Any UG degree with BEd. - Rs.25000/-
Any PG degree with BEd - Rs. 27000/-

Send your Resume to the HRD
**hrd@fmpb.org**

*For further details please contact:* **FMPB,** 29, High School Road, Ambattur, Chennai 53. ☎ 044-26570404 / 26573353

## WE ARE HIRING

**Born again Christian**



## Administrative Officers
## Child Care



**Qualification** Master of social work (MSW / Postgraduate)

**Experience** minimum 2 years of experience in child welfare, counselling or community development (freshers with passion and aptitude may also apply).

**About us** we are a faith- based, non-profit organisation committed to the holistic development of children and youth, nurturing them with love, care and opportunities for a brighter future.

**How to apply** Apply on or before 15th November to **hrd@fmpb.org**




**Location:** Ambattur, Chennai

**Type:** Full-time

**Experience:** Minimum 5 years

**Eligibility:** Born-again Christian

## MEDIA PERSONNEL

**Requirements**:
Proficient in handling cameras
Working knowledge of Final Cut Pro (FCP), Adobe Premiere Pro, and After Effects

## GRAPHIC DESIGNER

**Requirements:**
Well versed in Adobe Photoshop, InDesign, and CorelDRAW

**How to Apply:** Kindly send your resume to:
communication@fmpb.org, media@fmpb.org Contact: **98419 73020**

# காலச் சுவடுகள்



**டாக்டர். மார்கஸ் விட்மேன்**
(1802 - 1847)

## தியாகமுள்ள ஒரு வாழ்வு

ஒரு காலைப்பொழுதில் டாக்டர். மார்கஸ் விட்மேன் வைலட்புவிலுள்ள (ஒருவிதமான புல்வெளி) தனது ஊழிய வளாகத்திற்கு வந்தடைந்தார். பல வருடங்களுக்கு முன் இந்த இடம் காட்டு மிருகங்கள் மற்றும் பூர்வீக பழங்குடியினர் வசிக்கும் பாலைவனமாக காட்சியளித்தது. ஆனால் விட்மேனின் முயற்சியால் இப்பொழுது இவ்விடம் பழத்தோட்டங்களாகவும், பயிரிடும் வயல் நிலங்களாகவும், கால் நடைகளை வளர்க்கும் பண்ணைகளாகவும் மற்றும் சோளம் அரைக்கும் மில்களாகவும் மாறியிருந்தது. ஒரேகான் நாட்டில் நடைப்பெற்ற ஒரு கலாச்சார மோதல் தான் இவ்வித மாற்றத்திற்கு காரணமாக இருந்தது. ஒரு பக்கத்தில் பூர்வீக அமெரிக்க கயூஸ் பழங்குடியினரும், மற்றொரு புறம் மேற்கத்திய வெள்ளையர்களின் ஆக்கிரமிப்புகளும் இருந்தன. இவ்விரு கூட்டத்திற்கு இடையே மருத்துவ மிஷனெரியான விட்மேனும், அவரது மனைவியான நார்சிசா விட்மேனும் நின்றனர்.

டாக்டர் மார்கஸ் விட்மேன் நியூயார்க்கின் பெடரல் ஹாலோவில் 04.09.1802 அன்று பிறந்தார். மருத்துவ மிஷனெரியாக ஓரேகான் நாட்டில் வசிக்கும் கயூஸ் எனப்படும் பூர்வீக இந்தியர்கள் மத்தியில் குடும்பமாக ஊழியம் செய்தார். இவரது மனைவி நார்சிசா திருமணத்திற்கு முன்பே மிஷனெரியாக பணிசெய்ய தன்னை ஒப்புக்கொடுத்தவர். 1836இல் திருமணம் செய்துகொண்ட இத்தம்பதியினர் நியூயார்க்கிலுள்ள கிராமப்புறங்களை விட்டு ABCFM ஸ்தாபனத்தின் மூலம் மிஷனெரியாக நியமிக்கப்பட்டு பனிசறுக்கு வண்டி, கால்வாய் படகு, குதிரை பயணம் மற்றும் கால்நடையாக ராக்கி மலைகளை கடந்து மே 25 அன்று வாலா வாலா அருகே ஒரு மிஷனை நிறுவினர். ஆரம்பக் காலத்தில் கயூஸ் பழங்குடியினரில் சிலர் தங்களின் பழைய வாழ்வான சூனியம் செய்தல், முரட்டாட்டம் மற்றும் தங்களுக்கு தேவையில்லை என எண்ணும் குழந்தைகளை உயிருடன் புதைக்கும் வழக்கங்கள் போன்றவற்றை விட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அம்மக்கள் விவசாயம் செய்யவும், கால்நடைகளை பராமரிக்கவும், சோப்பு, மெழுகு வர்த்தி, வெண்ணெய் செய்யவும் மற்றும் தங்கள் குடும்பத்தினரை பரிவுடன் கவனித்துகொள்ளவும் கற்றுக்கொண்டனர்.

## மருத்துவ ஊழியம்

அனைத்து கயூஸ் இன மக்களும் விட்மேன் தம்பதியினரை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் மருத்துவமனை, பள்ளிக்கூடம், அனாதை குழந்தைகளுக்கான இல்லம் போன்றவற்றை நிறுவினர். இவர்களைத் தொடர்ந்து வெள்ளையர்களின் குடியேற்றம் அதிகமானது. இதனால் பூர்வீக மக்களின் கலாச்சாரம் பேரழிவை சந்திக்கும் என கயூஸ் மக்கள் அஞ்சினர். வெள்ளையர்கள் கயூஸின் நிலங்களையும், குதிரைகளையும் கைப்பற்றுகிறார்கள் என குற்றம் சாட்டப்பட்டது. இத்தம்பதியினரைக் குறித்த பயமும், சந்தேகங்களும் அம்மக்கள் மத்தியில் அதிகரித்தது. ஏனென்றால் 1847இல் கருஞ்சிவப்பு நோய் மற்றும் தட்டம்மை தொற்றுநோய் அப்பழங்குடி மக்களிடம் பரவியபோது விட்மேன் தம்பதியினர் தங்களால் இயன்ற மருத்துவ உதவிகளைச் செய்தபோதிலும், குறைவான நோய் எதிர்ப்பு சக்தி கொண்டபடியினால் வெள்ளையர்களைவிட பூர்வீக மக்களில் அநேகர் இறந்தனர். ஆனால் விட்மேன் விஷம் கொடுத்து கொன்று வருவதாக மக்கள் சந்தேகித்தனர். (வேட்டையாடும் ஓநாய்களை விட்மேன் விஷம் கொடுத்து கொன்றதை கயூஸ் மக்கள் அறிந்திருந்தனர்) எனவே பூர்வீக மக்கள் டாக்டர் விட்மேனை பழிவாங்க விரும்பினார். தங்கள் உயிருக்கு ஆபத்து இருப்பதை அறிந்த போதிலும் விட்மேன் தம்பதியினர் தங்கள் அர்ப்பணிப்பை விட்டு பின்வாங்கவில்லை. (கயூஸ் மக்களின் வழக்கத்தின்படி மருத்துவர் ஒருவர் நோயை குணமாக்க இயலவில்லை என்றால் அம்மருத்துவர் கொல்லப்படுவார்.)

விட்மேன் தம்பதியினர் தங்களிடமிருந்த சொத்து, வீடு, குடும்பம், நண்பர்கள் மற்றும் சரீர ஆரோக்கியம் அனைத்தையும் சுவிசேஷத்திற்காக இழந்தார்கள். நார்சிசாவின் உடல் நிலையும் சீராக இல்லை, அவர்களின் இரண்டு வயது குழந்தை ஆலிஸ் கிளாரிசா வாலா வாலா என்ற நதியில் விழுந்து மரித்துப் போனாள். இவை அனைத்திற்குப் பின்னும் இறுதியாக தங்களிடமிருந்த தங்கள் ஜீவனையும் கயூஸ் மக்களுக்காக கொடுக்க துணிந்தனர்.

## படுகொலை

ஒரு நாள் இரவு விட்மேன் தனது ஊழிய வளாகத்தை சென்றடைந்தவுடன் தனது மனைவியை படுக்கைக்கு அனுப்பிவிட்டு உடல்நிலை சரியில்லாத வெள்ளையர் மற்றும் அங்குள்ள பழங்குடியினரின் குழந்தைகளை பராமரித்துக் கொண்டிருந்தார். அந்நிமிடங்கள் தான் தன் வாழ்வின் இறுதி நிமிடங்களென அவர் நினைத்திருக்க மாட்டார்.

1847, நவம்பர் 29ஆம் தேதி விட்மேன் குடும்பத்தினருக்கு விரோதமாக கயூஸின் தலைவர் திலூகைக்ட் மற்றும் சிலர் விட்மேன் வீட்டிற்கு மருத்துவ உதவியை நாடி வந்ததைப்போல அவரை அனுகியபோது, அவர் கருணையோடு அவர்களுக்கு உதவ முற்பட்டார். அச்சமயம் டோமாஹாக்ஸ் என்ற ஆயுதத்தால் விட்மேன் தலையில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து துப்பாக்கியால் அங்குள்ளவர்களையும் சுட ஆரம்பித்தனர். தூங்கிக்கொண்டிருந்த நார்சிசா துப்பாக்கி சத்தத்தைக் கேட்டு எழுந்தவுடன் நிலைமையை புரிந்துகொண்டு தன்னோடு இருந்த அனாதை பெண் குழந்தைகளின் ஜீவனை பாதுகாக்க அறையை தாளிட்டுக்கொண்டார். ஆனாலும் ஜன்னல் வழியாக நார்சிசாவின் தோள்பட்டையில் சுட்டனர். அந்நாளில் அநேக வெள்ளையர்கள் சுட்டு கொல்லப்பட்டனர்.

ஆண்ட்ரு ரோஜர் என்ற மற்றொரு ஊழிய மாணவர் தன் ஜீவனைப் பணயம் வைத்து அந்த வளாகத்திலிருந்தவர்களை பாதுகாக்க போராடியபோது அவரும் சுடப்பட்டார். காயமுற்ற அவர் மரணத் தருவாயிலும் உடைந்த துப்பாக்கியைக் கொண்டு ஒரு மணி நேரமாக பிறரைக் காக்க போராடினார்.

தோள்பட்டையில் அடிப்பட்ட நார்சி சாவையும், உடன் இருந்த குழந்தை களையும் காப்பாற்றுகிறோம் என்று பொய் வாக்குறுதியளித்து அவர்களை வெளியே வரவழைத்தனர். வெளியே வந்தபோது வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த விட் மேனைக் கண்டார். அவர் தன் மனைவி யிடம் நான் உன்னை நேசிக்கிறேன் என்றும், ஆண்டவரிடம் செல்கிறேன் என்று விசுவாசிக்கிறேன் என்றும் கூறினார். நார்சிசாவையும் படுகொலை செய்தனர். இவர்கள் தங்கள் இறுதி மூச்சு வரை அனைத்தையும் சுவிசேஷத்திற்காய் தியாகம் செய்து ஜீவனை விட்டனர்.

மேலும் அப்பகுதியிலுள்ள அனைத்து வெள்ளையர்களையும் பிணைக் கைதி களாகப் பிடித்தனர். பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் முறைகேடாக நடந்துகொண்டு ஒருமாத காலம் சிறையிருப்பில் வைத்தனர். பின்னர் பல போராட்டங்களுக்குபின் விடுவிக்கப் பட்டனர். பல வருடங்களுக்குப் பின் அந்நாளில் நடந்த கொலைக்கு நியாயம் கிடைத்தது. கயூஸின் தலைவர் திலூகைக்ட் உட்பட ஐந்து பேர் தூக்கிலிடப்பட்டனர்.

## *தியாகத்தின் விளைவு*

இரத்த சாட்சிகளாய் அன்று மரித்த ஊழியர்களின் தியாகம் வீணானதோ? வைலட்பு என்ற இடத்தை அநேகர் அறிந்திடாதிருப்பினும் கிழக்கு தேசங்களின் செய்தித் தாள்களில் தலைப்பு செய்தியாக வெளிவந்தது. இச்செய்தித் தாள்களின் மூலம் விட்மேன் குடும்பத்தினர் அன்று கொல்லப்பட்ட தங்கள் குடும்பத்தாரைப் பற்றி அறிந்துகொண்டனர். இச்செய்தி காட்டு தீயைப்போல வாலிபர்கள் மத்தியில் பரவி, அவர்களுக்குள் ஒரு ஆத்தும தாகத்தை ஏற்படுத்தியதோடு அநேகர் தங்கள் வாழ்வினை ஆத்தும அறுவடை செய்ய ஒப்புக்கொடுத்தனர்.

விட்மேனின் நெருங்கிய நண்பனான ஹென்றி ஸ்பால்டிங் மறுபடியுமாக அதே இடத்திற்கு ஊழியத்திற்குச் சென்ற போது கயூஸ் மற்றும் நெஸ்பெர்சி மக்கள் மத்தி யில் மாபெரும் ஆத்தும அறுவடையைக் கண்டார். ஸ்பால்டிங் மூலம் கட்டப்பட்ட ஆலயம் இன்றும் விட்மேன் தம்பதி யினரின் நினைவாக காணப்படுகிறது. அமெரிக்காவில் விட்மேனின் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதில் அவரது ஒரு கையில் வேதாகமமும், மற்றொரு கையில் மருந்துப் பொருட்கள் அடங்கிய பையும் உள்ளது. இதுவே அவரது ஊழியத்தின் ஆதாரமாகவும், அடையாளமாகவும் இருந்தது. ஒருவேளை அவரின் பிரிவினை ஒருசாரார் ஏற்றுக்கொள்ள வில்லை என்றாலும், அவரின் தயவுள்ள தியாகம் வீணாகவில்லை.

இன்று உங்கள் கையிலிருப்பது என்ன? விட்மேன் தனது வேதாகமத்தையும், மருத்துவ சாதனங்களையும் கொண்டு தன் சொந்த வாழ்வினை பணயம் வைத்து கயூஸ் பழங்குடியினரின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவந்தார். உங்கள் கரங்களிலிருப்பது உங்கள் பணமா, படிப்பா, தாலந்தா, நேரமா? அதை தேவ ராஜ்யத்திற்கென ஞானமாய் செலவு செய்யலாமே! அவைகளை தேவ நோக்கம் நம் மண்ணில் நிறைவேறிட தேவனுக்கு ஒப்புக்கொடுப்போமாக!




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கோன்கா கிரி பாபு, திரு. கின் சாவ்ம்
திரு. மீனுகா அடப்பா மேத்யூ
திருமதி. சரிதா பால் சௌதரி ராஜேஷ்
திரு. ஹெபெல் ஹெம்ரோம்

# ஜம்மு

## ஆர். எஸ். புரா, சம்பா & ஜம்மு:

**சுர்கார் ரமேஷ்பாய் &
கவித் சுனிதாபேன்,
பித்யுத் குமார் சிங் &
சுசித்ரா லிம்மா**

**துதிக்க:** ராஜு மற்றும் சஞ்சய் குடும்பத்தினர் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். நான்கு பேர் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். நீரஜ், சீத்து, பிரியா, லிடியா தேவி ஆகியோர் முதன்முறையாக சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்டனர். சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து குடுராணி ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். அசுத்தாவியின் பிடியிலிருந்து நேஹா தேவிக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரெடியா, பொங்வால், விஜய்பூர், குலியான், சுங்வாலி, அக்னூர் ஆகிய இடங்களில் உள்ள எதிர்ப்புகள் நீங்கி மீண்டும் ஆராதனை ஆரம்பிக்கப்பட; அசுத்தாவியின் பிடியிலிருந்து கம்லேஷ் தேவி, சோனியா தேவி, அங்கித் குமார் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; 9 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் நிஷா தேவி, சுனிதா தேவி ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; ஜம்மு மற்றும் ஆர்.எஸ்.புரா பகுதிகளில் தடைகளை நீக்கி சுவிசேஷத்திற்கான திறந்த வாசலை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## ராம்நகர்:

**ஜாண் எஸுங் &
லிபெனி ஜமி**

**துதிக்க:** கன்னா, கோதாரி, லத்னா, கனாலா ஆகிய புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மூன்று கிராமங்களில் பின்தொடர்பணி செய்ய தேவன் உதவி செய்தார். சாமீர் மற்றும் மாஷா இன மக்கள் மத்தியில் புதிய தொடர்பாளர்களைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநிலை பாதிக்கப்பட்டுள்ள ராஜேந்தரை தேவன் குணப்படுத்த; அனிதா குடும்பம் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட காணப்படும் சமுதாய தடைகள் நீங்க; தப்லால் கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் எதிர்ப்புகள் மறைய; ராம்நகர் பகுதியில் ஆராதனைக் குழு நடத்த ஏற்ற இடத்தையும், அர்ப்பணமுள்ள ஊழியரையும் தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## 2
## ஜனவரி
வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மஹாலே ஏமன்பேன் பாங்சிங்
திரு. முன்னா மொஹன்தியர்
திரு. ரவுத் சுபாஷ்பாய் லானுபாய்
திரு. உப்தேஷ் குமார்

### பசோலி:
### அருண்காந்தா & ரேணு காந்தா

**துதிக்க:** தனிநபர் ஊழியம் மற்றும் கிராம சுவிசேஷ ஊழியத்தின் மூலம் அநேகருக்கு நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்துள்ளார். மனநோயிலிருந்தும், வலிப்பிலிருந்தும் ரவிந்தர் ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றார். நற்செய்தி அறிவிக்கச் சென்ற ஊழியர்களை எதிர்ப்பாளர்களின் கைகளுக்கு விலக்கி பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியிலும், பில்லி சூனிய கட்டுகளிலும் சிக்கியுள்ள மக்களை தேவன் விடுவிக்க; பசோலி பகுதியில் காணப்படும் எதிர்ப்புகள் மறைய; எதிர்ப்பினால் ஞாயிறு ஆராதனை நிறுத்தப்பட்டுள்ள பிளாயில் பகுதியில் மீண்டும் ஆலய ஆராதனை துவங்கப்படவும், விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் வேரூன்றி நிலைத் திருக்கவும் ஜெபிப்போம்.

### தார்: லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்

**துதிக்க:** தான்சிங் என்பவர் வாஞ்சையோடு சுவிசேஷத்திற்கு செவி சாய்த்து வருகிறார். ட்ரெடி பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஞாயிறு ஆராதனையில் அநேகர் வாஞ்சையுடன் கலந்துகொள்கின்றனர். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட பிமல் பிரகாஷ் ஊக்கமான ஜெபத்தின் மூலம் எழுந்து நடக்கும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டுள்ள மக்கான்சிங் மற்றும் தேஷ் ராஜ் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை முழுமனதுடன் விசுவாசித்து ஏற்றுக் கொள்ள; பாப்பர், தாட்வான், காட், மட்டி, காடி, டுனேரா, ராணிபூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கிராமத் தலைவர்களின் அனுமதி கிடைக்க; விசுவாசி ரவி எதிர்ப்பின் மத்தியிலும் தைரியமாய் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

## மரணத்தை ஜெயித்தவர்

*ஜார்கண்ட், ஹன்ஸ்டிகா பணித்தளத்தி லுள்ள லூசியா ஆலயத்தின் சபை மூப்பர் ஹொப்னா மராண்டி ஓராண்டாக சளியினால் அவதிப்பட்டு வந்தார். கடந்த மாதம் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்தும் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லாததால் மருத்துவர்களால் கைவிடப்பட்டார். மரிக்கும் நிலையில் இருந்த அவரை ரூ.10,000/- கொடுத்து எடுத்துச் செல்லும்படி உதவி மருத்துவர் கூறினார். ஆனால் அவரது மனைவியிடம் 4,000 ரூபாய் மட்டுமே இருந்ததினால் அதை கொடுத்துவிட்டு அவரை வீட்டிற்கு கொண்டு வந்தார். ஊரார் அவர்களை இழிவாய் பேசினர். இனி ஆலய ஆராதனை நடைபெறாது என்று தூற்றினர். நமது ஊழியர் குடும்பத்தினருடன் இரண்டு நாள் உபவாசித்து ஜெபித்ததின் விளைவாக தேவன் அவருக்கு அற்புத சுகமருளினார். தற்போது அவர் முன்போலவே ஆலய ஆராதனையை உற்சாகத்துடன் நடத்தி வருகிறார். அல்லேலூயா! நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னுடேகூட இருக்கிறீர்.*

**3**
**ஜனவரி**
**சனி**

# ஹிமாச்சலப் பிரதேசம்

### தானேதார்:

**ஜெபர்சன் & காயத்ரி**

**துதிக்க:** வாலிபர் முகாமில் 40க்கும் அதிகமானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். கேகார் கிராமத்தில் நடைபெற்ற முகாமில் விசுவாசிகள் உற்சாகத்தோடு பங்குபெற்றதோடு ஒருவர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். இரவில் ஊழியத்தை முடித்து திரும்பி வரும் வழியில் சிறுத்தையிடமிருந்து ஊழியர்களை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். கடுமையான குளிரின் மத்தியில் விசுவாசிகளையும், ஊழியர்களையும் பாதுகாத்து வரும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தானேதார் பணித்தளத்திலிருந்து 20 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள உயரமான ஹட்டு சிகரத்தில் அமைந்துள்ள கோவிலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு கைப்பிரதிகள் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் ஜீவ தேவனை கண்டுக்கொள்ள; தசாமோலகாட் மற்றும் கானேட்டி ஆகிய கிராமங்களில் விரைவில் ஆராதனைக்குழு துவங்கப்பட; தன் தாயை இழந்துத் தவிக்கும் சஞ்சய் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும், புற்றுநோயினால் இறந்துபோன அஞ்சுவின் குடும்பத்தினருக்கும் தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் அருளி, விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி உதவி செய்ய ஜெபிப்போம்.

### ரிகாங்பியோ:

**சங்கர் ஏ. & ரூத் மேரி**

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் குடியின் அடிமைத்தனத்திலிருந்து மாரீஷ்மான் என்பவருக்கு தேவன் விடுதலை அருளினார். அநேக நாட்கள் காய்ச்சல் மற்றும் கடுமையான தலைவலியால் அவதியுற்ற நிர்மலா மருத்துவ சிகிச்சை மூலம் குணமாகாத நிலையில் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றுள்ளார். ராஜ் மற்றும் சீதா குடும்பத்தினர் ஆலய ஆராதனையில் உற்சாகத்தோடு கலந்துகொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குதிங்காலில் அதிக வேதனை அனுபவித்து வரும் ராம்பியாரியை தேவன் விரைவில் குணப்படுத்த; விசுவாசி சந்திர மோனியின் மகன் வங்கியில் கடனாக வாங்கிய 5 இலட்சத்தை தற்போது வட்டியுடன் சேர்த்து 40 இலட்சமாக கொடுக்கவேண்டும் என்று வங்கி அதிகாரிகள் வழக்கு பதிவு செய்துள்ளனர். சந்திரமோனிக்கு தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜவி மார்கரெட் நிக்கல்சன்
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திரு. பும்சோன்சின்
திரு. லால் கிஷோர் முர்மு

## ஜியோரி:

### ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்

**துதிக்க:** கடுமையான விபத்தில் காயமுற்ற ரவி சிகிச்சையின் மூலம் சுகம்பெற்றார். அசுத்தாவியின் பிடியிலிருந்து சாந்தாவுக்கு தேவன் விடுதலை அருளினார். 36 கிராமங்களில் இரவு கூட்டங்கள் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். ஒருவர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இதயப்பிரச்சனையிலிருந்து அம்ரித்தாவுக்கு தேவன் பூரண சுகமருள; மூளையிலுள்ள இரத்தக் குழாயில் வீக்கம் ஏற்பட்டு கஷ்டப்பட்டு வரும் சாந்தாவுக்கு தேவன் அற்புத சுகமருள; ஹிராலாலின் சகோதரனின் அறுவை சிகிச்சைக்கான பணத் தேவைகளை தேவன் சந்திக்க; மனநலம் பாதிக்கப்பட்டுள்ள மீனா குமாரிக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## ரோஹ்ரு & நேர்வா:

### எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** நிஷா, கல்பனா மற்றும் அக்கன்ஷா ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றனர். டியூனி என்று இடத்தில் ஆலயம் கட்ட நமது தன்னார்வ ஊழியர் தனது நிலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார். நான்கு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். விபத்தினால் ஏற்பட்ட கை எலும்பு முறிவிலிருந்து ஊழியரை தேவன் குணப்படுத்தினர். இந்நாட்களில் சபை வாலிபர்கள் ஆலய காரியங்களில் உற்சாகத்தோடு ஈடுபட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து ரேகா, பூஜா, பூணம், கெஸ்டா ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; மானோட்டி கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு துவங்க ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற; நேர்வா மற்றும் ரோஹ்ரு பணித்தளங்களில் விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையில் கிரமமாக பங்குபெற; ரஞ்சுவை வலிப்பு நோயிலிருந்தும், மானிஷாவை ஒற்றைத் தலைவலியிலிருந்தும் தேவன் குணப்படுத்த; பரானு கிராமத்து விசுவாசிகள் எதிர்ப்பைக் கண்டு பயப்படாமல் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; சுதேச ஊழியர் சிக்கேந்தர் குடும்பத்திற்கும், மிஷனெரி இம்மானுவேல் குடும்பத்திற்கும் தேவன் புத்திர சந்தானம் அருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுரேஷ் மால்தோ, செல்வி. லிங்நீச்சாங்
திருமதி. இவாஞ்சலின் சாம்ராஜ்

**ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** இரண்டு இடங்களில் நடைபெற்ற உபவாச கூடுகையில் விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு ஜெபித்தனர். கடுமையான கால்வலியினால் கஷ்டப்பட்டு வந்த கலர்மணி, நெஞ்சு வலியினால் அவதிப்பட்டு வந்த அர்ஜுன் ரோக்கா மற்றும் ஷிம்லா ஆகியோரும் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். புதிய தொடர்பாளரான அம்ரித்தா ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். ஆலய கமிட்டி உறுப்பினர்கள் சுவிசேஷ ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு மாதங்களாக வயிற்று வலியினால் அவதியுற்று வரும் மாயாதேவிக்கு தேவன் சுகமருள; அம்ரித்தா & ரேகாவின் கணவன்மார்கள் மற்றும் சுனிதா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; அசுத்தாவியின் பிடியினால் தன்னைத்தானே காயப்படுத்திக்கொண்டிருக்கும் நக்ஸ் என்ற சிறுவனுக்கு தேவன் விடுதலை அருள; அவேரா மற்றும் காஷாபாத் பகுதிகளில் ஆலயம் கட்ட விரைவில் அரசாங்க அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### புத்லாடா:

**பிரதாப் ரஹாங் & ரேஷ்மி**

**துதிக்க:** அமீர்கார், துண்டியா புட்கார் மற்றும் சோட்டியான் கிராமங்களில் மக்கள் வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டனர். நமது விசுவாசி வாலின் ஹர்பிரீத் சிங்கிற்கு இந்திய இராணுவத்தில் வேலை கிடைத்துள்ளது. பிசாசின் பிடியினால் அநேக நாட்களாக தூங்க இயலாமல் தவித்து வந்த சுன்ஹெரி தேவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். தொடர் ஜெபத்தின் மூலம் ரோஹிராம் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகளை நீக்கி தேவன் சமாதானம் அருளினார். சிக்கன்குனியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ரமேஷ் குமாரின் குடும்பத்தினருக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள சத்சங் கூட்டங்கள் தடையின்றி நடைபெற; இருளில் வாழும் ஜனங்கள் தேவனின் மெய்யான ஒளியை கண்டுக்கொள்ள; தல்வாடி, மூணக், பரேட்டா, புத்லாடா ஆகிய கிராமங்களில் மக்கள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; இரண்டு வாரங்களாக இரத்த வாந்தியினால் அவதியுறும் காலாசிங்கை தேவன் பூரணமாய் குணப்படுத்த; இந்திய இராணுவத்தில் இணைய தேர்வு எழுதவுள்ள தில்பிரீத் சிங்கிற்கு தேவன் ஞானம் அருள; சுதேச ஊழியர் ராம்சிங், தன்னார்வ ஊழியர்கள் சுதேஷ்ராணி மற்றும் ஜாஷ்பல் சிங் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்பட; கடுமையான குளிர் காலத்தில் தேவன் ஊழியர்களையும், விசுவாசிகளையும் பாதுகாக்க ஜெபிப்போம்.

## 6 ஜனவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜென்னிஸ் J.B

### மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், ஆறு புதிய குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். மான்சா கிராமத்தில் இரண்டு நாட்கள் கன்வென்ஷன் கூட்டங்கள் தடையின்றி நடைபெறவும், அதில் 15 விசுவாசிகள் தங்களை தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கவும், நான்கு குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் திரும்பவும் தேவன் உதவி செய்தார். ஜாஷ்பிரீத் சிங்கிற்கு அரசு வேலை கிடைக்க தேவன் உதவி செய்தார். மனநோயினால் பாதிக்கப்பட்ட வித்யா தேவியையும், மாரடைப்பினால் பாதிக்கப்பட்ட அவரது கணவர் ராஜேந்திர சிங்கையும் தேவன் குணப்படுத்தினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெற; ஷேர்கா ஷேதாவாலா, லக்கி வாலா, கமி வாலா, பிம்ரா, சேனா மற்றும் மால்சிங் வாலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள; போஹா மற்றும் ஜூனிர் ஆகிய பகுதிகளில் துணை மையம் அமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிபெற; சுவாச பிரச்சனையிலிருந்து ராம்சிங், அதிக நீரிழிவினால் பாதிக்கப்பட்டு இன்சுலின் எடுக்கும் மன்பிரீத் கௌர் (18 வயது), பிரதீப் சிங் (17 வயது) ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; விபத்தினால் காயமடைந்துள்ள அம்ரீத் சிங் மற்றும் ட்ரியா சிங் ஆகியோர் விரைவில் சுகம்பெற; போதைப்பழக்கத்திலிருந்து பல்தேவ் சிங் விடுபட ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி:
### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** பிரீத்தி மற்றும் ககன்தீப் குடும்பங்களை தேவன் புத்திர சந்தானத்தினால் ஆசீர்வதித்தார். விஷப் பாம்பின் கடியிலிருந்து ஷக்கினா தேவனால் பாதுகாக்கப்பட்டார். புதிய கிராமம் ஒன்றில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். அஹ்மத்கட் மண்டி ஆலயத்தின் சுற்றுச் சுவர் கட்டி முடிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராய்காட் மற்றும் ரோகிடா சபைகளில் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; காச நோயினால் அவதியுறும் அர்ஜுன், இரத்த வாந்தியினால் அவதியுறும் பல்வந்த் சிங் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; ஜன்டாலி பகுதியில் புதிய ஆராதனைக்குழு துவங்க இருக்கும் தடைகள் தகர்க்கப்பட; விபத்தினால் இடது கையில் காயம் ஏற்பட்டுள்ள மிஷனெரி கிருபா ரக்ஷனாவுக்கும், சிக்கன்குனியாவினால் பாதிக்கப்பட்டுள்ள இவரது மனைவி ஷக்கினாவுக்கும்,, முகத்தில் பரவிவரும் வெள்ளைத் தழும்புகளிலிருந்து இவர்களது மகள் கீர்த்தனாவுக்கும் தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமேஷ்வர் தயாள் நிர்மல்

## மலோட்:

**ஸ்டீபன். ஆர் & சிவகாமி**

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தருளினார். சபை வாலிபர் மன்வீருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்து தேவன் ஆசீர் வதித்துள்ளார். தொண்டையில் தொற்று ஏற்பட்டு பேசும் திறனை இழந்த போலாசிங்கிற்காக அவரது தாயும், மனைவியும் 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்ததின் விளைவாக போலாசிங் சுகம்பெற்று வருகிறார். விசுவாசமுள்ள ஜெபத்தின் மூலம் ஜஸ்பிரீத் கௌருக்கு அரசுப்பள்ளியில் ஆசிரியராக வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; பிட்டு மற்றும் ஜீரா குடும்பத்தினர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; விசுவாச வாலிபர்களான சந்திப், சன்னி, ஜாசி, மன்பிரீத் ஆகியோருக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை தேவன் தந்தருள; இப்பணித்தளத்தில் ஊழியம் விரிவடைய தேவன் அர்ப்பணமுள்ள ஊழியர்களைத் தந்தருள; கிட்டேபாகா கிராமத்தில் தடைசெய்யப்பட்டுள்ள ஆராதனைக்குழு மீண்டும் துவங்கப்பட ஜெபிப்போம்.

# உத்தராகண்ட்

## பாஸ்பூர்:

**கிறிஸ்டியன் பிரகாஷ் &**
**கோகனி சுமித்ராபேன்**

**துதிக்க:** ஐந்துபேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து சபையில் இணைந்துள்ளனர். விசுவாசி தேஜாசிங்கின் குடிசை விரோதிகளால் தீக்கிரையாக்கப்பட்டது; தேவன் தம் பிள்ளைகளை அற்புதமாய் பாதுகாத்தார். கல்லீரல் வீக்கம் மற்றும் காய்ச்சலினால் அவதிப்பட்ட மோனிகா ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். மிக மோசமான விபத்தை சந்தித்த சுனிலுக்கு தேவன் அற்புதமாய் மறுஜீவனைத் தந்தார். அசுத்தாவியினால் அலைக்கழிக்கப்பட்ட நித்தம் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பன்னகேடா கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட; நிமோனியாவினால் பாதிக்கப்பட்டிருக்கும் மூன்று மாத குழந்தை நெய்டிக் சுகம்பெற; சோனலுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; வயிற்றில் கட்டியினால் அவதியுறும் ரமேஷ் சோபன், கண் பிரச்சனையிலிருந்து மாயா பகன் & ராம்மோலி ஆகியோருக்கு தேவன் சுகமருள ஜெபிப்போம்.

## 8 ஜனவரி
### வியாழன்

### மல்தன்சோர்:
**ஷிஷூ பால் & அனிதா**

**துதிக்க:** புஷ்வாடா என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். பக்வந்த்பூர் கிராமத்தில் சத்சங் கூடுகை நடத்த கர்த்தர் உதவி செய்தார். சபை வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர்ந்து வருகின்றனர். ஜெபத்தின் மூலம் விசுவாசி ஸ்வாதியை தேவன் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதித்துள்ளார். மாலதி, ராணோ கௌர் ஆகியோருக்கு கண் அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜய், கீதா, பிரதாப் சிங், ராஜ் கௌர், சூரஜ், சாரதா ஆகியோர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; பிந்தர்சிங், காளிதாஸ், சேகர், தரம்பால் ஆகியோரை குடியின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவிக்க; அஜய் மற்றும் சாரதா அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; சுதேச ஊழியர் சிந்தர்சிங்கை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

## ஹரியானா

### பர்வாலா:
**மிண்டு குட்டும் & சுப்ராபாக்**

**துதிக்க:** வாலிபர்குழுத் தலைவர்களுக்கான கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். தீய நண்பர்களுடன் சேர்ந்து பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் வாழ்ந்த சஞ்சய்க்காக சபையார் பாரத்துடன் ஜெபத்தபோது சஞ்சய் வாழ்வில் தேவன் மாற்றத்தைத் தந்து தற்போது தொடர்ந்து ஆலயத்திற்கு வரவும், பெற்றோருக்கு கீழ்படிந்து நடக்கவும் தேவன் கிருபை செய்தார். உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த மம்தாவுக்கு சுகப்பிரசவம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக தொண்டை வலியினால் அவதியுறும் விசுவாசி மூர்த்திக்கு தேவன் அற்புத சுகமருள; இருதய நோயிலிருந்து நீலம் சுகம்பெற; மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசி சந்தோஷ்க்கு தேவன் மன சமாதானம் அருளவும், இவரது இரண்டு மகன்களும் தாயுடன் இணைந்து சமாதானத்துடன் வாழவும் ஜெபிப்போம்.

### தோஷம்: அஜய் பர்டே & ஷைதுல்

**துதிக்க:** நடைபெற்ற பெண்கள் முகாமில் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். ஜெபத்தின் மூலம் அஜய் குடும்பம் மீண்டும் இணைந்து வாழ தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் பிடியிலிருந்து பூஜா ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். நான்கு இடங்களில் நடைபெற்று வரும் பெண்கள் ஜெபக்குழுவிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து சுனிதாவுக்கு தேவன் சுகமருள; சபை வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; முகேஷ், பூணம், காந்தா, சுமித்ரா, லக்ஷ்மி, அக்கில் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக்கொள்ள; கடுமையான இக்குளிர் காலத்தில் விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

**9 ஜனவரி வெள்ளி**

## ராஜஸ்தான்

**கேர்வாடா & டிடி: தேபாஷிஸ் ஹெம்ப்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா**

**துதிக்க:** பசந்தி பெனுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவம் அருளினார். கடுமையான வயிற்று வலியிலிருந்து நரேஷ் பாய், மனநோயிலிருந்து சங்கர் பாய், டைபாய்டிலிருந்து தீபிகா பென், ஒற்றைத் தலைவலியிலிருந்து ஷாமு பென் ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். சாலை விபத்தை சந்தித்த விசுவாசி நாராயண் பாயை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். எதிர்ப்புகளின் மத்தியிலேயும் ஞாயிறு ஆராதனை தடையின்றி நடைபெற கிருபை செய்யும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வயிற்று கட்டியிலிருந்து குர்ஜி பென், வாய் புண்ணிலிருந்து ஷாமு பென், உதிரப்போக்கிலிருந்து நானு பென் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; கொஜியா சபையை பொறுபேற்று நடத்த நாராயண் மற்றும் மம்தா முன்வர; மம்தா பெனுக்கு தேவன் சுகப்பிரசவத்தை அருள; சோகன் லால், தீபக் பாய், சங்கர் லால் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; திட்டமிட்டபடி ஊழியங்கள் தடையின்றி நடைபெற; கொஜியா, பட்டியா, படுனா ஆகிய இடங்களில் ஆலயங்கள் கட்ட கிராமத் தலைவரின் அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

## டெல்லி

**பட்பர்கன்ஜ்: ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** மூன்று புதிய தொடர்பாளர்கள் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். சரிகா & இம்மானுவேலின் திருமணம் தேவ நாமம் மகிமைப்படும்படி நடைபெற்றது. அசுத்தாவியின் பிடியிலிருந்து ஷாலுவுக்கு தேவன் விடுதலை அருளினார். ஆலய ஆண்டு விழா சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆஷா சந்தீப், நிக்கி ஆகியோர் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; ஆழ்வர் சிறுவர் விடுதி விரைவில் திறக்கப்பட்டு நமது விசுவாசிகளின் பிள்ளைகள் படிப்பைத் தொடர; கல்யான்புரி, சஜ்வான் நகர் சபைகளைச் சேர்ந்த நமது விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி வளர; தேவன் மீதுள்ள தன்னுடைய விசுவாசத்தை வேல்விழி தைரியமாய் அறிக்கை செய்யவும், அவரது குடும்பத்தினர் அனைவரும் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

### *கண்மணிபோல் காப்பவர்*

*ஹிமாச்சல், ரோஹ்ரு பணித்தளத்தி லுள்ள கோனி கிராமத்தைச் சேர்ந்த நமது சபை மூப்பர் ஜோபன் தாஸ் புல் வெட்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தி புல் வெட்டிக்கொண்டிருக்கும்போது அது அவரது கட்டுப்பாட்டை இழந்து பறந்து அவரது கழுத்தை நெருங்கிவிட்டது. பயத்தில்* ***இயேசுவே காப்பாற்றும்*** *என்று சத்தமிட்டார். தேவன் அவருக்கு எவ்வித சேதமும் அணுகாதபடி அற்புதமாய் பாதுகாத்தார். அல்லேலூயா!*

## 10 ஜனவரி சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாஷ்வா சின்னதுரை S.
திரு. சஞ்ஜீப் ஆனந்த், திரு. பவுலுஸ் பர்ஜோ
திரு. செல்வம் தவமணி, திருமதி. ஹயோஜம் ஹிஜம்
திரு. சாந்தகுமார் J.

## உத்தரப்பிரதேசம்

### சிக்கந்ரா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** திருமணமாகி மூன்று வருடங்களுக்குப் பின் ஜெபத்தின் மூலம் சுனிதா & யோகேஷ் குடும்பம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டனர். 25 கிராமங்களில் பின்தொடர் பணி செய்திட தேவன் உதவி செய்தார். மூன்று இடங்களில் பெண்கள் முகாம் நடத்தவும், நான்கு கிராமங்களில் வேதபாட வகுப்புகள் நடத்தவும் கர்த்தர் உதவி செய்தார். விசுவாசிகளான சர்வணின் மகளுக்கும் மற்றும் அமர்சந்த் மகளுக்கும் தேவன் கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையைத் தந்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பூஜா, மம்தா, குட்டி ஆகியோரின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; மக்தோலி, கோஜாபூல் மற்றும் நினோக்ரா கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் துவங்கப்பட; தர்மேந்திர சிங், அகிலேஷ், நீலம் ஆகியோரின் குடும்பத்தினர் தேவனுக்கு சாட்சியாய் வாழ; ஜெய்வீர், அதர்ஷ் வலிப்பு நோயிலிருந்து சுகம்பெற; நடைபெறவுள்ள பயிற்சிகள், சுவிசேஷ ஊழியங்கள் மிகுந்த பலனைத் தர ஜெபிப்போம்.

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** பணித்தளத்தில் நடைபெற்ற மூன்றுநாள் உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் உற்சாகத்துடன் பங்குபெற்று ஜெபித்தனர். வயலில் வேலை செய்துக்கொண்டிருந்த ராம்பாலை கட்டுவிரியன் பாம்பு கடித்தபோது உடனடியாக மருத்துவ சிகிச்சைக் கிடைத்து சுகம்பெற தேவன் உதவி செய்தார். அர்ஜுவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவம் அருளினார். கர்ப்பப்பை பிரச்சனையினால் அவதிப்பட்ட சோனம் ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சையின்றி சுகம்பெற தேவன் கிருபை செய்தார். இடது கை செயல்படாமலிருந்த யோகேஷ் பாபு ஜெபம் மற்றும் சிகிச்சை மூலம் சுகம் பெற்றார். அசுத்தாவியின் பிடியிலிருந்து சுக்கியா தேவிக்கு தேவன் விடுதலை அருளினார். வாகன விபத்திலிருந்து அனில் மற்றும் புஷ்பாவை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பைசோலி & மெஹனா ஆலயங்கள் விரைவில் திறக்கப்பட்டு ஆராதனை நடைபெற; சுதேச ஊழியரின் மகள் சந்தியாவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; சுதேச ஊழியர் ஷியாம் சுந்தரின் வழக்கு விரைவில் முடிக்கப்பட; மனிஷா மற்றும் மம்தா குடும்பத்தினர் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; பிசாசின் பிடியிலிருந்து சுனில் மற்றும் தீக்ஷாவுக்கு தேவன் விடுதலை அருள; தன் மூத்த மகனை இழந்து தவிக்கும் வர்நாத்க்கு தேவன் மன சமாதானத்தைத் தந்தருள; மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சாரதா மற்றும் நெஞ்சு வலியினால் அவதிப்படும் ஆர்த்திக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெயா ஹெலன் ரோஸ் செல்வகுமார்

### கைம்கஞ்ச்: ஸ்டீபன் ஹன்ஸ்தா & சுபாஷினி முர்மு

**துதிக்க:** சிறையிலிருந்த தரம்வீர் மற்றும் சர்வண்சிங் ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் ஜாமீன் கிடைக்க தேவன் கிருபை செய்தார். மஹாவீரின் மகன் மற்றும் பிங்கியின் திருமணங்கள் ஆசீர்வாதமாய் நடைபெற தேவன் உதவி செய்தார். எதிர்ப்புகளின் மத்தியில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு தேவன் தந்துவரும் பாதுகாப்பிற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூட்டு வலியிலிருந்து விசுவாசி ராஜ் பகதூர் பூரண சுகம்பெற; கல்லீரல் பிரச்சனையிலிருந்து சாந்தினியை தேவன் குணப்படுத்த; பப்லி மற்றும் அஞ்சலிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; வரும் நாட்களில் திட்டமிடப்பட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும், விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

### காட்டாம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** எதிர்ப்பின் மத்தியிலும் புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கின்றனர். ராம்கி, சாஜன் ஆகியோர் தங்கள் உறவினர்கள் மத்தியில் ஒரு வல்லமையுள்ள சாட்சிகளாய் வாழ்ந்து வருகின்றனர். ஆயுஷ், சாஜன், ஷானு, ஷிவ்தேவி ஆகியோரை தேவன் வியாதிகளிலிருந்து குணமாக்கினார். ஜெய்தேவியை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். விசுவாசிகளின் உதவியுடன் காட்டாம்பூர் ஆலயம் பழுதுபார்க்கப்பட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியர் அசோக் குமார் மற்றும் சுரேந்திர குமார் சந்தித்துவரும் பிரச்சனைகளிலிருந்து தேவன் அவர்களை விடுவிக்க; சிருஷ்டி, ராணி, கம்லேஷ் குமாரி, சௌரப் குமார் ஆகியோரை தேவன் வியாதிகளிலிருந்து குணப்படுத்த; காட்டாம்பூர் ஆலயத்தை பழுதுப்பார்க்கும் பணி எவ்வித தடையுமின்றி விரைவில் முடிக்கப்பட; ஊழியர் குடும்பத்தை தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபிப்போம்.

### பஸ்தி: ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** உயர் இரத்த அழுத்தத்தின் காரணமாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட இந்திராவதி ஜெபம் மற்றும் சிகிச்சையின் மூலம் பூரண சுகம்பெற தேவன் உதவி செய்தார். விசுவாசியின் தந்தை ராம்ராஜ் மரிக்குமுன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்தார். எதிர்ப்பின் மத்தியிலும் தேவாபர் கிராமத்தில் ஆராதனை நடைபெற தேவன் உதவி செய்து வருகிறார். பஸ்தி ஆலயத்தில் ஆராதனை நடத்த அனுமதி கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராமத் தலைவராயிருக்கும் விசுவாசியின் மகன் விஷ்நாத் நற்செய்திப் பணிக்கு ஆதரவளிக்க; புதிய கிராமங்களில் தேவன் திறந்த வாசலைத் தந்தருள; பின்தொடர்பணி செய்யப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள விசுவாசிகள் தேவனில் உறுதியாய் நிலைத்திருக்க; ஆலயம் சீரமைக்கப்பட எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற ஜெபிப்போம்.

**12**
**ஜனவரி**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. லவ்லின் புன்யா

## பில்ஹோர்:

**லால் கிஷோர் முர்மு & மார்த்தா சோரேன்**

**துதிக்க:** அநேக வருடங்களுக்குப் பிறகு கர்த்தரின் கிருபையால் விசுவாசி ரேகாவுக்கு குழந்தை பாக்கியம் அருளினார். சோனிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச கூடுகையில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொண்டு தேசத்திற்காக பாரத்தோடு ஜெபித்தனர். கடுமையான குளிரினிமித்தம் பலவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நமது விசுவாசிகளுக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெற; இரண்டு வருடங்களாக வாத நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அதிகம் செலவழித்தும் சுகம் கிடைக்காமலிருக்கும் பினோத் என்பவருக்கு தேவன் அற்புத சுகமருள; வயிற்றில் கட்டியினால் அவதியுற்று வரும் ராஜனுக்கு அறுவை சிகிச்சையின்றி தேவன் அற்புத சுகமருள; சுபம் என்பவருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

## பொக்ராயன்:

**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** சிறுவர்களுக்கு ஒருநாள் முகாம் நடத்த தேவன் கிருபை செய்தார். முழு இரவு ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டு தேசத்திற்காக பாரத்துடன் ஜெபித்தனர். அநேக முயற்சிக்குப்பின் பொக்ராயன் ஆலய நில பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் உதவி செய்தார். எவ்வித தடையுமின்றி பகல் நேர பராமரிப்பு மையத்தை பழுதுபார்க்கும் பணி முடிவடைய தேவன் உதவி செய்தார். நான்கு வருடங்களுக்குப் பின் விகாஷ் & ராணு குடும்பம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டனர். மருத்துவ முகாமில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயத்தின் நிலம் நமது இயக்கத்தின் பெயரில் பதிவு செய்ய எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; மீனாபூரில் நடைபெறும் ஆராதனையில் அனைத்து விசுவாசிகளும் தவறாமல் பங்குபெற; காச நோயிலிருந்து பாக்கியவதி, மனநிலை பாதிப்பிலிருந்து ஷிவானி, இரண்டு கண்களிலும் பார்வையின்றி கஷ்டப்படும் அனில் ஆகியோருக்கு தேவன் சுகமருள; நமது ஊழியத்திற்கும், ஊழியர்களுக்கும், ஆலயக்கட்டுமானப் பணிகளுக்கும் எதிராக செயல்பட்டு வரும் மதவாத சக்திகளிடமிருந்து நமது ஊழியர்கள் மற்றும் ஆலயங்களை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ஷைலன் ஹன்ஸ்தா

# மத்தியப் பிரதேசம்

## உதய்நகர்:

**டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா**

**துதிக்க:** பாலாசி கிராமத்தில் 12 மணி நேர உபவாச ஜெபமும், இம்லிபுரா கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது. விசுவாசி ஜெக்ராம் பாபாவின் சாட்சி அநேகரை உற்சாகப்படுத்தி வருகிறது. பணித்தளத்தில் தேவன் தந்துள்ள அமைதியான சூழ்நிலைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் கட்டுப் பாட்டிலிருந்து அஞ்சுபாய், ராதா பென் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; கடுமையான தொண்டை வலியிலிருந்து மாயா பெனுக்கு தேவன் சுகமருள; நிறுத்தப்பட்டுள்ள ஆராதனைக் குழுக்களை மீண்டும் துவங்க மிஷனெரிகள் எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; நமது விசுவாசிகள் 10 பேர் மீது போடப்பட்டுள்ள நீதிமன்ற பொய் வழக்குகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

# அஸோம்

## கோகாமுக் & தகுவாகனா:

**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** கியான் ஜோதி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டப்பின் கால் வீக்கம் மற்றும் வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றார். ஜெபத்தில் கலந்துகொண்ட ரேணு மோனிக்கு சிறுநீரகம், நரம்பு, மனநல பிரச்சனையிலிருந்தும், பக்கவாதத்தி லிருந்தும் தேவன் சுகமளித்துள்ளார். கும்பாங் கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க தேவன் கிருபை செய்தார். மனநோயிலிருந்து கேசோப் மிலி, மஞ்சள்காமாலையிலிருந்து அந்தூல் காமன் ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். ஆறு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பில்லி சூனிய கட்டினால் பல்வேறு வியாதியினால் அவதிப் பட்டு வரும் ஓரிகாந்தோ காமன் குடும்பத்தினருக்கு தேவன் விடுதலை அருள; மனநோயினால் பாதிக்கப்பட்டு வீதியில் அலைந்து திரியும் மிர்சி போலாங், அசுத்தாவியின் பிடியிலிருந்து உமோகாந்தோ மிலி ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பீனா பெகு, ஜுன்முனி பெகு ஆகியோர் ஆலயத்திற்கு வருவதை தடைசெய்யும் குடும்பத்தினர் மனந்திரும்ப; கும்பாங், சுமோனி மேடோ, பலிகாம், ரேகோம் சப்ரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய; கல்லீரல் பிரச்சனையிலிருந்து தேபேஸ்வர், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து பிம்ரேகோம், வலிப்பு மற்றும் பக்கவாதத் திலிருந்து அல்ஃபா காமன், இரவில் தூக்கமின்றி கஷ்டப்படும் உமோகாந்தோ மிலி ஆகியோருக்கு தேவன் சுகமருள ஜெபிப்போம்.

**14**
**ஜனவரி**
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் ஆபேல் S.

# பீஹார்

## ராணிகஞ்ச் & அரரியா:

**தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி**

**துதிக்க:** நான்கு பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். ராகுல் என்ற குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டிருந்ததால் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு ஜெபித்தனர். தேவன் குழந்தையின் அழுகையை நிறுத்தியதால் பெற்றோர்கள் தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். கட்டியினால் அவதியுற்ற டுடுன் ரிஷிதேவ் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். எழுத்தறிவு பெறாத கஜோல் குமாரி அதிக பிரயாசப்பட்டு வேதம் வாசிக்க கற்றுவருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உள்ளூர் போதகர்களால் தவறாக வழிநடத்தப்படும் விசுவாசிகளை தேவன் பாதுகாத்துக்கொள்ள; அசுத்தாவியின் பிடியிலிருந்து சஞ்சன் தேவிக்கு தேவன் விடுதலை அருள; கொச்காமா கிராமத்து விசுவாசிகள் ஆலய ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்துகொள்ள; புதிய தொடர்பாளரான பப்லு ரிஷிதேவ் இரத்த வாந்தியிலிருந்து சுகம்பெற; நிலப்பிரச்சனையை சந்தித்து வரும் சந்தன் ரிஷிதேவ் மற்றும் பின்டு ரிஷிதேவுக்கு தேவன் உதவி செய்ய; அனாரிதேவிக்கு தேவன் சுகப்பரசவம் அருள; ரங்குடாகா, மாதேபுரா கிராமங்களில் விரைவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

## முரளிகஞ்ச்:

**ஜீவானந்தன் & ஜோஷ்பின் ஷீபா**

**துதிக்க:** சொந்தமாக அரிசி ஆலைக்கான இயந்திரம் வாங்க சஞ்சய் பஸ்வானுக்கு தேவன் உதவி செய்தார். ஜெபத்தின் மூலம் பீர்பால் குமார் தோல் தொற்றி லிருந்து சுகம்பெற்றார். புதிய தொடர் பாளர்களான சந்தோஷ் ரிஷிதேவ், பிரிஷ்பதி ரிஷிதேவ், சுகினிதேவி, ராஹித் குமார் ஆகியோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு வருடங்களாக மூல வியாதிக்கு சிகிச்சைப் பெற்றும் குணமாகாத சுனி தேவிக்கு தேவன் அற்புத சுகமருள; பஞ்சாப் மாநிலத் திற்கு வேலைக்கு சென்றிருந்த அஜய் ரிஷிதேவ் ஆறு மாதங்களாக குடும்பத்துடன் தொடர்பின்றி இருக்கிறார். அவர் பத்திரமாக வீடு திரும்ப; பரிமளா தேவி மற்றும் கோலியா தேவி சபை காரியங்களில் உற்சாகத்துடன் பங்குபெற; கஞ்சன் தேவியின் கணவர் இரட்சிக்கப்பட; ஊனமுற்ற குழந்தையின் எதிர்காலத்தைக் குறித்து மிகுந்த மனவேதனைப்படும் திரௌபதிக்கு தேவன் ஆறுதலை தந்து குழந்தையை குணப்படுத்த ஜெபிப்போம்.

## 15 ஜனவரி
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுகந்தி சாலமோன்

### சாட்டாபூர்:
### பவார் தினேஷ்பாய் & பாருட் சீலாபாய்

**துதிக்க:** 9 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து சபையில் இணைந் தனர். பூஜா தேவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவம் அருளினார். இரண்டு புதிய கிராமங்களை சுவிசேஷத்தால் சந்திக்க தேவன் உதவி செய்தார். ஊழியர்களையும், விசுவாசிகளையும் கொடிய குளிர் காலத்தின் வியாதிகளுக்கு தப்புவித்து பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உடல் முழுவதும் பருக்களால் அவதிப்படும் கென்டுலா தேவியை தேவன் குணப்படுத்த; ஆறு வருடங்களாக குழந்தை பாக்கியத் திற்காக காத்திருக்கும் ராதா தேவிக்கு தேவன் இரக்கம் பாராட்ட; சரீரம் மற்றும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ள சுமேர் குமாருக்கு தேவன் அற்புத சுகமருள; நான்கு மாதங்களாக வயிற்று வலி மற்றும் வீக்கத்தினால் அவதியுறும் ஜித்தேந்தர் ரிஷிதேவை தேவன் குணமாக்க; சில மாதங்களாக கழுத்து வலியினால் கஷ்டப்படும் பிரகாஷ் யாதவ்க்கு தேவன் பூரண சுகமருள; ரேணு குமாரி, சிம்பில் குமாரி, நீரஜ் குமார் ஆகியோருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

### கஸ்பா:
### ஆனந்தன் எம். & நிஷா

**துதிக்க:** ஜீனி கிராமத்தில் நான்கு பேர் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து சபையில் இணைந்துள்ளனர். ஆறு கிராமங்களில் பின்தொடர்பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஹர்தா கிராமத்தில் மூன்று வயது குழந்தை குஷி குமாரி நதியில் விழுந்து சுயநினைவை இழந்தவளாய் மீட்கப்பட்டாள். நமது புதிய தொடர்பாளரான ராஜுவின் குடும்பத்தினார் அவளுக்காக ஜெபித்த போது குழந்தை சுயநினைவு பெற்று சுவாசிக்க ஆரம்பித்தாள். இதை கண்ட அவளது பெற்றோர்கள் தேவனை விசுவாசித்து வருவதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராணா, பிரதாப், ரிஷி மற்றும் காஜால் தேவி ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து சாட்சியாய் ஜீவிக்க; இதயப் பிரச்சனைக்கு சிகிச்சைப் பெற்று வரும் அஹியா தேவிக்கு தேவன் பூரண சுகமருள; ராஜுவின் மகன்களான விக்ரம் குமார், விகாஷ் குமார், அனுகுஷ் குமார் மற்றும் ராஜுவின் சகோதரர் பிரேம்ஜித் ரிஷி ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; தொடர்ந்து ஆராதனையில் பங்குபெறும் பிரீத்தி தேவி மற்றும் சுமான் ரிஷிக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள ஜெபிப்போம்.

**16**
**ஜனவரி**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. தெபொரா ரோஸ்லின் அருள்ராஜ்

# ஜார்க்கண்ட்

## தீன்பஹார்:

### நெகேமியா & அனாமிகா பெகு

**துதிக்க:** காணாமல்போன விசுவாசியின் மகன் கிருஷ்ணா சிங்கிற்காக ஜெபித்தபோது மறுநாள் காவல் துறையினரால் மீட்கப்பட்டு பத்திரமாக வீடுவந்து சேர தேவன் உதவி செய்தார். இவ்வருடம் விசுவாசிகளின் வயல்களில் தேவன் நல்ல விளைச்சலை தந்தருளினார். இப்பணித்தளத்தின் நற்செய்தி பணியாளர்கள் அருகிலுள்ள மாநிலத்திற்குச் சென்று படக்காட்சி ஊழியம் செய்துவர உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போதைக்கு அடிமைப்பட்டுள்ள மங்ரு முண்டா, தஸ்ரத் டிர்கே, ஹரிபால் கால்கோ ஆகியோரை தேவன் விடுவிக்க; அரசாங்க பணி செய்யும் நமது விசுவாசிகளான கோபால் டோபோ, ஹரிராம் டிர்கே, அசோக் லக்ரா ஆகியோர் தேவனுக்கு சாட்சியாய் ஜீவிக்க; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ராகுல் மின்ச், காளி மின்ச், துள்சி டோபோ ஆகியோர் மனந்திரும்ப; உறவினர் குடும்பத்தில் சமாதானம் ஏற்படுத்த சென்ற அனில் முண்டா சந்தித்து வரும் பிரச்சனையிலிருந்து விடுபட தேவன் அவருக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.

## நகர் உண்டாரி::

### பிபின் பிஹாரி பிரதான் & ஜரானா பரிச்சா

**துதிக்க:** டைபாய்ட் மற்றும் மலேரியாவிலிருந்து சபை மூப்பர் பிரேமன் புண்யாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். திட்டமிட்டப்படி அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். விபத்தினால் அதிக காயமுற்று சுயநினைவை இழந்திருந்த சந்தா தேவி சபையாரின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். நெல் அறுவடைக்காக வெளியிடங்களுக்கு சென்றிருந்த துள்சிதாமர் கிராம விசுவாசிகள் பூச்சி கடியினால் பாதிக்கப்பட்டபோது ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று பத்திரமாய் வீடு வந்து சேர உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முழுநேர ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்துள்ள சுசிதா காசிக்கு குடும்பத்தினரின் அனுமதி கிடைக்க; விடுதிப் பிள்ளைகளான ஆரியன், தீபக், ஆலோக், ராகஷ், ரஞ்ஜித், கார்த்திக், விராட், சந்தியா, சிவம் காசி ஆகியோர் படிப்பில் சிறந்து விளங்க; அல்கார் மற்றும் துள்சிதாமர் ஆலயங்களின் கட்டுமானப்பணி எவ்வித தடையுமின்றி விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## 17 ஜனவரி சனி

### படிடோலா:
### சுந்தர் துரை & மெல்பின் ரெஜினி

**துதிக்க:** அனைத்து திருச்சபைகளிலும் அறுப்பின் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. பகல்நேர பராமரிப்பு மையத்தில் இரண்டு நாட்கள் சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. மஞ்சு முர்மு மூன்று வருடங்களாக தீராத வியாதியினால் படுத்தபடுக்கையிலானார், விசுவாசிகள் அவருக்காக ஏறெடுத்த தொடர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். மங்கள் ஹன்ஸ்தாவுக்கு தீவிபத்தினால் கையில் பெரிய காயம் ஏற்பட்டு சிகிச்சைப் பெற்றும் சுகமாகாத நிலையில் விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். தாவுது முர்முவின் குடும்பத்தை விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்குள்ள கிராமத் தலைவர்கள், மந்திரவாதிகள் இரட்சிக்கப்பட; படகாட்சி குழு மற்றும் நாடகக்குழு மூலமாக அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு மக்கள் தேவனை ஏற்றுக்கொள்ள; விசுவாசிகளுக்கு இடையூறாக இருக்கும் முன்னாள் சுதேச ஊழியர் சஞ்சய் டுடு மனந்திரும்ப; குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் விசுவாசிகளுக்கு தேவன் புத்திர பாக்கியம் அருள; இங்கு பணிசெய்யும் ஒன்பது சுதேச ஊழியர் குடும்பங்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

### ராம்கார்:
### லெட்கோலுன் பெய்ட் & ஹட்நெய் கிம்

**துதிக்க:** இரண்டு நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். 16 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். சிலாபட்டி ஹெம்ரோம் மற்றும் நரேந்தர் ராய் டைபாய்டு மற்றும் மஞ்சள்காமாலையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து பங்கஜ் டுடு & மினு முர்மு ஆகியோருக்கு தேவன் விடுதலை அருளினார். எட்டு பேர் தேவனுடைய மந்தையில் இணைந்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மல்மாலா, ரியால்டி, கருடி ஆகிய கிராமங்களில் விரைவில் ஆலயம் கட்டுவதற்கு நிலம் கிடைக்க; காச நோயிலிருந்து மஞ்சு ஹன்ஸ்தா, சந்தன் முர்மு, வலிப்பு மற்றும் இரத்த சோகையிலிருந்து சாமுவேல், சுஷில் ஹெம்ரோம், மனநிலை பாதிப்பிலிருந்து பிரேம்லால் டுடு ஆகியோர் சுகம்பெற; பில்லிசூனிய கட்டிலிருந்து சித்தாரி டுடு மற்றும் பாஹா டுடுவையும், அசுத்தாவியின் பிடியிலிருந்து ரூப்லால் ஹன்ஸ்தா மற்றும் மஹாபூல் முர்முவையும் தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## 18 ஜனவரி ஞாயிறு

**மஹாரோ: இம்மானுவேல் கார்த்தி & ஜோதி லக்ஷ்மி**

**துதிக்க:** உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட விசுவாசி மண்டு புஜாரின் பாட்டி ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வீடு தீரும்பினார். சபை மூப்பர் மிருலால் பஹாடியாவையும், அவளது மகள் ஹரினா குமாரியையும் பாம்பு கடியிலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். நாளா குண்டகித், ம சிலியா ஆகிய கிராமங்களில் எவ்வித எதிர்ப்புமின்றி சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை அருளினார். மூன்று வருடங்களாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பினோத் தாஸ் ஜெபத்தின் மூலம் நடக்க ஆரம்பித்துள்ளார். பால்கி மற்றும் அசன்ஜோர் கிராமங்களில் மூன்று நாள் உபவாச ஜெபக்கூடுகை நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெற்றோரையும், குடும்பத்தையும் குறித்து பொறுப்பற்று வாழும் தேவன்தார் புஜார் மனந்திரும்ப; கிராமத்தினரால் மற்றும் உறவினரால் உபத்திரவங்களை சந்தித்து வரும் விசுவாசி வாகீல் புஜாருக்கு தேவன் பாதுகாப்பையும், தைரியத்தையும் அருள; கிறிஸ்துவின் நிமித்தம் குடும்பத்தினரால் பகைக்கப்படும் விசுவாசி தித்து புஜாரின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; மனநல பிரச்சனையிலிருந்து ராஜேந்தர் புஜார், தொழு நோயிலிருந்து சுமன் புஜார் & மலோட்டி தேவி ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; ஆறு மாதங்களாக காதுவலியினால் கேட்கும் திறனை இழந்துள்ள கேசவதி தேவிக்கு தேவன் பூரண சுகமருள; மதுபன், பெலியாசோலி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

**கரோனி & மால்பஹாடியா விடுதி: ஏல்முல்வார் சுவப்னில் ராமலு & தட்வி மனிஷா**

**துதிக்க:** மஞ்சள் காமாலை மற்றும் டைபாய்டினால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்த ருத்னி மஹாராணிக்கு தேவன் அற்புத சுகமருளினார். பப்லு டெஹ்ரி & முனி மஹாராணியின் குடும்பப் பிரச்சனையை தேவன் நீக்கி சமாதானம் அருளினார். பக்கவாதத்திலிருந்து மனோஜ் டெஹ்ரி சுகம் பெற்றுள்ளார். காலில் ஏற்பட்ட காயத்தினால் கடுமையான வலியில் அவதிப்பட்ட பூணம் தேவிக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மும்பைக்கு வேலைக்காக சென்ற இடத்தில் காணாமல்போன டப்ளு டெஹ்ரி பத்திரமாக வீடு திரும்ப; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் கிராமங்களான உதல்பானி, பிஜைபூர், சிஹிலிபோனா, மட்காவ், பூலோபானி, பத்தன்பஹாரி, மஜ்பாரா, கருநடி, காகர் ஆகியவற்றின் கிராமத் தலைவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கருடி கிராமத்தில் விரைவில் ஆலயக் கட்டுமானப்பணி துவங்கப்படவும், உண்மையாக பணிசெய்யும் ஒப்பந்தகாரர் கிடைக்கவும் ஜெபிப்போம்.

**19 ஜனவரி திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் தனசிங் R.

# மேற்கு வங்காளம்

## மால்டா:

### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** அரோட்டி பஹாரியா மற்றும் சோனா முனி பஹாரியாவை மஞ்சள்காமாலை மற்றும் டைபாய்ட் காய்ச்சலிலிருந்து தேவன் குணமாக்கினார். அசுத்தாவியின் பிடியில் சிக்கியிருந்த பச்சு டுடுவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை தந்தார். பிமோல் மார்டி சிறுநீரகப் பிரச்சனை நீங்கி சுகம்பெற்றார். ஜட்டாகுன்டி ஆலயத்திற்கு மின்சார இணைப்பு கிடைக்க தேவன் உதவி செய்தார். இவ்வருடம் விசுவாசிகளுக்கு செழிப்பான அறுவடையை அருளிச்செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனில் பஹாரியா, சோனிராம் பஹாரியா, லோலிடா பஹாரியா, சுக்கு பஹாரியா ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சித்தல்பூர் கிராமத்தில் வசித்து வரும் நமது விசுவாசிகளின் வீடுகள் அரசு நிலத்தில் கட்டப்பட்டு உள்ளதால் தற்போது பீஹார் அரசால் வீடுகள் இடிக்கப்டும் அபாயத்தில் உள்ளது. தேவன் நமது விசுவாசிகளின் வீடுகளை பாதுகாக்க; பிஜோய், சவ்ரியா, அபினாஷ் மார்டி, ரத்தன் ஆகியோருக்கு காவல் துறையில் வேலை கிடைக்க; குளிர் காலத்தில் விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

## இட்டாஹார்:

### சாலமோன் ஏ & சுகந்தி

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் நடைபெற்ற படக்காட்சி ஊழியத்தின் மூலம் அநேகர் கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். இரண்டு கிராமங்களில் வாலிபர் கூட்டமும், இரண்டு இடங்களில் முழுஇரவு ஜெபமும் நடைபெற்றது. முன்றிமுர்முவை மரணப் படுக்கையிலிருந்து தேவன் காப்பாற்றினார். வயலுக்குச் செல்லும் வழியில் பெரிய கொம்புகளுடைய காளை மாடு மிரி முர்முடிவை முட்டித் தள்ளியபோது இயேசுவே காப்பாற்றும் என்று சத்தமிடவே அவளை அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்திராசோல், டாகர்நங்கி ஆகிய கிராமங்களில் தேவன் திறந்த வாசலைத் தந்தருள; உத்தர் தினாஜ்பூர் மாவட்டத்தில் தேவன் மாபெரும் அறுவடையைக் கட்டளையிட; சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; திலீப் முர்மு, கன்டன் ஹெம்ரோம், பிஹாரி முர்மு ஆகியோர் விசுவாச பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்ப; சுதேச ஊழியர்கள், சபை மூப்பர்கள், தன்னார்வ ஊழியர்கள், சிறு ஜெபக்குழுத் தலைவர்கள் யாவரும் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

## 20 ஜனவரி
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. செலினா மராண்டி ரபீந்திர முர்மு

# சத்தீஸ்கார்

### தப்காரா & லுடேக் விடுதி:
**அருண்குமார். ஜி & சாரதி**

**துதிக்க:** எதிர்ப்பின் மத்தியிலும் ஐந்து கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். நாகாவன்சி மற்றும் யாதவ் மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கவும், புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும் தேவன் உதவி செய்தார். குமன்சியா கிராமத்தில் முதல் விசுவாசியான சிவனாத் காச நோயினால் அவதிப்பட்டு படுக்கையிலிருந்த அவருக்கு தேவன் பூரண சுகமருளினார். சிறுவர் ஊழியம் சிறப்பாக நடத்திட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அறுவடை நாட்களில் வேலை பளுவின் மத்தியிலும் விசுவாசிகள் ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்து கொள்ள; ஊழியத்தை விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகள் மிகுந்த பலனைத் தர; சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட சர்கா, ஹௌராடான், சுல்ஹாபானி, டோடிடான், மரோல் ஆகிய கிராமங்களில் மக்கள் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வ மென்று அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

### பத்தல்காவ்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** தேடுவோர் முகாமில் கலந்துகொண்டோரில் இருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அமாபள்ளி, சுக்ராபாரா, மடுவாடல், பாசேன், பாரிஸ்டன் ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் கூடுகை ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்தார். மக்காபூரில் ஆலயக் கட்டுமானப்பணி தடையின்றி நடைபெற்று வருவதால் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு மாதங்களாக பக்க வாதத்தினால் அவதிப்பட்டு வரும் நிர்மலா லக்டா, புற்றுநோயினால் அவதியுற்று வரும் ஹர்ஜீத் மற்றும் மஹார்சாய் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து பாராஸ் விடுதலை பெற; ஒருமாதமாக காய்ச்சலினால் கஷ்டப்படும் சாந்திக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

### காட்கோரா: வால்வி தினா தானா & புசாரே ஷைலா சிந்தாமண்

**துதிக்க:** மூன்று நாட்கள் உபவாச கூடுகை, சபை மூப்பர் பயிற்சி, இரவுக் கூடுகைகள் சிறப்பாக நடைபெற்றன; சபை மூப்பர் பயிற்சி முகாமில் எதிர்ப்புகளின் மத்தியில் சபையை எவ்வாறு நடத்திச் செல்வது என்பதைக் குறித்து திட்டமிட தேவன் உதவி செய்தார். புதிதாக இரண்டு குடும்பங்கள் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரகாஷ் & சரிதா ராஜ் ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; வலிப்பு நோயிலிருந்து சரிதாவுக்கு தேவன் சுகமருள; அனில், தர்ஷன், திலீப் ஆகியோரை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; கட்கோரா பகுதி யில் பெருகிவரும் எதிர்ப்புகள் மறைய; புதிய விசுவாசிகள் எதிர்ப்பைக் கண்டு பயப்படாமலிருக்க; எதிர்ப்பு தெரிவிக்கும் சந்தோஷ், சாஹு, லக்ஷ்மண், ஸ்ரீவாஸ், ராணா முகர்ஜ் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; அமாபானி கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

**21**
**ஜனவரி**
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமலதா டேனியல் தாமஸ்
செல்வி. சாந்தி முர்மு

## பாலோடா பஜார்:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** காயிர்காட் மற்றும் சரோட்டி கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன; முடியாடி, காயின்டா, குல்குல் ஆகிய கிராமங்களில் படக்காட்சி ஊழியம் செய்திட தேவன் உதவி செய்தார். சாரதா சாஹூவை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். பத்து கிராமங்களில் பின்தொடர்பணி செய்ய உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதுகெலும்பு தேய்மானம் மற்றும் யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மிஷனெரிக்கு தேவன் பூரண சுகமருள; விசுவாசி ராம்சரணை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலைத் தர; காணாமல் போன நந்தினி பத்திரமாய் திரும்பி வர; அசுத்தாவியின் பிடியிலிருந்து அங்கூஸ், ஆயுஸ் ஆகியோர் விடுதலை பெற; கம்ஹரியா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; கடுமையான எதிர்ப்புகளை சந்தித்து வரும் செம்கிராடி மற்றும் சர்கோர் கிராமத்து விசுவாசிகளை தேவன் பெலப்படுத்தவும், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

# ஒடிசா

### ஜகன்நாத்பூர்: பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ

**துதிக்க:** பல்வேறு இடங்களில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மூன்று பேர் கிறிஸ்துவில் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். அடிக்கடி மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டாலும் நமது சுதேச ஊழியர் கனஷியாம் சிங்கு ஊழியத்தை உற்சாகத்துடன் செய்து வருகிறார். இஸ்மாயில் சிங் வியாதியினால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டபோது விசுவாசிகளின் ஜெபத்தினால் பூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவன் மீதுள்ள விசுவாசத்திற்காக பொய் குற்றம் சாட்டப்பட்டு நீதி மன்ற வழக்குகளை சந்தித்து வரும் நமது விசுவாசிகளான பிஜய் டிரியா, கணுலகூரி, சுக்ராம் போபோங்கா, டேவிட் போபோங்கா, சன்னி போபோங்கா ஆகியோருக்கு தேவன் நீதி செய்ய; சரண்டா வனப்பகுதியில் வாழும் சந்தால், ஹோ, கோப் லோஹார், ஒடியா பழங்குடியின மக்களை நக்ஸலைட்களிடமிருந்து தேவன் பாதுகாக்க; முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் ஒஷ்னா சித்து அடிக்கடி பெலவீனப்பட்டு வருகிறார், தேவன் அவருக்கு பூரண சுகமருள; காச நோயிலிருந்து டுகுட் சட்டார், ஜக்மோகன், பிங்குவா, டுரிகக்ராய் ஆகியோரையும், பக்கவாதத்திலிருந்து ஜஸ்மதி லகூரியையும், மூளை மலேரியாவிலிருந்து பாலு சுரேன், பிர்லு சுரேனையும், வலிப்பு நோயிலிருந்து சுக்லால் லகூரியையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## 22
## ஜனவரி
வியாழன்

### பிஜடாலா:
**ஷிவ்சங்கர் & காந்தி தேவி**

**துதிக்க:** இரண்டு மாதங்களாக நடக்கமுடியாமல் வியாதிப்பட்டிருந்த ஷிபா முர்முவுக்கு தேவன் அற்புத சுகமளித்ததால் அவரது முழு குடும்பமும் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். உபவாச ஜெபத்தின் மூலம் குடிக்கு அடிமைப்பட்டிருந்த ரகுநாத் பாஸ்கி விடுதலை பெற்றதினால் அவரது குடும்பத்தினர் தேவனை விசுவாசித்து வருகின்றனர். மார்பக புற்றுநோயிலிருந்து சர்பா டுடு ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்த எட்டு பேருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்கள் தங்கள் சபை விசுவாசிகளை ஆவிக்குரிய வாழ்வில் உற்சாகத்துடன் வழி நடத்திச்செல்ல; மனநோயிலிருந்து சம்பா நாயக், காசநோயிலிருந்து சல்கே சோரன், வயிற்று வலியிலிருந்து பூல்முனி டுடு ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; பிஜடாலா பணித்தளத்திலுள்ள 143 கிராமங்களிலும் சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட; புதிய விசுவாசிகள் ஜெபம் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

## குஜராத்

### சொரம்பா & கடோட்:
**புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா**

**துதிக்க:** ராகிபுரா ஆலயத்தைச் சேர்ந்த அஷ்மிதா நமது இயக்கத்தில் முழுநேர மிஷனெரியாக இணைந்துள்ளார். வாலிபர் கூடுகையில் கலந்துகொண்டோரில் 17 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். இரண்டு கிராமங்களில் நடைபெற்ற இயேசு திரைப்படம் மூலம் அநேகருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அரோனா, நன்சாடு, சாம்புரா, டேலட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி ஆஸ்துமாவினால் அவதிப்படும் சம்பா பென் பூரண சுகம்பெற; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள சில விசுவாசிகளின் குடும்பங்கள் அதிலிருந்து விடுபட; சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்த அனுமதி கிடைக்க; புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; வாலிபர்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிடவும், அவர்களுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 23 ஜனவரி வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மேத்யூ K.
திரு. குமார் V.

### கப்ராடா:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா, சூரஜ்முக்கி, ஷீலா ஹன்ஸ்தா**

**துதிக்க:** சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து பானி என்ற சகோதரிக்கு தேவன் சுகமருளினார். ஆலயம் வருவதை விட்டுவிட்ட சஞ்சய் ஜெபத்தின் மூலம் மீண்டும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்கிறார். தொழுநோயிலிருந்து சிகிசாவுக்கு தேவன் அற்புத சுகமருளினார். விஷப்பாம்பு கடியிலிருந்து ரமேஷை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நெஞ்சு வலியினால் கஷ்டப்படும் கோபி, இதய நோயினால் அவதியுறும் சில்பா, கால் வலியிலிருந்து சுனிதா, மூன்று வருடங்களாக நடக்க முடியாமலிருக்கும் ரீட்டா, ஒன்பது மாதங்களாக வயிற்று வலியினால் கஷ்டப்படும் அனிதா ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; நான்கு வருடங்களாக பேச முடியாமலிருக்கும் ஜோஹானின் வாயின் கட்டுகள் அவிழ்க்கப்பட ஜெபிப்போம்.

### போடோலி & தபோய்:

**ஏசுபாபு & உஷா**

**துதிக்க:** விபத்தினால் பாதிக்கப்பட்ட கான்ஜிபாய் மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் படுத்த படுக்கையானார், அவருக்கு சுவிசேஷம் அறிவித்து தொடர்ந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகமருளினார். சிக்கில்செல் நோயினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமலிருந்த ராகேஷுக்கு தேவன் பூரண சுகமருளினதோடு ஐந்து வருடங்களாக குழந்தையில்லாத அக்குடும்பத்திற்கு குழந்தை பாக்கியமும் அருளி ஆசீர்வதித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பப்பையில் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்றும் பலனின்றி கஷ்டப்பட்டு வரும் மஞ்சுளாவுக்கு தேவன் அற்புத சுகமருள; தங்கள் மகனை இழந்துத் தவிக்கும் விசுவாசி அமர்சிங் பாய் குடும்பத்திற்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் தந்தருள; விபத்தினால் தாடை எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள 10 வயது சங்கருக்கு தேவன் சுகமருள; மழையினால் விசுவாசிகளின் வயல்நிலங்கள் சேதமடைந்துவிட்டது. எனவே மீண்டும் கடன் வாங்கி பயிரிட்டுள்ள அவர்களுக்கு இரட்டத்தணையான அறுவடையை தேவன் அருள ஜெபிப்போம்.

**24**
**ஜனவரி**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் ஜங்கய் தௌங் கான் காப்

## உம்மர்காம்:

### ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** ஜரோலி கிராமத்தில் சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றது. ஜெபத்தின் மூலம் சுமித்ரா பெனுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோன விசுவாசிகள் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். ஜரோலி மற்றும் மாலவ் கிராமங்களில் பின்தொடர்பணி செய்ய உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உப்லெட், போர்மால், போரவ் ஆகிய கிராமங்களில் நற்செய்திப் பணிக்கு நிலவி வரும் எதிர்ப்புகள் மறைய; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; சுதேச ஊழியர்கள் முகேஷ் பாய், ராமண் பாய், தீலிப் பாய் ஆகியோரின் குடும்பங்களை தேவன் அசீர்வதிக்கவும், அவர்களை ஊழியத்தில் தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

## கவாண்ட்:

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கு நடத்தப்பட்ட சட்டம் குறித்த ஆலோசனை வகுப்புகள் பிரயோஜனமாக அமைந்தது. நடைபெற்ற வாலிபர் முகாமில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மூன்று மாதங்களாக செயலிழந்த பயேனா பெனின் கை உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது நன்றாக செயல்பட ஆரம்பித்தது. ஆண் குழந்தை இல்லையென்று கேவாலி பெனின் கணவர் இரண்டாம் திருமணம் செய்ய தீர்மானித்த நிலையில் சபையார் அவளுக்காக ஊக்கமாய் ஜெபித்தபோது தேவன் அவளுக்கு ஆண் மகனைத் தந்து ஆசீர்வதித்ததால் அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாத்வாட் கிராமத்தினர் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக கூடியக் கூட்டத்தில் அரசு சலுகைகள் மறுக்கப்படவேண்டும் என்றும், அவர்களது குடும்ப நிகழ்ச்சிகளில் யாவரும் கலந்துக்கொள்ள கூடாது என்றும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள் பவர்களை அடிக்க வேண்டு மென்றும் தீர்மானங்கள் எடுத்துள்ளனர். செலக்டா மற்றும் டுதாவி கிராமங்களில் கிறிஸ்தவர்களை அடித்து துன்புறுத்தி யுள்ளனர். எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி தேவனின் அன்பினால் தொடப்பட; விபத்தினால் தலையில் பலமாக அடிப்பட்டுள்ள ஷைலா பாய், மூளை பாதிப்பிலிருந்து பஹேலியா பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## 25 ஜனவரி ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆஸ்நாத் தேவதாஸ்
திருமதி. மார்கரெட் முத்தையா சாமுவேல்
திருமதி. ஜெயா ரூபி சாலமோன்
திருமதி. கிருபாசனம் ஸ்டெல்லா ஆண்ட்ரூஸ்

### அஹ்வா & பிப்பள்வாடா:

**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்**

**துதிக்க:** 9ஆம் வகுப்பு படிக்கும் விசுவாசியின் மகன் பிரின்ஸ் ஹாக்கி விளையாட்டில் மாநில அளவிற்கு தகுதிப்பெற்றுள்ளான். ஆபேல் பாயை பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். நான்கு வயதாகியும் நடக்க இயலாமலிருந்த பிளஸ்ஸி ஜெபத்தின் மூலம் நடக்க ஆரம்பித்துள்ளாள். வாலிபர் முகாமில் சுமார் 300க்கும் அதிகமானோர் கலந்துகொண்டு பயன்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியினால் அவதியுறும் ரவீனாவுக்கு தேவன் விடுதலை அருள; டெங்கு காய்ச்சலிலிருந்து சபை மூப்பர் சீதாராம் பாய் மற்றும் சிக்கில் செல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிஷாலி பென் சுகம்பெற; கால் எலும்பு முறிவினால் ஐந்து வருடங்களாக நடக்க முடியாமலிருக்கும் பிரீத்திற்கு தேவன் அற்புத சுகமருள; மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள மந்திரவாதி பண்டுபாய் சுகம்பெறவும், அதன் மூலம் அக்கிராம மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா:

**டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** நித்தின் பாயை மின்னல் தாக்காதபடி தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். விஷப்பாம்பு கடியிலிருந்து பாலு பாய், ரமிலா பென், சாக்ரு பென், சாயா பென் ஆகியோரை தேவன் பாதுகாத்தார். சாலை விபத்திலிருந்து மகேஷ் பாய், அகிலா பென், தேஜஸ் ஆகியோரை தேவன் பாதுகாத்தார். வாசோனா ஆலயம் சார்பாக ஒரு மிஷனெரியைத் தாங்க தேவன் உதவி செய்துள்ளார். அசுத்தாவியின் தொந்தரவினால் தூங்கமுடியாமல் கஷ்டப்பட்ட ஜன்காய் பென்னுக்கு ஜெபத்தின் மூலம் விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவாசப் பிரச்சனையிலிருந்து ரமேஷ் பாய், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து பின்டு பாய், இருதய நோயிலிருந்து ஜானி பென், வாய் புற்றுநோயிலிருந்து ஜானு பாய், மகேஷ் பாய், சுரேஷ் பாய், பக்கவாதத்திலிருந்து குல்பி பென், ராமே பென், புனி பென் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; சுதேச ஊழியர் யசோதாவை சிக்கல்செல் வியாதியிலிருந்து தேவன் சுகப்படுத்த; புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

**26**
**ஜனவரி**
**திங்கள்**

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ஜாண் தினேஷ் G.M.

# மகாராஷ்டிரா

## தலோடா:

### பரணிதரன் & செல்வராணி

**துதிக்க:** ஐந்து வருடங்களாக கால் வலியினால் அவதியுற்ற பத்மாபாய் ஆலயம் வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தை அருளினார். ரீயா என்ற குழந்தை ஜெபத்தின் மூலம் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற்றது. இரவில் மூச்சுத் திணறலினால் அவதியுற்ற மகேஷ்வரிக்கு அவளது பெற்றோர் எண்ணெய் பூசி விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுக மருளினார். இரண்டு கிராமங்களில் நடத்தப்பட்ட ஜெபக்கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு முதன்முறையாக நற்செய்தி கேட்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நெஞ்சு வலியினால் பல சிகிச்சைகள் பெற்றும் சுகம் கிடைக்காத நிலையில் தற்போது ஆலயத்திற்கு வரும் ஆஷா பெனுக்கு தேவன் பூரண சுகமருள; குடிப்பழக்கத்திலிருந்து ராகேஷுக்கு தேவன் விடுதலை தர; கேவ்டி கிராமத்தில் விசுவாசிகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து வருவோர் மனந் திரும்ப; தன் மனைவியை ஆலயம் செல்லவிடாமல் தடைசெய்யும் செய்சிங் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; அம்பாபானி கிராமத்தில் வசிக்கும் பட்டில்பாடா மக்கள் மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டு ஜீவனுள்ள தேவனை விசுவாசிக்க; பூவாணியின் கணவர், சந்திப் அர்ஜுன் மற்றும் ஜம்னிபாயின் சகோதர சகோதரிகள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## சுர்கானா:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** ஹனுவத்மால் கிராமத்தில் விசுவாசிகளை மிரட்டி, சபை மூப்பரை அடித்தபோதும் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாயிருக்கின்றனர். ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு அநேக வருடங்களாக சிகிச்சைப் பெற்றும் சுகம் கிடைக்காத நிலையிலிருந்த துளசிராம், பத்து மாதங்களாக கால் வீக்கத்தினால் அவதியுற்ற அம்பி பென் ஆகியோர் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது தேவன் அவர்களுக்கு பூரண சுகமருளினார். கத்ருண்டி கிராமத்தில் புதிய ஆராதனைக்குழுத் துவங்க கிருபை செய்துள்ளார்; டிண்டோரி பணித்தளத்தில் இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகளான துள்சிராம், சத்துராம் மற்றும் கல்பனாவை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; நிர்குல்பாடா, கெருடா கிராமங்களில் காணப்படும் எதிர்ப்புகள் மறைய; 12 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் நவீன் குடும்பத்திற்கு தேவன் புத்திர சந்தானம் அருள; ரன்ஜுனே கிராமத்தில் அனைத்து கிறிஸ்தவ குடும்பங்களும் தவறாமல் ஆராதனையில் பங்குபெற; பூஜாரி பிரபாகர் டும் மனந்திரும்ப; பாம்பு கடியினால் மூன்று மாதங்களாக காலில் வீக்கம் மற்றும் புண்களால் அவதிப்பட்டு வரும் சபை மூப்பர் ரூபனுக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## 27
## ஜனவரி
### செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பித்திகா பிபாபா பானி

### தடுகோன்: எபிநேசர் சாமுவேல் & ஜோஸ்னா ஜெயராணி

**துதிக்க:** நிகிடி, திர்ஷ்மால், காஜர்கேடி ஆகிய கிராமங்களிலுள்ள நமது விசுவாசிகள் பலரை பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். இரத்தசோகையினாலும், அசுத்தாவியினாலும் பாதிக்கப்பட்டிருந்த பூகிபாய்க்கு தேவன் சுகமும், விடுதலையும் கட்டளையிட்டார். விஷப்பாம்பு கடித்து சரீரம் முழுவதும் நிறம் மாறி, வாயி லிருந்து இரத்தம் வெளியேறி மரிக்கும் நிலையிலிருந்த பிக்கரியாவை விசுவாசிகள் மற்றும் ஊழியர்களின் ஜெபத்தின் மூலம் தேவன் காப்பாற்றினார். அநேக வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டு, ஆடையின்றி அலைந்துகொண்டிருந்த நானாதாதாவுக்காக ஜெபித்தபோது அவர் விடுதலை பெற்று தற்போது ஆலய ஆராதனையில் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நல்வாணி மற்றும் செலஹாரா சபைகளில் உள்ள சமாதான குறைச்சல் கள் நீங்கி விசுவாசிகள் ஒருமனதுடன் தேவனை ஆராதிக்க; அடிக்கடி பாம்பு தனது வீட்டிற்குள் வருவதால் பயத் தோடிருக்கும் அஞ்சா தாதாவை தேவன் பாதுகாக்க; கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினிமித்தம் குடும்பத்தினர் மற்றும் உறவினரால் பகைக்கப்படும் ரேணு பாய்க்கு தேவன் உதவி செய்ய; தியா என்ற பச்சிளம் குழந்தைக்கு தலையிலுள்ள வீக்கம் குணமாக; புதிய விசுவாசியின் மகன் கிரணுக்கு (6 வயது) பேசும் திறனை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

### இகத்புரி:
### நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** மூன்று மாதங்களாக சிறுநீரகப் பிரச்சனையினால் கஷ்டப்பட்டு வந்த ரமேஷ்க்காக அவரது மனைவி விசுவாசத் துடன் ஜெபித்தபோது சிகிச்சையின்றி பரிபூரண சுகம் பெற்றார். விபத்தினால் மூன்று நாட்கள் சுயநினைவிழந் திருந்த பேரனுக்காக விசுவாசி மீராபாய் ஜெபித்தபோது அவனது நினைவு திரும்பி சுகம்பெற தேவன் கிருபை செய்தார். மஞ்சுளா பெனின் படுக்கையிலிருந்த விஷபாம்பிடமிருந்து தேவன் அவரை அற்புதமாய் பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் விமல் பெனின் மகனுக்கு தனியார் கம்பெனியில் வேலை கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு மாதங்களாக உதிரப்போக்கினால் அவதியுறும் ஊர்மிளா பெனுக்கு தேவன் சுகமருள; கிஷான், பாகா பென் மற்றும் லக்ஷ்மி ஆகியோரை இழந்து தவிக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும், பிறந்த மூன்று நாளில் தங்கள் குழந்தையை இழந்து தவிக்கும் சுரேகா & குருநாத்துக்கும் தேவன் ஆறுதலளிக்க; விசுவாசிகளின் பிள்ளைகளான சச்சின், விஷ்ணு, மானிஷா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்திட; வேலை நிமித்தம் வெளியிடங்களுக்குச் சென்றுள்ள விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்க; விசுவாசிகளை திசைத் திருப்பும் கள்ள போதகர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## 28
## ஜனவரி
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜங்கோலுன் தௌதாங்
திருமதி. ஸ்டெஃபி பிஜு லால்
திரு. பாருட் பிரதாப் மாங்யா
திரு. வசந்த குமார்

### தலாசரி:
### கெடாம் ஶ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. 12 வருடங்களாக ஆண் குழந்தைக்காக ஜெபித்த தினேஷ் & கீதா தம்பதியினருக்கு ஆண் குழந்தையைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். எட்டு வருடங்களாக காத்திருந்த ரேணுகா & ஷைலேஷ் குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். அர்ச்சனா மேகாவுக்கு காவல் துறையில் வேலை கிடைக்கும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சஞ்சன், ஜகதீஷ் நாம், சரிதா, ரஞ்சனா, குண்டா திலீப், கோர் கானா, கக்குடா திலீப் ஆகியோரின் குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; உடல் ஊனமுற்ற ஆர்யன், பிரேம், ரீயான்ஸ் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; ஆலய கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பெண்கள் தலைவர்களுக்கான கூட்டங்கள் சிறப்பாக நடைபெற; ஊழியர்கள், சுதேச ஊழியர்களை தேவன் பாதுகாத்து, ஊழியங்களை ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### காண்ட்பாரா & நவாப்பூர்:
### திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** சிச்சாலி கிராமத்தைச் சேர்ந்த மனேஷ் அசுத்தாவியினாலும், இனம் புரியா வியாதியினாலும் பாதிக்கப்பட்டார். மந்திரவாதிகளாலும், மருத்துவ சிகிச்சையினாலும் குணம்பெறாத அவருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். ஒரு மாதமாக நிமோனியா நோயினால் பாதிக்கப் பட்டிருந்த லலிதாவுக்கு தேவன் சுக மருளினார். இருதய அறுவை சிகிச்சைக்குப் பின் தொடர்ந்து நெஞ்சு வலியினால் பாதிக்கப்பட்ட சகன் என்பவருக்காக ஜெபித்தபோது அவருக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒரு வருடமாக பலவித நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள சுமாவுக்கு தேவன் அற்புதம் செய்ய; இரண்டு வருடங்களாக வாய் புற்று நோயினால் அவதிப்பட்டு வரும் ராஜேந்திரா, தொழு நோயிலிருந்து பரம்ஜா, மனநிலை பாதிப்பிலிருந்து மது, சிக்கில்செல் நோயிலிருந்து ரோபேஷ், தொண்டை கட்டியினால் கஷ்டப்படும் இந்திரா பாய், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சோமாஜி, பக்க வாதத்திலிருந்து ராதா ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; அமித் மற்றும் ரிங்கு குடும்பங்கள் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## 29 ஜனவரி
வியாழன்

### மோல்கி:

**ரூபன் டுடு & ருக்மணி ஹெம்ரோம்**

**துதிக்க:** விசுவாசி ஜால்சிங்கின் ஒரு வயது மகனுக்கு வலிப்பு நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். லோங்கா பாய்க்கு சுகப்பிரசவத்தில் இரட்டைக் குழந்தைகளைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். புத்லாபாடா கிராமத்தைச் சேர்ந்த கௌரி பாய்க்கு திருமணமாகி ஆறு வருடங்களுக்குப்பின் கர்ப்பம் தரிக்க தேவன் கிருபை பாராட்டினார். பக்கவாதத்தினால் பாதிக்கப் பட்டு படுக்கையில் இருந்த நவரியாவுக்கு ஜெபத்தின் மூலம் சுகம் தந்து வரும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாக்கு புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள புதிய தொடர்பாளர் பர்கியா அத்தியா என்பவருக்கும், வாய் புற்றுநோய்க்காக சிகிச்சைப் பெற்றுவரும் பெசாகட்ரியா பாட்விக்கும் தேவன் அற்புத சுகமருள; சிக்கிலி பகுதியில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள; மூல வியாதியினால் அவதியுறும் சுதேச ஊழியர் காலுசிங் வசாவேவை தேவன் குணப்படுத்த; விசுவாசி ஊர்மிளா பாய்க்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

## கர்நாடகா

### நிட்குண்டி:

**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** இரண்டு பேர் மறுமலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். விசுவாசியின் மகன் அபிஜித்தின் மருத்துவ படிப்பிற்கு ஒவ்வொரு வருடமும் 4 இலட்சம் கட்டவேண்டிய சூழலில் ஜெபத்தின் மூலம் அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைத்து தற்போது ஒரு இலட்சம் மட்டும் கட்டணம் செலுத்தும்படி தேவன் கிருபை செய்துள்ளார். அசுத்தாவியின் பிடியினால் சிக்கித்தவித்த சுரேகாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். விசுவாசி மீனாவுக்கு அரசாங்க உதவி மூலம் புதிய வீடு கட்ட தேவன் கிருபை செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையி லிருக்கும் சுரேஷ் பூரண சுகம்பெற; 10 வருடங்களாக குடிக்கு அடிமைப்பட்டு குடும்ப சமாதானத்தை கெடுத்து வரும் சித்து மனந்திரும்பி குடியிலிருந்து விடுதலை பெற; மூன்று மாதங்களாக வலது கை & கால்களில் வலியினால் வேதனை அனுபவித்து வரும் துக்கா ராமுக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

### தானியேலின் தேவன்

*குஜராத் மாநிலம், கவாண்ட் பணித்தளத்தி லுள்ள மஹூதாபாரி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி குலாபி பென், தனது மாடுகளை காட்டில் மேய்த்துக்கொண்டிருந்தபோது திடீரென புலி வந்துவிட்டது. **இயேசுவே காப்பாற்றும்** என்று கதறியபோது புலி எந்த சேதமும் ஏற்படுத்தாமல் புதருக்குள் சென்றுவிட்டது. தேவன் அற்புதமாய் அவளையும், மாடுளையும் புலியின் வாய்க்குத் தப்புவித்தார். தானியேலை சிங்கத்தின் வாயினின்று தப்புவித்த தேவன் குலாபி பெனை புலியின் வாய்க்கு தப்புவிக்க வல்லவராய் இருந்தார். அல்லேலூயா!*

## 30
## ஜனவரி
## வெள்ளி

### ஷீராஹட்டி:

**ஆஷா பிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** வைரல் காய்ச்சலிலிருந்து பிரகாஷ் என்பவர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். விசுவாசி ஜோதியின் தங்க நகைகளை மூன்று மாதங்களாகியும் திருப்பித்தர மறுத்த அண்டை வீட்டாருக்காக ஜெபித்தபோது ஒரே வாரத்தில் திருப்பித்தர தேவன் உதவி செய்தார். ஜெபத்தின் மூலம் பக்கிரேஷுக்கு தேவன் நல்ல வேலையைத் தந்தருளினார். தொண்டையில் தொற்று ஏற்பட்டு, சுவாசிக்க சிரமப்பட்ட ஹன்மந்தா ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சையின்றி சுகம்பெற்றார். அசுத்தாவியின் பிடியிலிருந்து சுதாம் மாவுக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ஜோதி, அனிதா, ஆயுஷ், விஜயலக்ஷ்மி, சல்மா ஆகியோரை தேவன் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதிக்க; பக்கவாதத்திலிருந்து ரமேஷ் & ஹேமலதாவையும், நெஞ்சு வலியிலிருந்து நந்தினியின் கணவரையும் தேவன் குணப்படுத்த; விபத்தினால் நெற்றியில் முறிவு ஏற்பட்டுள்ள சந்துரு சேகருக்கு தேவன் சுகம்தர; குடியின் அடிமைத்தனத்திலிருந்து மஞ்சுவுக்கு தேவன் விடுதலை அருள; சந்தரு என்பவருக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தினால் கால் முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சையின் மூலம் காலில் இரும்பு கம்பி வைக்கப்பட்டது. தற்போது உள்ளுக்குள் இரணமாகி காலை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### சதும்:

**அனில் மஹாலி & பிரசாந்தி**

**துதிக்க:** விசுவாசி சரிதாவின் தொண்டை அறுவை சிகிச்சை நல்லமுறையில் முடிய தேவன் உதவி செய்தார். சபை வாலிபன் கிரிபாபுவுக்கு ஜெபத்தின் மூலம் நல்ல வேலை கிடைத்தது. ஆன்லைன் ஜெபத்தில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொள்ள தேவன் உதவி செய்து வருகிறார். அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்திலிருந்து ராஜன்னா, ஜானகி ராம், தொண்டை வலியிலிருந்து ரமணா ஆகியோர் பூரண சுகம்பெற; குடும்பப் பிரச்சனை நிமித்தம் பிரிந்து வாழும் தனம்மா & சாலமோன் இணைந்து வாழ; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ஸ்வரூபா ராணி, கிறிஸ்டல் ஜெபா, ஜெய சன்னி, ஹறிகா ஆகியோருக்கு தேவன் புத்திர சந்தானம் அருள; குடிப்பழக்கத்திலிருந்து ஸ்ரீகாந்த் விடுதலை பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்ரீலதா ஸ்டீபன் ஜெயசீலன்
திரு. பிரதாப் ரஹாங்

# வேதாகம மொழி பெயர்ப்புப்பணி

## குருக்ஸ் வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:

**ஆர். தாமஸ் & ரெஜினி**

**துதிக்க:** கடந்த மாதம் டேராடூனில் நடைபெற்ற நீதிமொழிகள் புத்தக பயிற்சி பட்டறையில் கலந்துகொள்ள மொழிபெயர்ப்பாளர்களுக்கு தேவன் உதவி செய்தார். தற்போது நீதி மொழிகள் மற்றும் சங்கீதம் புத்தகங்கள் திருத்தம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாதம் உடன்படிக்கை என்ற திரைப்படத்திற்கான சில வசனங்களை மொழிபெயர்க்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மொழிப்பெயர்ப்பில் உதவி செய்யும் உள்ளூர் மொழிபெயர்ப்பாளரான பவுலூஸ் மற்றும் மகர்சாய்க்கு தேவன் விசேஷித்த ஞானத்தையும், சுகபெலனையும் தந்தருள; பவுலூஸ் சந்தித்து வரும் நில பிரச்சனையில் தேவன் அவருக்கு நியாயம் வழங்க; குருக்ஸ் மொழி பெயர்ப்பாளரான மிஷனெரி அருள்திரு. தாமஸ் அவர்கள் வால் எலும்பு (Tail Bone) வலியால் அவதிபட்டு வருகிறார். இது அவரது மொழிபெயர்ப்பு பணியை அதிகம் பாதிப்பதால் தேவன் அவருக்கு பூரண சுகமருள; திட்டமிட்டபடி அடுத்த 12 வருடத்திற்குள் பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்புப் பணி முடிவடைய ஜெபிப்போம்.

## தூரத்திற்கும் தேவனானவர்

*மஹாராஷ்டிரா, கட்கி கிராமத்தைச் சேர்ந்த பிலிப் என்பவர் தன் கிராமத்திற்கு மிக தொலைவிலுள்ள ஒரு கம்பெனியில் வேலை செய்து வந்தார். ஒருநாள் திடீரென கடுமையான வயிறு வலி ஏற்பட்டு மயங்கி விழுந்தார். உடன் ஊழியர்கள் பயந்துவிட்டனர். கம்பெனி அதிகாரி அவரது பெற்றோரிடம் தொடர்பு கொண்டு மகனின் நிலையைக் கூறி உடனே வரும்படி அழைத்தார். கம்பெனி மிக தொலைவில் இருப்பதால் அவர்கள் உடனே செல்ல முடியாமல் கர்த்தரை நோக்கி தன் மகனுக்காக கண்ணீரோடு ஜெபித்தனர். மூன்று மணி நேரத்திற்குப் பின் பிலிப் நினைவு திரும்பி சுகம் பெற்றார். அவரது பெற்றோர்கள் ஜெபக்கூட்டத்தில் இச்சாட்சியை பகிர்ந்துகொண்டு தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். தேவன் சமீபத்திற்கு மாத்திரமல்ல, தூரத்திற்கும் தேவனானவர் என்பதை உணர்ந்து அவரைத் துதிப்போம்.*

## மூடப்பழக்கம் மறைய ஜெபிப்போம்

*மஹாராஷ்டிரா மாநிலம், மாஷாவட் பணித்தளத்திலுள்ள அம்பாபானி கிராமத்தில் அனையா என்ற ஒருமாத குழந்தை சுவாசிக்க சிரமப்பட்டபோது பெற்றோர்கள் அக்குழந்தையை அங்குள்ள பூஜாரியிடம் கொண்டு சென்றனர். அவர் குழந்தையின் நெஞ்சில் இரும்பு கம்பியினால் சூடு போட்டார். இதனால் குழந்தை மிகவும் பாதிக்கப்பட்டதால் அக்குழந்தையை அங்குள்ள ஆலயத்திற்கு கொண்டு சென்றனர். விசுவாசிகளும், ஊழியரும் அக்குழந்தைக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பூரண சுகமருளினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!. இந்த 21ஆம் நூற்றாண்டிலும் மூடப்பழக்கத்தில் மூழ்கியிருக்கும் நம் தேச ஜனங்கள் விடுதலை பெற ஜெபிப்போம்.*

# 414 மிஷனரி ஆல்பம்



அருள்திரு. ராம கிருஷ்ணா அக்கிபாடா & திருமதி. அஞ்சலி தேவி பந்துமில்லி

அருள்திரு. ராமகிருஷ்ணா அக்கிபாடா (எலியா) ஆந்திரப்பிரதேசத்தின் மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள ஏலூரில் 05.04.1982 அன்று ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு மூன்று வயது இருக்கும்போது இவரது தந்தை திரு. வெங்கடேஸ்வர ராவ் காலமானார். இவரது தாய் திருமதி. ரங்கம்மா மறுமணம் செய்துகொண்டப்பின் இவர் தனது தாத்தா பாட்டியால் வளர்க்கப்பட்டார். இவரது பாட்டி அடிக்கடி ஜெபக்கூட்டங்களுக்கு செல்வதால் போதகர் ஐ. ஜெயராஜு இவரை தத்தெடுத்து ஆவிக்குரிய வாழ்வில் வழிநடத்தினார். 1995 முதல், இவர் தொடர்ந்து ஜெபக்கூட்டங்களில் கலந்துகொண்டு இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். 24.01.1996 அன்று திருமுழுக்குப்பெற்று எலியா என்ற பெயரைப் பெற்றார். ஆசிரியராக வேண்டுமென்ற நோக்கத்தில் இவர் M.A., B.Ed. முடித்தார். ஆனால் ஆண்டவர் இவரது வாழ்க்கையில் வேறு ஒரு திட்டத்தை வைத்திருந்தார்.சிறுவயது முதல் இரத்த சாட்சிகளின் வாழ்க்கை வரலாறுகளால் இவர் மிகவும் ஈர்க்கப்பட்டு, அவர்கள் கிறிஸ்துவுக்காக துன்பத்தையும், மரணத்தையும் எவ்வாறு ஏற்றுக்கொண்டார்கள் என்று அடிக்கடி சிந்தித்து ஆச்சரியப்படுவார். 2010ஆம் ஆண்டு IEM மாநில மிஷனெரி மாநாட்டின்போது ஏசாயா 41:9-10 வசனத்தினால் தொடப்பட்டு தன்னை முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்தார். மறைந்த திருமதி. சமாதானம்மா மற்றும் மறைந்த திரு. கே. இஸ்ரேல் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட இவர் ஜுன் 17. 2010 அன்று FMPB இல் இணைந்தார். ஒருவருட மிஷனெரி பயிற்சிக்குப்பின் ஜார்கண்டிலுள்ள ஹன்ஸ்டிகா பணித்தளத்தில் வாழும் சந்தால் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். 11.12.2024 அன்று NELC தும்கா திருமண்டலத்தின் மூலம் குருத்துவ அபிஷேகம் பெற்றார்.

சகோதரி அஞ்சலி, மேற்கு கோதாவரி மாவட்டத்தின் குடிபாடுவில் 30.05.1985 அன்று ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார். M.C.A. பட்டம் பெற்ற இவர் பெயரளவில் கிறிஸ்தவராக வாழ்ந்து வந்தார். இவர் ஹைதராபாத்திலிருந்தபோது, யோவான் 3:16 வசனத்தின் மூலம் தேவனுடைய அன்பின் ஆழத்தை உணர்ந்தார். இது இவரது இருதயத்தில் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பியது. “தேவன் தம்முடைய ஒரே மகனை எனக்காகக் கொடுத்திருந்தால், நான் அவருக்காக என்ன செய்கிறேன்?” என்ற கேள்வி ஒருமுறை கூட இயேசுவைப் பற்றி கேள்விப்படாத மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அவரது வாழ்க்கையை அர்ப்பணிக்கத் தூண்டியது. மேலும் அறைகூவல் பத்திரிக்கையைப் படித்ததின் மூலம் பழங்குடியின மக்களைக் குறித்ததான பாரம் இன்னும் அதிகரிக்கவே முழுநேர ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தார்.

02.08.2012 அன்று சகோதரி அஞ்சலி & அருள்திரு. ராம கிருஷ்ணா அக்கிபாடாவின் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப்பின் FMPBஇல் இணைந்து ஒருவருட மிஷனெரி பயிற்சியை முடித்தார். பின் குடும்பமாக 2014-2020 வரை மேற்கு வங்காளத்திலுள்ள சாம்சி பணித்தளத்திலும், பின் இட்டாஹர் பணித்தளத்தின் முன்னோடி மிஷனெரிகளாகவும் ஊழியம் செய்தனர். தற்போது பஹுவாஹாட் பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகின்றனர். இத்தம்பதியினருக்கு தேவன் இரண்டு பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மகன் ஜீவன் பிரின்ஸ் (10.08.2013) 6ஆம் வகுப்பும், மகள் ஜீவன ஆராத்யா (22.01.2016) 4ஆம் வகுப்பும் டோனாவூர் சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இவர்களது ஊழியம் மற்றும் பிள்ளைகளின் படிப்பிற்காக ஜெபிப்போம்.

## 415 மிஷனரி ஆல்பம்



## திருமதி. அனியா டேனியல் வெங்கடேசன் & குடும்பம்

திருமதி. அனியா ஜோஸ்பின், தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் 08.04.1988 அன்று பிறந்தார். அவர் 8 ஆம் வகுப்பு படிக்கும்போது இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று தனது வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தார். 13.06.2007 அன்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் இணைந்தார். குஜராத் மாநிலத்திலுள்ள சில்வாசா மற்றும் கான்வெல் ஆகிய பணித்தளங்களில் தேவனின் பணியைத் துவங்கினார்.

2009, மே 29 அன்று, இவர் திரு. டேனியல் வெங்கடேசனை மணந்தார். குடும்பமாக தேசிய பயிற்சி மையம் (உ.பி. ஜான்சி), ஆசிஃபாபாத் (தெலங்கானா), பந்தர்கோடா (மஹாராஷ்டிரா), நாக்பூர் பணித்தள அலுவலகம் மற்றும் சாந்திபுரம் (ஆந்திரப் பிரதேசம்) போன்ற பல்வேறு பணித்தளங்களில் ஊழியம் செய்து அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்தினர்.

சாந்திபுரம் பணித்தளத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது இவரது கணவர் ஒரு விபத்தை சந்தித்து 02.03.2013 அன்று நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார். அப்போது அனியாவுக்கு 24 வயது. மூன்றுமாத கர்ப்பிணி. பல துயரங்கள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியில், தனது இரண்டு சிறு குழந்தைகளுடன் கண்ணீரின் பள்ளத்தாக்கில் நடந்து சென்ற வேளையில் சகோதரி அனியா தேவனை உறுதியாகப் பற்றிக்கொண்டார். அவர் 9 ஆண்டுகள் நமது இயக்கத்தின் இளைஞர் பிரிவு மற்றும் கேரீத் பத்திரிக்கை பிரிவிலும், 3 ஆண்டுகள் முன்னேற்றப்பணி ஊழியத்திலும் அர்ப்பணிப்புடன் பணி செய்தார். தற்போது இவர் சென்னையிலுள்ள நமது இயக்கத்தின் விருந்தினர் விடுதிக்கு பொறுப்பாக இருக்கிறார்.

அவரது மகன் பிராண்டன் டேனியல் (03.08.2013) பிறக்கும்போதே ஹைட்ரோகெபாலஸ் என்ற பிரச்சனையினால் பாதிக்கப்பட்டான். 8 வயதில் அவன் பக்கவாதத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டு பேசும் மற்றும் சாப்பிடும் திறனை இழந்தான். அவனுக்கு எட்டு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன, மேலும் இரண்டு ஷண்ட்கள் செருகப்பட்டன. மருத்துவர்கள் நம்பிக்கையை இழந்தபோதும் பலரின் ஜெபத்தினால் ஆண்டவர் அவனை அற்புதமாக குணப்படுத்தினார். இன்றும் கற்றல் குறைபாடு மற்றும் டிஸ்லெகஸியா போன்ற சவால்களை அவன் சந்தித்து வந்தாலும் தொடர்ந்து கர்த்தரின் கிருபையால் வளர்ந்து வருகிறான்.

10ஆம் வகுப்பு படிக்கும் அவரது மகள் கிராஸ்பி எபினிஷா (24.04.2010), தனது தாய்க்கு ஒரு பெரிய பலமாக இருந்து நம்பிக்கையையும், தைரியத்தையும் கொடுத்துவருகிறாள்.

சமீபத்தில் சகோதரி அனியா முதுகுதண்டுவட அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இவர் தற்போது கழுத்து எலும்பில் தேய்மானம் மற்றும் கடுமையான முதுகுவலி பிரச்சனைக்கு சிகிச்சைப் பெற்று வருகிறார். சரீர பெலவீனம் மற்றும் துன்பங்களுக்கு மத்தியிலும், எந்த குடும்ப ஆதரவும் இல்லாமல் தேவனுக்குள் மகிழ்ச்சியுடன் சாட்சியாக வாழ்ந்து வருகிறார். “நான் இன்று நிற்கிறேன் என்றால், அது தேவனின் கிருபையால் மட்டுமே. அவர் என்னை ஒருபோதும் விட்டுவிலகவில்லை, என்னை கைவிடவுமில்லை” என்று அறிக்கை செய்கிறார்.

உலகம் நம்மைக் கைவிட்டாலும் இயேசு ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார் என்பதற்கு இவரது வாழ்க்கை ஒரு பலமான சாட்சியாகும். சகோதரி அனியா மற்றும் பிள்ளைகளை நம் ஜெபத்தில் நினைவுகூறுவோம்.







***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***